


இன்ப நிலையம்
தியாகராயநகர்-சென்னை

முதற் பதிப்பு : ஏப்ரல் 1949.
உரிமை பதிவு

விலை ரூ. 1-12-0

நேஷனல் ஆர்ட் பிரஸ், சென்னை 18

# முன்னுரை

இந்திய சுதந்தரப் போரில் குமரி முதல் இமயம் வரையுள்ள மக்கள் செய்த தியாகம் கொஞ்சமன்று. என்றாலும் அந்த விடுதலைப் போரில் தமிழர் காட்டிய வீரம், எல்லா வகையாலும் தனிப்பட்டதாகும். இந்திய சுதந்தரப் போரை முதன் முதல் துவக்கிவைத்தவர், சிறப்பாகத் தமிழ்நாட்டவரே யாவர். திருநெல்வேலி ஜில்லாவில் பாஞ்சாலங்குறிச்சி எனும் சின்னஞ்சிறு பாளையப்பட்டார்தான் முதன் முதலில் ஆங்கில ஆதிக்கத்தை எதிர்த்துப் போர் துவக்கினர்.

1798-ம் ஆண்டில் துவங்கி 1801-ம் ஆண்டின் இறுதி வரை, அதாவது நான்கு ஆண்டுகள் பாஞ்சாலங்குறிச்சியாருக்கும், கிழக்கிந்தியக் கம்பெனி வெள்ளையருக்கும் கடுமையான போர் நடைபெற்றது. வீரபாண்டியக் கட்டபொம்மன் நிகழ்த்திய அப்போர், சிம்மாசனத்தைக் காப்பாற்றிக்கொள்ள அல்ல; செந்தமிழ் நாட்டின் சுதந்தரத்தைப் பாதுகாக்கவே யாகும்.

'சிப்பாய்க் கலகம்' என்று சொல்லப்படும் சுதந்தரப் புரட்சியிலிருந்துதான் இந்திய விடுதலைப் போர் துவங்கியதாகப் பல அரசியல் வாதிகள் எண்ணுகின்றனர்; வரலாற்று ஆசிரியர்களும் அப்படியேதான் எழுதிவைத்திருக்

கின்றனர். இந்திய சுதந்தரப் புரட்சியை விரிவாக எழுதிய வீர சவர்க்காரும், வடக்கே சிப்பாய்கள் செய்த புரட்சியைத்தான், சுதந்தரப் போரின் துவக்கமாகக் குறிப்பிடுகிறார். அந்தச் சுதந்தர யுத்தத்திற்கு 1806-ம் ஆண்டில் தெற்கே வேலூரில் நடந்த, சிப்பாய்களின் புரட்சியே ஒத்திகையாக இருந்ததென்றும் கூறுகின்றார். உண்மை என்னவென்றால், பாஞ்சாலங் குறிச்சியில் துவங்கிய விடுதலைப் போரின் அடுத்த கட்டம்தான் வேலூர் சிப்பாய்கள் புரட்சி. இந்த இரண்டும் நடந்து ஓய்ந்த ஐம்பது ஆண்டுகளுக்குப் பிறகு அதாவது 1857-ல்தான் வடக்கே சிப்பாய்கள் புரட்சி நடைபெற்றது.

எனவே, இந்திய விடுதலைப் போரின் வரலாறு பாஞ்சாலங் குறிச்சியில் கட்டபொம்மன் நடத்திய வீரப் போரிலிருந்துதான் துவங்குகின்றதென்பதில் ஐயமில்லை. ஆனால், பாஞ்சாலங் குறிச்சிப் போரைப்பற்றிய செய்திகளை வேங்கடத்திற்கு வெளியேயுள்ள இந்தியரில் எவரும் அறிந்திலர். வேங்கடத்திற்குத் தெற்கேயுள்ள தமிழகத்திலுங் கூட ஒரு சிலர்தான் பாஞ்சாலங் குறிச்சிப் போரைப்பற்றி அறிவார்கள். அதிர்ஷ்டவசமாகத் தென்பாண்டி நாட்டுக் கிராமங்களில் உள்ள சாதாரண மக்கள் வீரபாண்டியக் கட்டபொம்மன் நிகழ்த்திய புரட்சிச் செயல்களை இன்னமும் போற்றி வருகின்றனர். கட்டபொம்மன் வரலாறு தெருக்கூத்தாக நடத்தப்படுகிறது.

வீரபாண்டியனின் வரலாறு இதுவரை பல அறிஞர்களால் எழுதப்பட்டிருக்கிறது. திருவாளர்கள் எஸ். தேவதாஸ் நாயுடு, கவிராஜ பண்டித ஜெகவீரபாண்டியனார், திரு. தி. நா. சுப்ரமணியம் ஆகியோர் எழுதிய நூல்கள்

குறிப்பிடத்தக்கவை. அவர்களுக்குத் தமிழகம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறது

சம்பவங்களைத் தொகுத்துக் கூறும் வரலாற்று நூலாகமட்டுமல்லாமல், வீரபாண்டியக் கட்டபொம்மனை தமிழ் இனத்தின் தனிப்பெரும் வீரனாக - இந்திய சுதந்தரப் போரில் முதற்பலியான தியாகியாக - அறிமுகப் படுத்துவதே இந்நூலை எழுதியதன் கருத்து.

வீரபாண்டியக் கட்டபொம்மனின் வரலாறு 'தமிழ் முரசு' வார இதழில் தொடர்ந்து வந்ததைத் தொகுத்து சிற்சில திருத்தங்களுடன் இந்நூலை உருவாக்கியுள்ளேன். இதை வெளியிட முன்வந்த 'இன்ப நிலைய'த்தாருக்கு என் அன்புகலந்த நன்றி. தமிழருக்கு இனஉணர்ச்சி ஊட்டி, புதிய தமிழகத்தை உருவாக்கத் துணைசெய்யும் பல அரிய நூல்களை வெளியிட்டுவரும் இன்ப நிலையத்தாருக்குத் தமிழகமும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளது.

ம. பொ. சிவஞானம்

சென்னை
13—4—49

# பதிப்புரை

அடிமை என்பதே இன்னதென் றறியாது அரசு செலுத்தி வந்த தமிழகத்தில், நாடோடிகளாய் வாணிபஞ் செய்யவந்த வெள்ளையர் வரிவசூலிக்கும் எசமானராக மாறிய முதற் கட்டத்திலேயே, வரி செலுத்த மறுத்து வீரப் போர் துவங்கியவன் தென் பாண்டிநாட்டில் பாஞ்சாலங்குறிச்சி வேந்தன் வீரபாண்டியக் கட்டபொம்மன் ஆவான். ஆங்கிலேயரை எதிர்த்து இந்தியாவிலேயே முதன் முதலில் போர் துவக்கிய பெருமை தமிழ் நாட்டிற்கே உரிமையாகும். ஆனால், அதை இதுவரை எந்த வரலாற்று ஆசிரியரும் எடுத்துக் கூறவில்லை.

எந்த நிகழ்ச்சியையும் தமிழன் என்ற இன உணர்ச்சியுடன் ஆராய்ந்து, அதைத் தெளிவாக—உரிமையாக—வீரமாக வெளியிடும் திறமை மிக்கவர் ம. பொ. சிவஞானம் அவர்கள். அதே கண்ணோட்டத்துடன் தான் வீரபாண்டியக் கட்டபொம்மனின் வரலாற்றையும் எழுதியுள்ளார்.

வரலாற்றை மிகைபடக் கூறாமல் உள்ளபடியே உரைப்பதில் சிறப்பு வாய்ந்தவர் ம. பொ. சி. அவர் எழுதிய "கப்பலோட்டிய தமிழன்" என்னும் வீரர் வ. உ. சிதம்பரனாரைப் பற்றிய வரலாற்று நூல் தமிழ் மக்களால் பெரிதும் பாராட்டப்படுவதே தக்க சான்றாகும்.

"சுதந்தரப் போரில் தமிழகம்"—"கப்பலோட்டிய தமிழன்"—"வீரபாண்டியக் கட்டபொம்மன்" போன்ற நூல்களை வெளியிடுவதன் மூலம் தமிழ் நிலத்தில் வாழையடி வாழையாகத் தோன்றிவந்த வீரப் பெருமக்களின் வரலாற்றை தமிழ் மக்களுக்கு அறிவிக்கும் வாய்ப்பை எங்களுக்கு அளித்த ம. பொ. சிவஞானம் அவர்களுக்கு எங்கள் உளம் நிறைந்த நன்றி.

**சோம. சுவாமிநாதன்**
இன்ப நிலையம்

13—4—49
சென்னை



# வீரபாண்டியக் கட்டபொம்மன்

தமிழகம், வீரத்தின் விளைநிலம் இங்கு வாழையடி வாழையாக வீரப் பெருமக்கள் பலர் தோன்றி தொட்டு இன்றுவரை தோன்றிவருவது உலகறிந்த உண்மை. அந்த வீரப் பெருமக்கள் வரிசையிலே பாஞ்சாலங்குறிச்சி கட்டபொம்மனும் ஒருவனாவான்.

"கட்டபொம்மு" என்பது குடும்பப் பெயர் வீரபாண்டியன் என்பதே, அவனது பெற்றோரிட்ட இயற்பெயர். எனவே, அப் பெருமகனை "வீர பாண்டியனை" என்ற பெயராலேயே அழைப்போமாக.

வீரபாண்டியன், பிறந்த நாட்டால் தமிழன்; பேசும் மொழியால் தமிழன்; வாழ்க்கை நெறியாலும் தமிழன். என்றாலும், அவனது மூதாதையர் ஆந்திரரே யாவர். வடக்கே, பெல்லாரி ஜில்லாவில் பஞ்சம் வாட்டியதன் காரணமாக அங்கிருந்து வெளியேறி, தெற்கே திருநெல்வேலி ஜில்லாவில், சாலிகுளம் என்னும் சிற்றூரில் குடியேறினர் பால்ராஜா எனும் ஆந்திரர். இவர் குடியேறிய காலம், கி. பி. பதினோராம் நூற்றாண்டு எனபர் வரலாற்று அறிஞர்கள்.

பஞ்சத்திற்கு அஞ்சி தமிழகத்தில் தஞ்சம் புகுந்த பால்ராஜாவை, அந்நியரென்று தமிழர்கள் அடித்து விரட்டவில்லை. விருந்தோம்பும் பண்பால் வரவேற்று வாழ்வளித்தனர். பால்ராஜாவின் மகன் 'பொம்மு' என்பவன் சாலிகுளத்தை அடுத்துள்ள "அழகிய வீரபாண்டியபுரம்" எனும் ஊரையாண்டுவந்த ஜகவீர பாண்டியனின் தளபதியானான். பகைவரை ஒடுக்குவதில் அவனுக்கிருந்த திறமையை மெச்சி, உற்றார் உறவினர் அவனைக் "கெட்டிபொம்மு" என்று அழைக்கலாயினர். அந்தத் தெலுங்குப் பெயரே நாளடைவில் கட்டபொம்மன் எனத் தமிழ் மொழியில் திரிந்து வழங்கலாயிற்று.

ஜகவீர பாண்டியன், தனது அந்திய காலத்தில் மைந்தனில்லாக் காரணத்தால் ஆதிக் கட்டபொம்மனையே அரசனாக்கி மறைந்தான். தமிழ் மூவேந்தரில் பாண்டிய மன்னர் மரபில் வந்தவனே ஜகவீர பாண்டியன். அப்படியிருந்தும், அவன் தனது படைத் தலைவனான ஆதிக் கட்டபொம்மனிடமிருந்த அன்பு காரணமாக அவன் ஆந்திரன் என்பதையும் கவனியாமல் அரசுரிமை வழங்கினான். கம்பளியும் கைத்தடியுமாகக் கன்னித் தமிழகத்தை நோக்கி வந்த பால்ராஜாவின் மகன், அரசாளும் வேந்தனானான்.

ஆதிக் கட்டபொம்மன், தனக்கு அரசுரிமை கிடைத்ததும், ஆந்திர நாட்டுக்குச் செய்தி யனுப்பி தன் இனத்தவர் பலரைத் தருவித்துப் பாஞ்சாலங்

குறிச்சியில் குடியேறச் செய்தான். விஜயநகரம், விசாகப்பட்டினம், கஞ்சம் முதலிய ஆந்திர ஜில்லாக் களிலிருந்து பல குடும்பங்கள் அணியணியாகப் புறப்பட்டு வந்து தென்பாண்டி நாட்டில் குடியே றினர். இவ்வாறு நாடோடிகளாய் வந்தவர்களில் பலர் தமிழகத்தின் சிற்றரசர்களாயினர். இன் றுள்ள எட்டயாபுரம் அரசரும் ஆதியில் குடி யேறிய ஆந்திரர்களின் பரம்பரையைச் சேர்ந்த வரே யாவார்.

ஆதிக் கட்டபொம்மன், ஒருநாள் படைவீரர் பலருடன் சாலிகுளத்தை அடுத்துள்ள காட்டில் வேட்டையாடச் சென்றான். அங்கே அவனது ஏழு வேட்டைநாய்களும் முயலொன்றை விரட்டிச் சென் றன. அந்த நாய்களுக்கு அஞ்சி ஓடிக்கொண் டிருந்த முயல், குறிப்பிட்ட ஒரு இடத்தை அடைந் ததும், திடீரென்று திரும்பி, ஏழு நாய்களையும் எதிர்த்து விரட்டியது. அந்த விந்தையைக் கண் டான் ஆதிக் கட்டபொம்மன். வெருவியோடும் முய லுக்கும் வீரமூட்டும் சக்தி அந்த நிலத்திற்கு இருப் பதை அறிந்து வியந்தான். அங்கேயே கோட்டை கொத்தளங்களுடன் தனது தலைநகரை அமைக்க வும் திட்டமிட்டான். அவ்வாறு அமைத்த நகரத் திற்கு, "பாஞ்சாலன்" என்னும் தனது பாட்டனின் நினைவுக்கறிகுறியாக பாஞ்சாலங் குறிச்சி எனப் பெய ரிட்டான்.

ஆதிக் கட்டபொம்மனுக்குப் பின் பாஞ்சாலங் குறிச்சித் தலைவர்களாக வந்த எல்லோருக்குமே,

"பொம்மு" என்பது மரபுப் பெயராக வழங்கலாயிற்று. இந்த அரச மரபில், 47-வது வேந்தனாக வந்தவனே நமது வீரபாண்டியக் கட்டபொம்மன்.

வீரபாண்டியன், 1760-ம் ஆண்டு ஜனவரி மாதம் மூன்றாம் நாள் ஜகவீரக் கட்டபொம்மன் என்ற தந்தைக்கும், ஆறுமுகத்தம்மாள் என்ற தாய்க்கும் மகனாகப் பிறந்தான். இவனுக்குப் பின்னர் தளவாய் குமாரசாமி, துரைச்சிங்கம் என்ற தம்பியர் இருவர் பிறந்தனர். வீரபாண்டியனை கறுத்தையா என்றும், தளவாய் குமாரசாமியை சிவத்தையா என்றும், துரைச்சிங்கம் செவ்வையாய்ப் பேசும் திறனற்றிருந்ததால், அவனை ஊமைத் துரை என்றும் மக்கள் அழைக்கலாயினர். வீரபாண்டியன் காளைப் பருவத்தை அடைந்ததும் பெற்றோர், வீரசக்கம்மாள் என்ற மங்கையை அவனுக்கு மணஞ் செய்து வைத்தனர். மற்றும் சௌந்தரவடிவு, ஞானமுத்தம்மாள் என்ற கன்னியரிருவரை முறையே சிவத்தையாவுக்கும் ஊமைத்துரைக்கும் உரிமையாக்கினர்.

# ஆங்கிலேயர் ஆதிக்கம்

வீரபாண்டியன், 1790-ம் ஆண்டு பிப்ரவரி 2-ந் தேதி, பாஞ்சாலங் குறிச்சியின் மன்னனானான். அப்போது அவனுக்கு வயது முப்பது. வீரபாண்டியன் காலத்தில் தென்னாடு முழுவதும் ஆற்காடு நவாபின் அதிகாரத்தி லிருந்தது. குறுநில மன்னர்களெல்லோரும் அவருக்குக் கப்பம் செலுத்தவேண்டுமென்பது சம்பிரதாயம். ஆனால், பெருவாரியான குறுநில மன்னர்கள் கப்பப் பணத்தைச் சரியாகக் கட்டுவதில்லை. வற்புறுத்தி வாங்கும் வலிமையும் நவாபுக்கு இல்லை. அவர் தென்னாட்டின் பேரரசர் என்பதெல்லாம் பெயரளவில்தான். சிற்றரசுகளெல்லாம் சுதந்தரமுள்ள தனியரசுகளாகவே திகழ்ந்தன.

இங்கிலேயில், வாணிபம் செய்வதற்காகத் தமிழகத்தில் முகாமடித்திருந்த கிழக்கிந்தியக் கம்பெனியாரிடம் 1792-ம் ஆண்டில் ஆற்காடு நவாப் ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டார். தான் முன்னர் பெற்றிருந்த கடனுக்காக, குறுநில மன்னர்களிடமிருந்து கப்பப் பணத்தை வசூலித்துக்கொள்ளும் உரிமையைக் கிழக்கிந்தியக் கம்பெனியாருக்கு வழங்குவதே அந்த ஒப்பந்தத்தின் சாரம். இந்தக் காலத்

தில்தான் வாணிபம் செய்ய வந்த ஆங்கிலேயர், வரி விதிக்கும் அதிகாரிகளாக மாறினர். நாளடைவில், ஆற்காடு நவாப் தன்வசமிருந்த அரசியல் அதிகாரங்கள் அனைத்தையுமே ஆங்கிலேயரிடம் ஒப்படைத்துவிட்டு, " அரசர் " என்ற பெயரில் வெறும் அலங்கார பொம்மையாக இருந்து வந்தார்.

ஆற்காடு நவாப் தந்த அதிகாரத்தைப் பயன்படுத்திக்கொண்டு ஆங்கில நாடோடிகள், 'வரி வசூல்' என்ற பெயரால் தென்னாட்டின் செல்வத்தைக் கொள்ளையிடத் துவங்கினர். உழவர்களின் நிலங்களை அளவு (செட்டில்மெண்டு) செய்து வரி விதித்த பின்னர், குறுநில மன்னர்களின் கப்பப் பணத்தையும் அதிகமாகக் கட்டாயப்படுத்தி வசூலிக்கலாயினர். அந்நாளில் குறுநில மன்னருக்கெல்லாம் 'பாளையக்காரர்' என்ற பட்டம் வழங்கி வந்தது. எட்டயாபுரம் போன்ற பாளையத் தலைவர்கள் பலர், அறிவு மயங்கி ஆண்மை யிழந்து ஆங்கிலேயருக்கு வரி செலுத்தினர். ஆனல், ஒரே ஒரு பாளையக்காரன் மட்டும் தமிழகத்தின் வீரத்திற்குச் சான்ருக, ஆங்கிலேயருக்குக் கப்பம் செலுத்திக் கைகட்டி வாழ மறுத்தான். அவன்தான் 'கட்டபொம்மன்' என்று அழைக்கப்படும் வீரபாண்டியன். மன்னுதி மன்னரெலாம் தமக்குக் கப்பஞ் செலுத்தி கைகூப்பி நின்றதைக் கண்ணுரக் கண்டவர் தென்னாட்டுப் பாண்டிய மரபினர். அந்த வீர மரபில் வந்த பாஞ்சாலங் குறிச்சி வேந்தன், வயிறு வளர்க்க வந்த அந்நியருக்கு வரி செலுத்த மறுத்தது தமிழ் மரபின் மானத்தைக் காக்கவேயாகும்.

வீரபாண்டியன் வரி செலுத்த மறுத்த செய்தியறிந்த வெள்ளையர், அவனது பாஞ்சாலங் குறிச்சி பாளையத்தைச் சேர்ந்த அருங்குளம், சுப்பலாபுரம் என்ற ஊர்களை, தாம் கூப்பிட்ட நேரத்திற்குக் குற்றேவல் புரியும் எட்டயாபுரத்தோடு இணைத்துவிட்டனர். மற்றும், 'செட்டில்மெண்ட்' செய்வதாகப் பாசாங்கு காட்டி, ஒரு பாளையக்காரனின் நிலத்தை இன்னொரு பாளையக்காரனுக்குத் தானம் செய்து, பிரித்தாளும் சூழ்ச்சி வலையை விரித்து விட்டான் மாக்ஸ்வெல் என்னும் ஆங்கில தளகர்த்தன்.

உரிமையற்ற நிலையில் தனது ஊர்களைக் கவர்ந்ததை அறிந்த வீரபாண்டியன், தனது ஆட்சிக்குட்பட்ட பாஞ்சாலங் குறிச்சி எல்லைக்குள் அந்நியரெவரும் கால்வைக்கக் கூடாதென்று கட்டளையிட்டான். பாவம்! எட்டயாபுர மன்னரால், ஆங்கிலேயரின் தயவால் கிடைத்த ஊர்களில் ஆணை செலுத்த முடியவில்லை!

தமது வஞ்சகச் சூழ்ச்சியால், தமிழ் நாட்டு மக்கள் அனைவரிடமும் வரி வசூலித்து வந்தனர் ஆங்கிலேயர். என்றாலும், வாள்வலி கொண்ட வீரபாண்டியனிடம் மட்டும் வரி வசூலிக்க முடியவில்லை. எனவே, தங்கள் படைபலத்தை எடுத்துக் கூறிப் பயமுறுத்திப் பார்த்தனர்; பலிக்கவில்லை. தங்கள் நல்லெண்ணத்தைக் காணிக்கை யாக்கி நட்பு கொள்ள முயன்றனர்; அதுவும் நடக்கவில்லை. இவ்வாறு 6 ஆண்டுகள் கழிந்தன. கி. பி. 1792-ல் துவங்கிய வீரபாண்டியன் - வெள்ளைக் கம்பெனி சச்சரவு

1798-ம் ஆண்டு வரை சமரசமாக முடியவில்லை. இறுதியில், தங்களுக்குள்ள உரிமையை ஒப்புக் கொள்ளும் முறையில் மிகச் சிறிய அளவில் வரி செலுத்திவந்தாலும் போதுமென்று வீரபாண்டிய னுக்கு விண்ணப்ப மனுப்பினர் வெள்ளையர்.

*" ஒட்டார்பின் சென்றொருவன் வாழ்தலின் அந்நிலையே*
*கெட்டான் எனப்படுதல் நன்று"*

என்ற குறள் நெறி யறிந்தவன் வீரபாண்டியன். எனவே, வஞ்சகருக்கு வரி செலுத்தி வணங்கி வாழ் வதைவிட அவர்தம் வாள் முனைக்கு இரையாவதே நன்றென எண்ணினன் பாஞ்சாலங் குறிச்சி மன் னன் வீரபாண்டியன். ஆலன் என்னும் ஆங்கில அதி காரி, வீரபாண்டியனை அணுகி, "கடந்து போன ஆறு வருடங்களுக்காகமட்டும் 6000 பொன் கொடுத் தால் போதும். அதற்குப் பின் நீங்கள் வாழும் திக்குப் பக்கமே திரும்பமாட்டோம்" என்று நய முடன் கூறினன். அவனது நயவுரை கண்டு நகை புரிந்தான் வீரபாண்டியன். "நாற்பத்தேழு தலை முறையாக நாடாளும் நாங்கள், நாடோடிகளாக வந் தவர்களுக்கு வரி செலுத்துவதா? அது ஒருபோதும் முடியாது" என்று கூறி, வரி கேட்க வந்த ஆலன் துரையின் வாயை அடக்கினன்.

ஆலன் அஞ்சவில்லை. "ஆங்கிலேயரின் பகையை வளர்ப்பதால், பாஞ்சாலங் குறிச்சி அர சுக்கே கேடு நேரும்" எனக் கூறி அச்சுறுத்தி னன். வீரபாண்டியனின் ஆலோசனையாளரில் சிலர் ஆங்கிலேயருக்கு வரி செலுத்தி வாழ்வதே

நல்லதெனக் கூறினர். சுற்றியுள்ள பாளையக் காரரெல்லாம் பணிந்து கொடுத்திருப்பதைச் சுட்டிக் காட்டினர். ஆயினும், சுதந்தர உணர்வுடைய வீரபாண்டியன் ஏற்கவில்லை. பரதேசிகளாக வந்த வெள்ளையர்களுக்குப் பணிந்துகொடுத்தால், உடல் வளர்க்கவந்த அந்த நாடோடிக் கூட்டம் ஊராளும் உரிமை பெற்றுவிடும் என்பதை நன்கு உணர்ந்திருந்தான் வீரபாண்டியன். எனவே, “சரணாகதி” ஆலோசனைகளுக்கு அவன் சம்மதிக்கவில்லை.

தமது முயற்சி எவ்விதத்திலும் பலிக்காததைக் கண்ட வெள்ளையர்கள், பாஞ்சாலங் குறிச்சியானுக்கு உட்பகையைப் பெருக்கினர். அவனது குடிமக்களிலேயே பலரிடம் லஞ்சம் கொடுத்தும், வஞ்சகம் பேசியும் நட்பு கொள்ளலாயினர். இந்தச் சூழ்ச்சிக்கு இரையான பஞ்சாலங்குறிச்சி மக்களில் தீயோர் சிலர், வீரபாண்டியன் மீது பழிகளைப் பரப்பி வந்தனர். அண்டையிலுள்ள எட்டயாபுரத்துப் பாளையக்காரனான எட்டப்ப நாய்க்கனும், வீரபாண்டியனால் தனக்கும் தனது பாளையத்துக்கும் பழுதுநேர விருப்பதாகப் பாசாங்கு செய்து, தன்னையும் தனது பாளையத்தையும் காப்பாற்றும்படி ஆங்கிலேயரிடம் அபயம் புகுந்தான்! வீரபாண்டியன் என்றென்றும் தமக்குப் பணியமாட்டான் என்பதை நன்றாக அறிந்துகொண்ட வெள்ளையர்கள் அவனைச் சண்டைக்கிழுக்கச் செய்த சூழ்ச்சியே இது.

கம்பெனியின் சார்பில் வரி வசூலிக்கும் கலெக்டரான ஜாக்ஸன் என்பான், ஒரு வாரத்திற்

ஞன் தனது இருப்பிடம் வந்து தன்னைக் கண்டு பேசவேண்டுமென இரு தூதுவர் மூலம் வீரபாண்டியனுக்குச் செய்தி யனுப்பினான். செய்திப்படி நடக்க வீரபாண்டியனுக்கு விருப்பமில்லை. ஆயி னும், சுற்றிலுமுள்ள பாளையக்காரரெல்லாம் ஆங்கி லேயருக்கு அடிமைகளாகிவிட்டதால், கலெக்டரைப் பார்ப்பதன்மூலம் பகைமையைக் குறைக்கலாமென நம்பினான். "தனியே சென்று கலெக்டரைச் சந் திப்பதால் தீங்கு நேரும்" என்று ஊமைத்துரை தெரிவித்ததையும் அவன் ஏற்கவில்லை. ஆனால், ஊமைத்துரையின் வற்புறுத்தல் காரணமாகப் படைகள் சூழப் பல்லக்கி லேறிச் சென்று கலெக்டரைக் காண்பதென்று தீர்மானித்தான். 1798-ம் ஆண்டு, ஆகஸ்ட் 24-ந் தேதி தளபதி கள் முன்செல்ல, தம்பிமார் புடைசூழ கலெக்ட ரைக் காணத் திருநெல்வேலி சென்ருன் வீரபாண் டியன்.

கலெக்டர் ஜாக்சன், வீரபாண்டியனை வம்புக் கிழுக்கும் வஞ்சநெஞ்சங் கொண்டவனுதலால், பாஞ் சாலங் குறிச்சியான் திருநெல்வேலியை அணுகும் சமயம் பார்த்து, குற்ருலத்துக்குச் சென்றுவிட் டான்! செய்தியறிந்த வீரபாண்டியன் தனது சுற் றத்துடன் குற்ருலம் விரைந்தான். மீண்டும் அங் கிருந்து பன்னிரண்டு மைல் தூரத்திலுள்ள சொக் கம்பட்டிக்குச் சென்றுவிட்டான் கலெக்டர். வீர பாண்டியனும் சோர்வடையாது சொக்கம்பட்டிக்குச் சென்ருன். அங்கும் கலெக்டரைக் காண முடிய

வில்லை. கலெக்டரின் மொழி பெயர்ப்பாளன், "கலெக்டர் சிவகிரிக்குச் சென்றுவிட்டார். தங்களை அங்கே வரச்சொன்னார்" என்றான். ஜாக்சனின் சதித் திட்டம் வீரபாண்டியனுக்கு விளங்கிவிட்டது. இடம்விட்டு இடம் மாறும் கருத்து, தன்னை அவமானப்படுத்தி அடிமை கொள்வதற்கேயாகும் என்பதை அவன் உணர்ந்துகொண்டான். என்றாலும் ஜாக்சன் சூழ்ச்சியின் முடிவைக் காணும்வரை இல்லந் திரும்புவதில்லை என்ற உறுதிகொண்டு தன்னுடன் வந்திருந்த தம்பியரையும் தளபதிகளையும் மற்றுமுள்ள படைகளையும் நோக்கி, "நீங்களனைவரும் பாஞ்சாலங் குறிச்சிக்குத் திரும்புங்கள். நான் மட்டும் தனியே சென்று கலெக்டர் ஜாக்சனைக் கண்டு வருவேன்" என்று கட்டளை யிட்டான்.

ஜாக்சனின் சதியையும் வீரபாண்டியனின் உறுதியையும் கண்டு, ஊமைத்துரையும் பிறரும் நெஞ்சம் அஞ்சினர். "தனியே செல்வது நன்றன்று. அச்செயல் வெள்ளையன் சூழ்ச்சிக்கே வெற்றி தரும். நாங்களும் உடன் வருகிறோம்; எல்லோரும் சேர்ந்து போகலாம்" என்றனர். அவர்கள் கருத்துக்கு இணங்கி வீரபாண்டியன் சுற்றம் சூழ, சொக்கம்பட்டியி லிருந்து புறப்பட்டு சிவகிரி, வில்லிபுத்தூர், பேரையூர், பாவாலி, பள்ளிமடை, கமுதி முதலிய பல ஊர்களுக்கும் கலெக்டரைப் பின்பற்றிச் சென்று அங்கங்கும் கலெக்டரைக் காணாது, இறுதியாக இராமநாதபுரத்தை யடைந்தான்.

வீரபாண்டியனை வெற்றி கொள்ளும் இடம் அதுவென அறிந்த ஜாக்சன், இராமநாதபுரத்தில் தங்கி அவனுக்குப் பேட்டி தர இசைந்தான். வீரபாண்டியனும், கலெக்டர் ஜாக்சனும் சந்தித்த இடம் சேதுபதி மன்னருக்குச் சொந்தமானதும் அவரது அரண்மனைக்கு அருகிலுள்ளதுமான இராமலிங்க விலாசம் என்னும் மாளிகையாகும். ஜாக்சனின் சதித் திட்டம் அவனது முகாமிலிருந்தே முன்னாள் இரவு வீரபாண்டியனுக்குக் கிடைத்து விட்டது. எனவே, கலெக்டர் இருந்த மாளிகையைச் சுற்றி தன் படை வீரரைக் காவல் வைத்து விட்டு, ஊமைத்துரை யுள்பட மெய்க்காப்பாளருடன் ஜாக்சனைக் காணச் சென்றான். முன்னதாக அறிமுகமில்லாத இருவரின் முதல் சந்திப்பு இது.

தக்க காவலர்களுடன் வீரபாண்டியன் தன்னைக் காண வருவதை அறிந்த ஜாக்சன், மாளிகையின் மேல்மாடியி லிருந்தவண்ணம், 'தனியே வந்தால்தான் பார்க்க முடியும்' என்று ஆள் மூலம் சொல்லி யனுப்பினான். எதிர்பாராத இந்த நிலை கண்டு வீரபாண்டியனுடன் இருந்தோர் மனம் குலைந்தனர். ஆனால், வீரபாண்டியன் அவர்களுக்கு ஆறுதல் கூறி நிறுத்திவிட்டு நெஞ்சமஞ்சாமல், தன்னந்தனியே மேல்மாடி சென்று வெள்ளையனைக் கண்டான்.

வீரபாண்டியனைக் கண்ட வெள்ளையன், மன்னனுக்குரிய மரியாதை செய்யாது, அவன்மீது தயா

ரித்துள்ள குற்றச்சாட்டுகளையெல்லாம் வரிசையாகக் கூறினன். கிழக்கிந்தியக் கம்பெனிக்கு வரி செலுத்தாதது ஒரு குற்றம்! ஆங்கிலேயருக்கு அடி வருடும் எட்டயாபுரம் பாளையக்காரனுக்கு இணங்கி நடவாதது இன்னொரு குற்றம்! கொள்ளை யடிக்க வந்த வெள்ளையரிடம் அனுமதி பெருமல் குடி மக்களிடம் வரி வாங்கியது மற்ருெரு குற்றம்........இப்படி வரிசையாகக் குற்றங்களை அடுக்கிக் கொண்டே போய், இறுதியாக, "கிழக்கிந்தியக் கம்பெனியாராகிய நாங்கள் நவாபுக்குக் கொடுத்த கடனுக்காக நாடாளும் உரிமை பெற்று விட்டோம். ஆகவே, அரைக் கணமும் தாமதமின்றி நீர் எங்களுக்குத் திறை செலுத்தியாக வேண்டும்" என்று கட்டளையிட்டான். வீரபாண்டியன் கணமும் பொருது கலெக்டரைப் பார்த்து, "வரி கொடுக்கும் வழக்கம் எங்கள் வம்சத்திலில்லை. அந்நியனுக்கு அடங்கி வாழ்வது எமது அரச மரபுக்கு இழுக்கு. ஆதலால் வரி கொடுக்க முடியாது" என்று துணிவுடன் கூறினன்.

வீரபாண்டியனின் உறுதி நிலை கண்ட கலெக்டர், "அப்படியானல், உம்மைச் சிறை பிடித்திருக்கிறேன். நீர் இக்கட்டடத்திற்கு வெளியே கால் வைக்கக் கூடாது. இது கிழக்கிந்திய சங்கத்தின் ஆணை" என்று அகம்பாவத்துடன் கூறினன். "பாளையப்பட்டு மன்னன், பரதேசியிடம் சிறைப் படுவதா? அது மானங்கெட்ட செய்கை" என வெகுண்டு கூறி, கட்டடத்தைவிட்டு வெளியேற

முயன்றான் வீரபாண்டியன். அதற்குள் ஜாக்சனின் சதித் திட்டப்படி மாளிகைக்குள்ளே மறைவாகப் பதுங்கியிருந்த படை வீரர்கள், கண நேரத்தில் வீரபாண்டியன் மேல் விழுந்து அவனைக் கட்டிப் பிடிக்க முயன்றனர்.

வீரபாண்டியன் வாட்போரில் வல்லவன். எனவே, தன்மீது பாய்ந்த பகை மல்லர்களில் இருவரை வாளுக்கிரையாக்கினான். எஞ்சிய மல்லர்கள், பாஞ்சாலங்குறிச்சியானின் வாள்முனைக்கு ஆற்றமாட்டாது அஞ்சிப் பின்வாங்கி யோடினர்.

கிழக்கிந்திய கம்பெனியின் துணைத் தளபதியான லெப்டினென்ட் கிளார்க் என்பான், வீரபாண்டியனின் நெஞ்சுரம் கண்டு வஞ்சினம் கொண்டான். தங்கள் சூழ்ச்சித் திட்டமெல்லாம் வீரபாண்டியனின் நெஞ்சுரத்தின் முன்பு நில்லாது போனதைக் கண்டு நெடுமூச்செறிந்தான். எனினும், கொள்ளைக் கூட்டத் தளபதியான அவ்வெள்ளையன் சோர்ந்து விடவில்லை. வீரபாண்டியனை மேலே செல்ல விடாமல் தடுத்து நிறுத்தி சமர் புரிந்தான். சிறிது நேரம் வீரபாண்டியனுக்கும் தளபதி கிளார்க்குக்கும் வாட்போர் நடந்தது. அப்போரில் வீரபாண்டியன், தளபதி கிளார்க்கை வெட்டி வீழ்த்தினான்.

போர் முனையில் பகைவரைச் சந்திக்கும் போதெல்லாம் வெற்றி யன்றி வேறொன்றைக் காணாத பாண்டிய மரபைச் சேர்ந்த வீரபாண்டியன் மண்ணாள நினைத்த வெள்ளையனை மண்ணுக்கிரையாக்கினான்!

ளோர்க் மாண்டதும் அவனது படையினர் வீரபாண்டியன் படையை நோக்கிச் சுட்டதால், பலர் மாள நேர்ந்தது. இது கண்டு மற்றவர்கள் மனங் கலங்கவில்லை; கம்புகளும் வாள்களும் வேல் களும் கொண்டு வீரப் போர் புரிந்தனர். அந்தப் போரில் வீரபாண்டியன் தம்பி ஊமைத்துரை கொண்ட பங்கு கொஞ்சமல்ல. வெள்ளையரை எதிர்த்து அவன் வாய் பேசவில்லை; ஆனால், அவனது வாள் பேசியது! ஊமைத்துரையின் எண்ணத்தை வெளியிடும் ஒரே கருவி, அவனது உடைவாளேயாகும்.

இந்தப் போரில் ஈடுபட்ட மற்றொருவனையும் இங்கு குறிப்பிட வேண்டும். அவன், வெள்ளையத் தேவன் என்ற மறக்குல மைந்தனாவான். மாற்றலர் நடுங்கும் தோற்றம் வாய்ந்தவன். பின்னே நிகழ்ந்த பாஞ்சாலங்குறிச்சிப் போரில் அவன் புரிந்த வீரச் செயல்கள் ஒரு தனி நூலுக்குரியவை. 'வெள்ளையத் தேவன்' என்ற பெயரைக் கேட்டாலே ஆங்கிலேயர் அலறியோடுவ ரென்றால், அவனது வீரத்தை விளக்குவார் யாரே!

வெள்ளையத் தேவனின் ஆற்றல் கண்டு வியந்த வீரபாண்டியன், அவனுக்கு "பகதூர்" என்ற பட்டம் தந்தான். மக்கள் அவ்வீரனை "பாதர் வெள்ளையத் தேவன்" என்றே அழைத்தனர்.

திரு. சிவசுப்பிரமணிய பிள்ளை என்பவர், பாஞ் சாலங்குறிச்சி பாளையத்தின் தலைமை நிர்வாகி; வீர பாண்டியனின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்.

இவர் "தானாபதிப்பிள்ளை" என்றே அழைக்கப் பட்டு வந்தார். வீரபாண்டியனை வெள்ளையருக்கு எதிரியாக்கியதே தானாபதிப் பிள்ளைதானென்றும் அவரில்லையேல், வீரபாண்டியன் கிழக்கிந்தியக் கம் பெனிக்குப் பணிந்து போயிருப்பான் என்றும் வரலாற்று ஆசிரியர்கள் சிலர் கூறுகின்றனர்.

தானாபதிப் பிள்ளையும், வீரபாண்டியனுடன் இராமலிங்க விலாசத்திற்குச் சென்றிருந்தார். ஆனால், வீரபாண்டியன் "இராமலிங்க விலாச" த்தி லிருந்து வெளியேறுகையில், அவனுடன் சென் றிருந்த தானாபதிப்பிள்ளை மட்டும் உள்ளே சிக்கிக் கொண்டார். வெள்ளையர்கள் அவரைச் சிறைப் படுத்தி விட்டனர். மாளிகைக்குள்ளே நடந்த குழப்பத்தில் தானாபதிப் பிள்ளை சிக்கிக் கொண் டதை வீரபாண்டியன் கவனிக்கவில்லை. மாளிகையை விட்டதும் பாஞ்சாலங்குறிச்சியை நோக்கி நெடுந்தூரம் சென்ற பின்னர்தான் தானாபதிப் பிள்ளை கானாத செய்தியறிந்து சிந்தை நொந்தான். "இராமலிங்க விலாசப்" போரில் தனது வீரர் பலர் பலியானதால் ஏற் கனவே வருந்திக் கொண்டிருந்த அவனது உள்ளம் தானாபதிப் பிள்ளை சிறைப்பட்டதை அறிந்து மேலும் கலங்கியது.

தானாபதிப் பிள்ளையை மீட்பதற்காக மீண்டும் இராமலிங்க விலாசத்தை நோக்கிச் செல்ல நினைத் தான். சேனைத் தலைவர்களும் வீரபாண்டியனைப் பின்பற்றினர். ஆனால், தம்பி ஊமைத்துரை, வீர

பாண்டியனை நோக்கி, "அண்ணலே, தானாப்பிள்ளை இந்நேரம் பகைவரின் ஆயுதத்திற்குப் பலியாகி இருக்கலாம். அப்படியாயின், அவருக்காகத் திரும்பிச் செல்வதில் பயனில்லை. ஒருவேளை அவர் கொல்லப்படாது உயிருடனிருப்பின், நிலைமை திருந்தியதும் எப்படியும் அவரை விரைவில் சிறை மீட்டே தீருவோம். இப்போது நாம் நேரே ஊர் செல்வதுதான் நல்லது." என்று நயமுடன் உரைத்தான்.

முன்னரே, ஜாக்சனைக் காணச் செல்வதால் கேடு வருமென்று ஊமைத்துரை எச்சரித்ததைப் புறக்கணித்ததால் தனக்குற்ற இன்னல்களை வீர பாண்டியன் நன்கு உணர்ந்திருந்தான். ஆகையால், மீண்டும் தம்பியின் கருத்தைத் தட்டிப் போவது சரியல்ல எனத் தீர்மானித்து நெடுவழி கடந்து பாஞ்சாலங் குறிச்சியை அடைந்தான்.

இராமலிங்க விலாச சம்பவம் நடந்த இரண்டு நாட்களுக்குப் பிறகு தூத்துக்குடியிலிருந்த டேவிசன் என்னும் ஆங்கிலேயருக்கு ஒரு கடிதம் எழுதினன் வீரபாண்டியன். டேவிசன் ஆங்கிலேயராயினும் அருங்குணம் படைத்தவர். இந்திய மககளைப் புற வினத்தவராக எண்ணிப் பொருள் பறிக்காது, உற வினத்தவராக எண்ணும் உத்தமர். இவருக்கும் வீரபாண்டியனுக்கும் முன்பே நெருங்கிய நட்பு இருந்து வந்தது. எனவே, கலெக்டர் ஜாக்சனல் தனக்கு நேர்ந்த துன்பங்களையும் இனி நேரவிருக்கும் தொந்தரவுகளையும் தனது கடிதத்தில் குறிப்

பிட்டு, மேற்கொண்டு என்ன செய்வதென்பதை ஆலோசிக்க விரைந்து வருமாறு அழைப்பு விடுத்தான் வீரபாண்டியன்.

கடிதம் கண்டதும், டேவிசன் கணமும் தாமதியாது பாஞ்சாலங் குறிச்சியை அடைந்து வீரபாண்டியனை அவனது அரச மாளிகையாகிய "லட்சுமி விலாசத்" தில் சந்தித்தார். வீரபாண்டியன், தனது உள்ளத்தைக் கவர்ந்த அவ்வெள்ளை நண்பரிடம் கலெக்டர் ஜாக்சனின் சதிச் செயலையும் அதனால் தனக்கு நேர்ந்த அல்லல்களையும் விளக்கிக் கூறினான்.

செய்தியறிந்த டேவிசன், தமது வெள்ளை இனத்தவரின் விபரீதப் போக்கைக் கண்டு வேதனையடைந்தார். "வீரபாண்டிய! நின் ஆற்றலையும், அன்புள்ளத்தையும் ஜாக்சன் அறிந்து கொள்ளத் தவறிவிட்டான். அவனது தவறுகளை கிழக்கிந்தியக் கம்பெனித் தலைவர்களுக்கு யான் விளக்கிக் கூறி உனக்கும் அவர்களுக்கும் உறவை வளர்க்க என்னால் இயன்றதை யெல்லாம் செய்கிறேன். கவலையை விடுத்துக் காரியத்தைக் கவனி" எனக் கூறி டேவிசன் துரை தமது இல்லம் திரும்பினார்.

அங்கே, இராமநாதபுரத்தில் கலெக்டர் ஜாக்சன் தன்னிடம் சிக்கிக்கொண்ட தானபதிப் பிள்ளையின் கைகளுக்கு விலங்கிட்டுக் காவலில் வைத்தான். சுதந்தரத்தை விரும்பிய தமிழனுக்கு ஆங்கிலக் கொள்ளைக் கூட்டம் விலங்கு பூட்டிய வரலாறு இங்கிருந்துதான் துவங்குகிறது. நாட்டின் சுதந்

தரத்திற்காகக் கைகளில் விலங்கு தாங்கும் பெருமை தானுபதிப் பிள்ளைக்கே முதன் முதலில் கிடைத்தது. வீரபாண்டியனிடம் படுதோல்வி யடைந்தாலும், தானுபதிப் பிள்ளையைச் சிறைப்படுத்தியதிலே பெருமை யடைந்தான் கலெக்டர் ஜாக்சன். 'இராமலிங்க விலாசம்' சம்பவம்பற்றி கிழக்கிந்தியக் கம்பெனியின் மேலதிகாரிகளுக்குத் தெரிவிக்க வேண்டியபொறுப்பு கலெக்டர் ஜாக்சன் மீது சுமந்திருந்தது. ஆனல், நடந்ததை அப்படியே எழுதினல் மேலதிகாரிகளின் கண்டனத்திற்கு ஆளாக நேரும் என அஞ்சினன் ஜாக்சன்.

கம்பெனியின் தலைவர்கள் இந்தியாவைச் சுரண்ட வந்தவர்களே யென்ருலும், அனுவசியமாக இரத்தம் சிந்துவதை அவர்கள் அங்கீகரிக்க மாட்டார்கள். அதுவும் கம்பெனியின் போர்ப்படையில் நெடுங்காலம் சேவை புரிந்த தளபதி கிளார்க்கைப் பலிகொடுக்கும் அளவுக்கு கலெக்டர் ஜாக்சன் கண்மூடித்தனமாக நடந்துகொண்டதை கம்பெனித் தலைவர்கள் ஒருபோதும் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். இதை ஜாக்சன் தெளிவாக உணர்ந்திருந்தான். எனவே, தன்மீது பிழைகாணு வண்ணம் 'இராமலிங்க விலாசம்' சம்பவம்பற்றி மிகத் தந்திரமாக அறிக்கை தயாரித்து கம்பெனித் தலைவர்களுக்கு அனுப்பினன். அந்த அறிக்கையின் சுருக்கம் :

"பாஞ்சாலங்குறிச்சித் தலைவனை வீரபாண்டியக் கட்டபொம்மன் என்னைக் கண்டுபேச விரும்

பினுன். நானும் சம்மதித்தேன். குறித்த காலத்தில் அவன் தனது தம்பி ஊமைத்துரை,* தாஞபதிப் பிள்ளை, மற்றும் பல படைவீரர் சூழ என்னைப் பேட்டி கண்டான். அதே நேரத்தில் நான் அறியாதவாறு 4000 படைவீரர்களை எனது மாளிகையைச் சுற்றி மறைத்து வைத்திருந்தான்.

" பேட்டியின்போது, கம்பெனிக்கு வரி செலுத்த வேண்டிய காரணங்களை நயமுடன் உரைத்தேன். அவன் என் கருத்துக்கு இணங்காததுடன், பேச்சுக்கிடையில் என்னை அவமதித்து வெளியேறினுன். அச்சமயம் நம் தளபதி கிளார்க் அவனைத் தடுத்து நிறுத்தியபோது அவன் தன்னிடமிருந்த உடைவாளால் கிளார்க்கைக் குத்திக் கொன்ருன். இதனுல் ஏற்பட்ட கலகத்தால் இரு தரப்பிலும் பலர் மாண்டனர்.

" வீரபாண்டியன், குழப்பத்தின் மத்தியில் தப்பித்து வெளியேறிவிட்டான். ஆனுல், தாஞபதிப் பிள்ளையைச் சிறைப்பிடித்து விட்டேன். வீரபாண்டியக் கட்டபொம்மனை அடக்கி ஒடுக்கி அவனது ஆட்சியைப் பறிக்காத வரை, தமிழகத்தில் கிழக்கிந்தியக் கம்பெனியார் ஆதிக்கம் செலுத்துவது முடியாத காரியம். வீரபாண்டியன் எளிதில் பணிந்துகொடுக்க மாட்டான். படைபலங் காட்டியே அவனைப் பணிய வைக்கவேண்டும். அதற்கு இங்குள்ள படைபலம் போதாது. மேலும் இரண்டு பீரங்கிகளும், குதிரைப் பட்டாளமும் தேவை. இதைக் கம்பெனித் தலைவர்களின்

கவனத்திற்குக் கொண்டுவருவது என் கடமை. மேல் நடவடிக்கைகளுக்கு, உத்தரவை எதிர் பார்க்கிறேன்."

கடிதத்தைக் கண்டு கம்பெனித் தலைவர்கள் கலங்கினர். குமரி முதல் இமயம் வரை ஆதிக்கம் செலுத்தத் தாங்கள் வகுத்துள்ள திட்டம் வீர பாண்டியனுடன் நிகழ்ந்துள்ள போரால் வீணாகி விடுமோ என அஞ்சினர். எதற்கும் ஜாக்சனை நேரில் தருவித்து நடந்ததை அறிந்து, இனி நடக்க வேண்டியவற்றை முடிவு செய்யலாம் எனக் கருதி, "சிறைப்பட்டுள்ள தானாபதிப் பிள்ளையுடன் திருச்சி வந்து நேரில் சந்திக்கவும்" என்று கலெக்டர் ஜாக்சனுக்குக் கட்டளையனுப்பினர்

உத்தரவை எதிர்பார்த்திருந்த ஜாக்சன், தானா பதிப் பிள்ளையுடன் காவலர் பலரை அழைத்துக் கொண்டு திருச்சிக்கு விரைந்தான். கம்பெனியின் சார்பாக, 'இராமலிங்க விலாசம்' சம்பவத்தை விசாரிக்க நியமிக்கப்பட்டிருந்த நீதிமன்றத்தின் முன்னே தானாபதிப் பிள்ளை நிறுத்தப்பட்டார். நீதிமன்றத்தாரின் கட்டளைக்கிணங்க இராமநாத புரத்தில் நடந்தவற்றைத் தமக்குச் சாதக மான வகையில் திரித்துக் கூறினான் ஜாக்சன். தானாபதிப் பிள்ளை பாஞ்சாலங்குறிச்சிப் பாளை யத்தின் தலைமை நிர்வாகியாதலால், வீரபாண்டியக் கட்டபொம்மனின் தவறுகளனைத்துக்கும் அவரே காரணம் என்றும் சாதித்தான்.

தானாபதிப் பிள்ளை, ஆரம்பம் முதல் அன்று வரை ஜாக்சன் வகுத்த சதித் திட்டங்களையும், அதிலிருந்து விடுபட வீரபாண்டியன் நிகழ்த்திய தீரப் போரையும் விரிவாகக் கூறி, நடந்த குழப்பத்திற்கு கலெக்டர் ஜாக்சனின் பொறுப்பற்ற தன்மையே காரணமெனத் துணிவுடன் உரைத்தார். பேட்டி காண வரும்படி அழைத்து, வீரபாண்டியனை ஊர் ஊராகச் சுற்றி அலையச் செய்த ஜாக்சனின் சூழ்ச்சிகளை விரிவாகக் கூறினார். சுதந்தரமாக வாழ விரும்புவதைத் தவிர ஆங்கிலேயருக்குத் தாங்கள் எவ்விதத்தும் பகைவரல்லர் என்பதையும் விளக்கினார்.

இந்த நிலையில், வீரபாண்டியனின் ஆங்கில நண்பரான டேவிசன் துரை எழுதிய நீண்ட கடிதமும் கம்பெனித் தலைவர்களுக்குக் கிடைத்தது. அதில் அவர், வீரபாண்டியனின் நேர்மையையும், சுதந்தர ஆர்வத்தையும் வெகுவாகப் புகழ்ந்திருந்ததோடு, 'இராமலிங்க விலாசம்' கலகத்திற்கு ஜாக்சனின் முரட்டுத்தனமே காரணமென்பதையும் வற்புறுத்தி யிருந்தார். கம்பெனி அதிகாரிகளின் போக்கு இனியும் இதே முறையில் போய்க்கொண்டிருந்தால், ஆங்கிலேயருக்கும் தமிழருக்கும் ஒரு பெரும் போர் மூளுவது நிச்சயமென்றும் எச்சரித்திருந்தார் டேவிசன் துரை.

கிழக்கிந்தியக் கம்பெனியின் நீதிமன்றத்தார், தானாபதிப் பிள்ளையின் வாக்குமூலத்தைக் கேட்டும் டேவிசன் துரையின் கடிதத்தைப்

படித்தும் உண்மையை உணர்ந்தனர். எனவே, 'இராமலிங்க விலாசம்' சம்பவத்திற்கு, கலெக்டர் ஜாக்சனைப் பொறுப்பாளியாக்கி அவனைப் பதவியி லிருந்து விலக்கி, அவனுக்குப் பதிலாக எஸ். ஆர். லூஷிங்டன் என்பவனைக் கலெக்டராக நியமித்த னர். இந்த விசாரணையின் விளைவாகத் தானாபதிப் பிள்ளையும் விடுதலை செய்யப்பட்டார்.

ஜாக்சனுக்குப் பதிலாக கலெக்டர் பதவி ஏற்ற லூஷிங்டன், 1799-ம் ஆண்டு மார்ச் மாதம் 16-ந் தேதி வீரபாண்டியனுக்கு ஒரு கடிதம் எழுதினான். அதில், 'இராமலிங்க விலாசம்' சம்பவத்தில் கொலை யுண்ட கிளார்க் துரையின் குடும்பத்திற்கு நஷ்டஈடு தரும் பொறுப்பு வீரபாண்டியனுக் குரியதென்றும், மேலும், பாஞ்சாலங் குறிச்சிப் பாளையம் சம்பந்த மாகப் பேசவேண்டி யிருப்பதால், செலுத்த வேண் டிய வரி பாக்கியை எடுத்துக்கொண்டு தாமதமின்றி இராமநாதபுரம் வந்து தம்மைக் காணவேண்டு மென்றும் எழுதியிருந்தான்.

வீரபாண்டியன், கலெக்டரின் கடிதம் தனது கைக்குக் கிடைத்த மறுகணமே பின்வருமாறு பதிலெழுதினான் :

"பாஞ்சாலங்குறிச்சி யெங்கும் மழையின்மை யால் பஞ்சம் ஏற்பட்டுவிட்டது. பஞ்சத்திற்கு அஞ்சிய மக்கள் நிலங்களைத் தரிசாகப் போட்டு விட்டு வெளியேறிவிட்டனர். அவர்கள் திரும்பி

வந்து சாகுபடி செய்யத் துவங்கியதும், கம்பெனிக்குச் செலுத்தவேண்டிய வரியைச் சேகரித்து எடுத்துக்கொண்டு நேரில் வருகிறேன்.

நிற்க, இராமநாதபுரம் குழப்பத்தின்போது நான் ஏறி வந்த பல்லக்கு முதலிய சாமான்களை கம்பெனி அதிகாரிகள் அபகரித்துக்கொண்டனர். அவற்றை உடனடியாகத் திருப்பித் தரவேண்டும்.''

இந்தக் கடிதம் கண்டு கம்பெனித் தலைவர்கள் கடுங்கோபங் கொண்டனர். வீரபாண்டியன் தவணை கேட்பது, வரி செலுத்த அல்ல; கம்பெனியை எதிர்த்துக் கலகம் செய்யப் பலம் திரட்டவே என்று எண்ணினர்.

இந்த நிலையில், இராமநாதபுரத்தில் கம்பெனியாரின் ஆதிக்கத்திற்கெதிராக பெருத்த கலகம் மூண்டது. பரம்பரை வழிவந்த பாளையக்காரரான முத்துராமலிங்க சேதுபதியை சென்னைக்கு விரட்டிவிட்டு அந்தப் பிரதேசத்தைக் கம்பெனியார் தங்களுடைய நேரடி நிர்வாகத்தில் வைத்துக்கொண்டனர். கம்பெனிக்கு எதிராகச் சதி செய்ததாகச் சேதுபதி மீது குற்றஞ் சாட்டியே அவருக்கு இந்தக் கொடுமையை விளைவித்தனர். இதனால் ஆத்திரம் கொண்ட ராமநாதபுரம் மக்கள் சமயம் வாய்த்த பொழுதெல்லாம் கம்பெனிக்கு எதிராகக் கலகம் செய்துவந்தனர். இப்போது நேர்ந்த கலகம், முன் எப்போதும் கண்டிராத அளவுக்கு மூண்டுவிட்டது.

திருநெல்வேலிச் சீமைப் பாளையக்காரர்கள் பலரும் இந்தக் கலகத்தில் பங்கு கொண்டனர்.

தெ[illegible]பாண்டி மக்கள் மனதில் சுதந்தர உணர்ச்சி சுடர்விட் டெழுந்ததைக் கண்ட ஆங்கிலேயர்கள் அச்சங் கொண்டனர். பாஞ்சாலங் குறிச்சி வீர பாண்டியனும் இந்தக் கலகத்தில் கலந்துவிட்டால், கிழக்கிந்தியக் கம்பெனிக்கு இந்திய மண்ணில் இறுதிச் சடங்கு செய்யும் காலம் நெருங்கிவிடுமென் பதை கலெக்டர் ஜாக்ஸன் நன்ருக உணர்ந்து கொண்டான். மேலும், இந்தக் கலகத்திற்கு வீர பாண்டியன் இரகசியமாக உதவி புரிந்து வருவதாக கலெக்டருக்குப் பலர் தகவல் கொடுத்திருந்தனர். கட்டபொம்மனைத் தனது கண்காணிப்பில் வைத் திருந்தாலொழிய கலகத்தை அடக்குவது கஷ்டம் என்று கலெக்டர் முடிவுசெய்தான். எனவே, கமுதி யில் முகாம் செய்திருக்கும் தம்மை உடனே வந்து காணவேண்டுமென்று வீரபாண்டியனுக்குக் கட் டளை அனுப்பினான். ஆனால், வீரபாண்டியனே, "இன்று வருகிறேன்; நாளை வருகிறேன்" என்று சாக்குப் போக்குகளைச் சொல்லிக் காலங் கடத்தி னான்.

இறுதியாக, ஒருநாள் வீரபாண்டியன் பாஞ் சாலங் குறிச்சியிலிருந்து புறப்பட்டுவிட்டதாகக் கலெக்டருக்குத் தகவல் வந்தது. தம்மைக் காண்பதற்காகவே வீரபாண்டியன் வருவ தாகக் கலெக்டர் நம்பினான். ஆனால், பின்னர் அவன் சிவகங்கைக்குச் சென்றுவிட்டான் என்ற செய்தி கலெக்டரின் காதுக்கு எட்டியது! வீரபாண்டியன் தனது அழைப்பை அசட்டை

செய்ததுடன், பாஞ்சாலங்குறிச்சியில் தங்கியிருந்த கும்பெனிக்கு எதிராகக் கலகம் நடந்துவரும் திசைக்குச் சென்றது, கலெக்டருக்கு ஆத்திரத்தை மூட்டியது. கலகக்காரர்களுடன் கலந்துகொண்டு ஆங்கிலேயரின் ஆதிக்கத்தை ஒழித்துக் கட்டவே வீரபாண்டியன் சிவகங்கை சென்றிருப்பான் என்று எண்ணினான் லூஷிங்டன்.

சிவகங்கை சென்றிருந்த வீரபாண்டியன், அங்கிருந்து கமுதிக்குத் திரும்பினான். கலெக்டர் முகாம் செய்திருந்த இடத்திலிருந்து கமுதி பத்து மைல் தூரத்திலிருந்தது. எனவே, உடனே தம்மை வந்து காணவேண்டுமென்று வீரபாண்டியனுக்குக் கலெக்டர் கடிதமெழுதினான். பலமுறை தாம் அழைப்பு விடுத்திருந்தும் வராததோடு, பத்து மைல் தூரத்தில் வந்திருந்துங்கூட தம்மைக் காணவேண்டுமென்ற கருத்தில்லாதிருப்பதைப் பற்றி அக்கடிதத்தில் கண்டித்திருந்தான்.

கடிதத்தைக் கண்ட கட்டபொம்மன் கடுஞ் சினம் கொண்டான். "உடனே வரவேண்டும்" என்ற வார்த்தை அவன் உள்ளத்தை வருத்தியது. "பரதேசி வெள்ளையன், பாளையப்பட்டுத் தலைவனைப் பயமுறுத்துவதா?" என்று மனம் பதறினான். ஆனால், அப்போதிருந்த நிலையில், "வர முடியாது" என்று சொல்ல அவனுக்குத் துணிவில்லை. எனவே, உடல்நிலை சரியில்லாததால் உடனே புறப்பட்டுவர முடியாதென்றும், மேலும், அன்றைக்கு

நாளும் நன்றாக இல்லையாதலால் மறுநாள் வருவதாகவும் பதில் விடுத்தான்.

வெள்ளையனே விடுவதாயில்லை. பஞ்சாங்கத்தைப் பார்த்து, அன்றைய நாள் நல்ல நாளே என்பதைத் தெரிந்துகொண்டான். என்றாலும், வீரபாண்டியன் வருவதாக ஒப்புக்கொண்டிருப்பதால், அன்றைக்கே வந்துதீரவேண்டும் என்று வற்புறுத்துவதனால் காரியம் கெட்டுவிடலாம் என்று பயந்தான். ஆனால், மறுநாள் வரும்போது வீரபாண்டியனுடன் வருவோரின் எண்ணிக்கை 30 பேருக்கு அதிகப்படக் கூடாதென்று சொல்லியனுப்பினான். முன்பு ராமநாதபுரத்தில், ஜாக்சனைப் பேட்டி காண 4000 படைவீரர்களுடன் சென்று, அவன் வகுத்த சதித் திட்டத்தை முறியடித்து வீரபாண்டியன் வெற்றி பெற்றானல்லவா? அந்தச் சம்பவம், கலெக்டர் லூஷிங்டனுக்கு நினைக்கும் போதெல்லாம் அச்சத்தைத் தந்தது. அதனால் தான் இந்த நிபந்தனையை விதித்தான்.

ஆனால், பாளையப்பட்டுத் தலைவனுக்குள்ள உரிமைப்படி படையினர் புடைசூழ, விருதுகள் தாங்கிய பரிவாரம் முன்செல்ல, தான் வருவதற்கு அனுமதித்தாலொழிய அழைப்பை ஏற்று அங்கு வரமுடியாதென்று வீரபாண்டியன் கலெக்டருக்குக் கடிதம் அனுப்பினான். வீரபாண்டியனின் விருப்பத்தை கலெக்டர் அங்கீகரிக்கவில்லை. ஆகவே, வீரபாண்டியனும் கலெக்டரைப் பேட்டி காணாது பாஞ்சாலங் குறிச்சிக்குச் சென்றுவிட்டான்.

வீரபாண்டியனின் போக்கு, கலெக்டருக்குக் கவலையைத் தந்தது. சின்னஞ்சிறு பாஞ்சாலங் குறிச்சியின் தலைவன், நாடு முழுதும் ஆதிக்கம் செலுத்தும் ஆங்கிலக் கம்பெனியை ஒவ்வொரு கட்டத்திலும் அவமதித்து வருவதைக் கண்டு அவன் ஆத்திரம் கொண்டான். வீரபாண்டியனிடம் போர் செய்வதைத் தவிர்ப்பதற்குத் தாம் எத்தனையோ உபாயங்கள் செய்தும், அத்தனையும் பாழானதை எண்ணி அங்கலாய்த்துக் கொண்டான்.

பாஞ்சாலங்குறிச்சி வரிவசூலைக் கொஞ்ச நாளைக்குத் தள்ளி வைக்கவும் கலெக்டர் தயாராக இருந்தான். ஆனால், தென்பாண்டி நாட்டில் கம்பெனியாருக்கு எதிராகக் கிளம்பிய கலகங்களி லெல்லாம், வீரபாண்டியக்கட்டபொம்மன் தொடர்பு கொண்டிருந்தான் என்று நம்பியதால் அவனை முதலில் முடித்துக் கட்டத் திட்டமிட்டான். சென்னையிலுள்ள கவர்னருக்கு அவசரமாக ஒரு கடிதம் எழுதினான் கலெக்டர் ஜாக்ஸன். அதில், பாஞ்சாலங்குறிச்சித் தலைவனை அடக்கு வதற்கான படை பலத்தைத் திரட்டி அனுப்ப வேண்டுமென்றும் இதில் தாமதித்தால், நிலைமை மோசமாகுமென்றும் தெரிவித்தான்.

அப்போது சென்னையில் கவர்னராக இருந்த வன், இந்தியா அடிமைப் படுவதற்குக் காரண கர்த்தாவாயிருந்த லார்டு கிளைவின் மகனாவான். அவன் பெயர் லார்ட் எட்வர்ட் கிளைவ். கலெக்டரின் கடிதம் கிடைத்ததும், கவர்னர் தனது அதிகாரி

கழ் அழைத்து மந்திராலோசனை செய்தான். பாளையங் கோட்டையிலிருந்து நன்கு பயிற்சி பெற்ற படை வீரர்களை மேஜர் பானர்மன் தலைமையில் பாஞ்சாலங்குறிச்சிக்கு அனுப்புவதென்று கவர்னரின் மந்திராலோசனை சபை முடிவு செய்தது. திருநெல்வேலிச் சீமையில் கலெக்டருக்குரிய அதிகாரங்கள் எல்லாம் ரத்து செய்யப்பட்டு, போர் நிகழ்த்துவதுள்பட எல்லா அதிகாரங்களும் மேஜர் பானர்மனுக்கே அளிக்கப்பட்டன.

மேஜர் பானர்மன் சர்வாதிகாரம் பெற்றுப் படையெடுக்கப் போகும் செய்தி 1799ம் ஆண்டு ஆகஸ்டு மாதம், 14ந் தேதி திருநெல்வேலிச் சீமையெங்கும் அறிவிக்கப்பட்டது. தளபதி பானர்மென், பாஞ்சாலங்குறிச்சி மீது படை யெடுக்கத் தயாராகிவிட்டான். என்றாலும், படையெடுக்கு முன்னர் வீரபாண்டியனை பாஞ்சாலங்குறிச்சியிலிருந்து வெளியேற்றினாலன்றி தனக்கு, வெற்றி கிடைக்காது என்று எண்ணினான்.

மேலும், கிழக்கிந்தியக் கம்பெனித் தலைவர்கள் வீரபாண்டியனுக்கு எத்தகைய உடற் சேதமோ, உயிர்ச் சேதமோ இன்றி அவனைச் சிறைப் பிடித்து சென்னைக்குக் கொண்டு வரவேண்டுமென்று பானர்மெனுக்கு உத்தரவிட்டிருந்தனர். ஆகவே, கம்பெனிப் படைகள் பாஞ்சாலங்குறிச்சியைப் போர்க்களமாக்குமுன் வீரபாண்டியனை சமரசம் பேசுவதாகப் பாசாங்கு செய்து பாளையங் கோட்டைக்கு அழைத்துவரத் திட்டமிட்டான்

தளபதி பானர்மென். தன்னைத் தாமதமின்றி பாளையங் கோட்டையில் வந்து பார்க்க வேண்டு மென்று ஒரு தூதுவர் மூலம் வீரபாண்டியனுக்குச் சொல்லியனுப்பினான்.

வீர பாண்டியன் சிறந்த ராஜதந்திரி. வெள்ளையரின் சூழ்ச்சிகளனைத்தும் நன்குணர்ந்த வன். எனவே; பாளையங் கோட்டை சென்றால் பானர்மென் தன்னைச் சிறைப்படுத்துவது நிச்சய மென்பதை அவன் தனது நுண்ணிய அறிவால் திண்ணமாக அறிந்தான். ஆயினும், பானர் மெனின் அழைப்பிற்கு "வரமுடியாது" என்று கண்டிப்பாகச் சொல்லாமல், வருவதாக ஒப்புக் கொண்டு, அன்று நாள் நன்றாக இல்லையாதலால், நல்ல நாள் பார்த்து ஒரு வாரத் திற்குள் பாளையங் கோட்டைக்கு வருவதாகப் பானர்மெனுக்குத் தெரிவிக்குமாறு தூதுவனிடம் சொன்னான்.

தூதுவன் திரும்பிச் சென்ற மறுகணமே, வீர பாண்டியன் தூத்துக்குடிக்கு விரைந்தான். அங்கு தமது நெருங்கிய நண்பரான டேவிசன் துரையைக் கண்டு நிலைமையை விளக்கிக் கூறி மேல் நடக்க வேண்டியவை பற்றி ஆலோசனை கேட்டான். 'தாமதமின்றி பாளையங்கோட்டை சென்று பானர் மெனைக் கண்டு பேசிச் சமரசம் செய்துகொள்வதே சண்டையைத் தவிர்ப்பதற்குள்ள ஒரே வழி' என்று டேவிசன், வீரபாண்டியனுக்கு யோசனை கூறினார். ஆனால், எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பி

[illegible] அப்பொருளில் மெய்ப் பொருள் காணும் அறிவுடைய வீரபாண்டியன், டேவிசன் துரையின் ஆலோசனையை ஏற்க மறுத்து விட்டான். என்ருலும், மாப்பிள்ளை வன்னியர் என்பவரை பானர்மெனிடம் தூதுஅனுப்பி சமரசம் பேசச் சம்மதித்தான்.

அதன்படி வீரபாண்டியனின் தூதுவரான வன்னியர் என்பார், பாளையங் கோட்டை சென்று தளபதி பானர்மெனைக் கண்டு நேர்மையான முறையில் சமரசம் செய்து கொள்ள வீரபாண்டியன் விரும்புவதாகக் கூறினர். ஆனல், பானர்மென் வன்னியரிடம் சமரசம் பேசாது அவரைத் தமது காவலர் மூலம் கைது செய்து சிறைப்படுத்தினன்.

வீரபாண்டியன் தனது சூழ்ச்சியில் சிக்கி பாளையங் கோட்டைக்கு வரமாட்டான் என்பதைப் பானர்மென் தெளிவாகத் தெரிந்து கொண்டான். மேலும், பாஞ்சாலங்குறிச்சியான், பஞ்சாங்கத்தில் நாள் பார்ப்பதாகச் சொல்வதெல்லாம் தன்னை ஏய்ப்பதற்கான பாசாங்கே என்பதை பானர்மென் புரிந்து கொண்டான். எனவே, இனியும் கட்ட பொம்மன் பேட்டிக்கு வருவான் என்று காத்திருப்பது அவனது கையைப் பலப்படுத்தி விடுமென்றெண்ணி உடனே படையெடுக்கத் துணிந்து விட்டான். பானர்மென், அந்தச் சமயத்தில் அவசரமாகப் படையெடுக்கத் துணிந்ததற்கு மற்ருெரு காரணமுமுண்டு.

மறைமலையடிகள் நூல்நிலையம்
58880

ஞ்சா தேவி ஜக்கம்மாள், பாஞ்சாலங்குறிச்சி பாளையக் காரர்களின் குலதெய்வமாவாள். ஜக்கம்மாள் வழி பாடு, வீரவழிபாடாகவே இருந்து வந்தது. பானர் மென் பாஞ்சாலங்குறிச்சி மீது படையெடுக்கத் துணிந்த சமயம், திருச்செந்தூரில் தேவி ஜக்கம் மாளுக்கு திருவிழா நடக்கும் காலமாகும். அந்தத் திருவிழாவுக்காக வீரபாண்டியனின் தம்பியரான தளவாய் குமாரசாமி, ஊமைத்துரை ஆகியோரும், மற்றும் அமைச்சர் பலரும், உறவினரும் திருச் செந்தூர் சென்றிருந்தனர். பாஞ்சாலங்குறிச்சி படை வீரர்களிலும் பாதிப் பேர் அந்த விழாவுக்குப் போயிருந்தனர். வீரபாண்டியன் படை பலமும், அமைச்சர்களின பக்கபலமுமின்றி பாஞ்சாலங் குறிச்சிக் கோட்டையில் தனித்திருந்தான்.

அந்த நிலையை பானர்மென் அறிந்திருந்ததால் தான் பாஞ்சாலங்குறிச்சி மீது அவசரமாகப் படை யெடுத்தான். பானர்மென், தான் படையெடுக்கும் நேரத்தை வீரபாண்டியனுக்கு அறிவிக்கவுமில்லை. அது மட்டுமா? பகலில் படையெடுத்தால் பாஞ்சாலங்குறிச்சி மன்னன் எச்சரிக்கையாகி விடு வானென்றஞ்சி, கதிரவன் மறைந்து காரிருள் கவிழ்ந்த நேரத்தில் தனது படைகளைக் காற்று வேகத்தில் கொண்டு சென்று நள்ளிரவுக்குள் பாஞ்சாலங்குறிச்சி எல்லையை அடைந்துவிட்டான்.

அவனுடன் காப்டன் ஓரில்லி, புரூஸ், லெப்டி னன்ட் டெல்லாஸ், காலின்ஸ், டக்ளஸ், டார்மீக்ஸ், பிளாக், பிரவுன் ஆகிய ஆங்கிலேயர்கள் துணைத்

தம்பதிகளாகச் சென்றனர். பானர்மெனின் படை பாஞ்சாலங்குறிச்சியில் புகுந்த நாள், 1799-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 4ந் தேதியாகும்.

## போர் துவங்கிவிட்டது!

வீரபாண்டியன், உளவறிவதற்காகத் தமது ஒற்றர்களைப் பாளையங்கோட்டையில் ஏற்கனவே அமர்த்தி யிருந்தான். அந்த ஒற்றர்கள், பானர் மென் படையெடுத்துவரும் செய்தியை, அந்தப் படை பாஞ்சாலங் குறிச்சியில் புகுமுன்பே வீர பாண்டியனுக்கு எட்டும்படி செய்தனர். இந்தச் செய்தி நள்ளிரவில் வீரபாண்டியனுக்குக் கிடைத் தது. செய்தி கிடைத்த மறுகணமே, "விடிவதற் குள் வெளியிலுள்ள தமது படைவீரர்கள் அனைவ ரும் கோட்டைக்குள் திரண்டுவிட வேண்டும்" எனப் பாஞ்சாலங் குறிச்சி முழுவதும் முரசறையச் செய்தான் வீரபாண்டியன். ஆனால், பாஞ்சாலங் குறிச்சிப்படைகள் கோட்டைக்குள் திரளுமுன்பே, கம்பெனிப் படைகள் கோட்டையைச் சூழ்ந்து முற்றுகை யிட்டுவிட்டன. குதிரைப் படையினரும், காலாட் படையினரும் தனித்தனியே அணிவகுத்து நின்றனர். லெப்டினன்ட் டல்லாஸ் என்பவனே அப் படைகளின் தலைவனாக நின்றான்.

பாஞ்சாலங்குறிச்சிப் படையினர் கோட்டைக்கு உள்ளேயும் வெளியேயுமாகப் பிளவுபட்டுவிட்டனர்.

வீரபாண்டியன் முரசறைந்த பேரொலி கேட்டுத் திருச்செந்தூரி லிருந்த ஊமைத்துரையும், மற்ற உறவினரும், படைவீரர்களும் பாஞ்சாலங் குறிச்சிக்கு விரைந்து வந்தனர். ஆனல், வந்தவர்கள் உள்ளே புகமுடியாமல் வெள்ளையரின் படைகள் கோட்டையை முற்றுகையிட் டிருந்தன. என்றாலும், அந்த முற்றுகையைக கடந்து தளவாய் குமாரசாமி, ஊமைத்துரை ஆகியோரும், மற்றும் படைவீரர் பலரும் உள்ளே சென்றுவிட்டனர்.

தளபதி பானர்மென், பாளையங்கோட்டையி லிருந்து பாஞ்சாலங்குறிச்சி மீது படையெடுக்கப் புறப்பட்டபோது வீரபாண்டியனின் ஆலோசகரான தானுபதிப் பிள்ளை ஆற்றூர் என்னும் சிற்றூரில் தங்கியிருந்தார். அவரைச் சிறைபிடித்து வருமாறு நூறு வீரர்களை அனுப்பியிருந்தான் பானர்மென். படையினர் வரும் செய்தியை எப்படியோ முன்கூட்டியே தானுபதிப் பிள்ளை அறிந்துகொண்டார். எனவே, வெள்ளைப் படையினர் வருமுன்னம் ஆற்றூரை விட்டு வெளியேறிப் பாஞ்சாலங் குறிச்சிக் கோட்டைக்குள் நுழைந்துவிட்டார் தானுபதிப் பிள்ளை. ஆனல், வெறிபிடித்த வெள்ளைப் படையினர், தானுபதிப் பிள்ளையின் மனைவி மக்களைக் கொடுமைப்படுத்தியதோடு, அவர்களைச் சிறைபிடித்துச் சென்னைக்கு அனுப்பிவிட்டனர்.

கோட்டையை முற்றுகை செய்த தளபதி பானர்மென், இன்னும் அரைமணி நேரத்தில் வீரபாண்டியன் தம்மிடம் சரணுகதியடைய வேண்டு

மென்றும், இல்லையேல் கோட்டையை இடித்துத் தகர்த்து உள்ளே புகுந்து அவனைச் சிறைபிடிக்கப் போவதாகவும் தமது மொழிபெயர்ப்பாளரான ராமலிங்க முதலியார் மூலம் வீரபாண்டியனுக்கு அறிவிக்கச் செய்தான்.

வீரபாண்டியன் சரணாகதிக்கு சம்மதிக்கவில்லை. "நாடோடிகளாய் வந்த கூட்டத்தாரிடம் நாடாளும் வேந்தன் சரணடைவதா? நிறத்தாலும் அந்நியன், வாழ்க்கை நெறியாலும் அந்நியன், பேசும் மொழியாலும் அந்நியன், பிறந்த நாட்டாலும் அந்நியன்; அத்தகைய அந்நியனிடம் சரணடைவதைவிட, அமரில் சாவதே மேல்" என்று ஆண்மையுடன் பேசினன் வீரபாண்டியன்.

தூது சென்ற துவிபாஷி ராமலிங்க முதலியார், வீரபாண்டியன் சரணாகதிக்கு இணங்க மறுத்த செய்தியை பானர்மெனியம் தெரிவித்தார். அதற்கு முன்பே, பானர்மென், பாஞ்சாலங் குறிச்சிக் கோட்டையைத் தாக்குவதைப் பற்றி தனது துணைத் தளபதிகளுடன் ஆலோசித்துத் திட்டமிட்டிருந்தான். எனவே, வீரபாண்டியன் சரணாகதிக்கு மறுத்த செய்தியறிந்ததும், பானர்மென் படையினர் பாஞ்சாலங் குறிச்சிக் கோட்டையின் தெற்கு வாயிலைத் தாக்கத் துவங்கினர்.

பீரங்கிகள், கோட்டை மீது குண்டுமாரி பொழிந்தன. அதே சமயத்தில் லெப்டினன்ட் டல்லாஸ் மற்றொரு பகுதிப் படையுடன் வடக்கு வாயிலைத்

தாக்கினான். பகைவனுக்குத் தாளுக, திறக்காத பாஞ்சாலங் குறிச்சியின் வீரத் திருவாயில் வெள்ளையரின் குண்டுகளுக்கு ஆற்ருது, வீறிட்டலறும் ஒலியுடன் உடைபட்டுத் திறந்தன.

தெற்குப் புறத்து வாயிலைத் தகர்க்கும் படைகளுக்குத் தலைமை தாங்கியவன் லெப்டினன்ட் காலின்ஸ் என்னும் ஆங்கிலேயனுவான். இவனைத் தமிழர் 'காலன்' என்றே அழைப்பர். தெற்குவாயிற் கதவுகள் தகர்ந்து விழுந்ததும், 'காலன்' உள்ளேசெல்ல முயன்ருன். ஆனல், கோட்டைக கதவுக்கு உட்புறம் காத்திருந்த வீரபாண்டியனின் தீரப் படையினரில் ஒருவன் 'காலன்' மீது ஈட்டியைப் பாய்ச்சினன். மார்பில் புகுந்த ஈட்டி, முதுகு வழியாக வெளிவந்து அவனுக்குப் பின்னே நின்ற வெள்ளைப் படையினருக்குத் தமிழரின் வீரத்தை உணர்த்தியது! ஆம், வீரபாண்டியனின் கோட்டைவாயிலுக்கு முதற்பலியானன் லெப்டினன்ட் காலின்ஸ். இந்த வீரச் செயல் புரிந்த தமிழனின் பெயர் வெள்ளையத் தேவன் ஆகும்.

இந்த நிகழ்ச்சி, 'கோட்டையைத் தகர்த்து விட்டோம்!' என்று இறுமாந்திருந்த பானர்மெனின் எண்ணத்தில் இடிவிழுந்ததுபோ லாயிற்று. எனவே, ஆத்திரங் கொண்ட பானர்மென், வெள்ளையத்தேவனைப் பிடித்துத் தருவோர்க்கு ஐயாயிரம் ரூபாய் பரிசு தருவதாகப் பிரகடனம் செய்தான். வெள்ளையத் தேவனின் மாமனே, பணத்திற்கு ஆசைப்பட்டு அவனைக காட்டிக்

கொடுத்துவிட்டான். பிரித்தாலும் தந்திரத்தில் வெற்றி பெற்ற கம்பெனித் தலைவர்கள், பிடிபட்ட வெள்ளையத் தேவனைத் தூக்கிலிட்டுக் கொன்றனர்.

கோட்டை வாயில் தகர்க்கப்பட்ட பின்னரேனும், வீரபாண்டியன் அச்சங்கொண்டு தன்னிடம் அடிபணிவானென எதிர்பார்த்தான் தளபதி பானர்மென். ஆனால், நிகழ்ச்சி வேறுவிதமாக இருந்தது. கோட்டைகுள் அணிவகுத்து நின்ற வீரபாண்டியனின் படைகள் பானர்மெனின் படைகளைத் தாக்கிப் பல மணிநேரம் வீரப்போரிட்டன. இந்தப் போரில் கம்பெனிப் படைகளுக்கு ஏற்பட்ட சேதம் கணக்கிலடங்கா.

தளபதி பானர்மென், பாளையங்கோட்டையிலிருந்து படைதிரட்டிப் புறப்பட்டபோது, பயிற்சி பெற்ற தனது படைவீரர்கள் ஒருமணி நேரப் போரிலேயே பாஞ்சாலங்குறிச்சியைக் கைப்பற்றி, வீரபாண்டியனையும் சிறைப் பிடித்துவிடுவார்கள் என்று திண்ணமாக எண்ணினன். ஆனால், ஏழுமணி நேரம் போரிட்டும் அவன் எண்ணம் ஈடேறவில்லை. துணைத்தளபதி காலன் பலியானன்; ஆயிரக்கணக்கான படைவீரர்கள் மாண்டுபோயினர்; குண்டுகள் அனைத்தும் தீர்ந்துவிட்டதால், பீரங்கிகள் வேலையற்றுக் கிடந்தன. இவைதான், படையெடுப்பால் பானர்மென் கண்ட பலன். ஆம், வெள்ளைத் தளபதி பானர்மெனின் இறுமாப்பை அழித்தனர் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டைக்குள் பதுங்கியிருந்த தமிழ் வீரர்கள்.

மேலும் பல பீரங்கிகளையும், பயிற்சிப் படை வீரர்களையும் அனுப்புமாறு பாளையங்கோட்டைக்குச் செய்தி அனுப்பிவிட்டுப் போரை நிறுத்திக் கொண்டான் தளபதி பானர்மென். இறந்தவர் போக மிச்சமிருந்த வெள்ளைப் படையினர், வீரபாண்டியன் படைகள் கோட்டையை விட்டு வெளியே வராதவாறு மதிலைச் சுற்றிக காவல் காத்தனர். அதே நேரத்தில், கோட்டைககுள்ளே வெற்றி முரசம் விண்ணிடிய ஒலித்தது. காலனைக கொன்றதிலே வீரபாண்டியன் படையினருக்கு மட்டற்ற மகிழ்ச்சி. ஆனால், பாளையங்கோட்டையிலிருந்து பீரங்கிகள் வருமானால், பாஞ்சாலங்குறிச்சி என்னவாகும் என்பதைப்பற்றி எண்ணிப்பார்த்தார்களில்லை அவ்வீரர்கள். இரவு முழுவதும் கண் விழித்துத் திட்டமிட்டு, பகல் முழுவதும் தீரப்போர் புரியும் தமது வீரப்படைகளுககுப் பககத்திலிருந்து ஊக்கமளித்துவந்த வீரபாண்டியன் மட்டும் இந்த வெற்றியைக கண்டு பூரிக்கவில்லை. பானர்மென் எதிர்பார்ப்பதுபோல் பாளையங்கோட்டையிலிருந்து பீரங்கிப் படைகள் வந்து பாஞ்சாலங் குறிச்சிக கோட்டையைத் தாககுமானால், இந்த வெற்றி விரைவில் தோல்வியாக மாறிவிடலாம் என்பதை வீரபாண்டியன் நன்ருக உணர்ந்தான்.

தானபதிப் பிள்ளையும் வீரபாண்டியனும் மேற்கொண்டு செய்யவேண்டியதைப்பற்றி ஆலோசித்தனர். திருச்சியிலிருந்து பீரங்கிப் படை வந்தால் பானர்மெனை வெல்வது கடினமென்றும், அப்

படை வருமுன்பே கோட்டையிலிருந்து வெளியேறுவதே நல்லது என்றும் தீர்மானித்தனர்.

எனவே, கிழக்கிந்தியக் கம்பெனியை எதிர்த்து ஒரு நீண்டகாலப் போருக்குத் தமிழ்நாட்டைத் தயாராக்குவதே தன்னை எதிர்நோக்கியுள்ள வேலை என எண்ணினான். ஆம், அன்று மூண்டிருந்த போர், பானர்மெனுக்கும் வீரபாண்டியனுக்கும் உள்ள தனிப்பட்ட சண்டையல்ல. அல்லது, பாஞ்சாலங் குறிச்சி மககளுக்கும் கிழக்கிந்தியக் கம்பெனிகளும் மட்டும் நேர்ந்துள்ள குழப்பமல்ல. குமரி முதல் இமயம் வரை பரந்து கிடக்கும் பாரத நாட்டை அடிமைப்படுத்த முயன்ற ஆங்கிலேயக் கூட்டத்துக்கும், அந்த பாரத நாட்டை ஆளப் பிறந்த இந்திய மக்களுக்கும் நேர்ந்துள்ள அரசியல் போராகும் இதை வீரபாண்டியன் தெளிவாக உணர்ந்திருந்தான். எனவே, நீண்டகால சுதந்தரப் போருககுத் தமிழகம் முழுவதையும் தட்டியெழுப்பப் பாஞ்சாலங் குறிச்சியிலிருந்து வெளியேறினான்.

வீரபாண்டியன் கோட்டையிலிருந்து வெளியேறும்போது இரவு பத்தரை மணியிருக்கும். அவன் தனித்துச் செல்லவே விரும்பினான். என்றாலும், தம்பியர், தளபதிகள், தானாபதிப் பிள்ளை ஆகியோர் துணைவர்களாகப் பின் தொடர்ந்தனர்.

பொழுது விடிந்ததும், 'வீரபாண்டியன் தப்பியோடிவிட்டான்' என்ற செய்தியை அறிந்தான்

பானர்மென். அவனுக்கு உண்டான ஆத்திரத்திற்கு அளவேயில்லை. ஆயினும், தளர்ச்சியடையாமல், வீரபாண்டியனைக் கண்டுபிடிக்கும் வேலையில் கவனத்தைச் செலுத்தினன். வீரபாண்டியன் வடக்கு நோக்கியே சென்றிருப்பான் என யூகித்து, அவன் சென்ற வழியிலுள்ள பாளையக்காரருக்கெல்லாம் கடிதம் எழுதினன் பானர்மென்.

அந்தப் பாளையக்காரர்களிலே வீரபாண்டியனுக்குப் பகைவர்களும் உண்டு; நண்பர்களுமுண்டு எனவே, பிரித்தாளும் சூழ்ச்சியில் பெயர் பெற்ற பானர்மென், பகைவரா யிருந்தவர்களுக்கு, “வீரபாண்டியனைப் பிடித்துக் கொடுத்தால் தக்க பரிசு தருவோம்” என்றும், நண்பர்களா யிருந்தவர்களுக்கு, “வீரபாண்டியனிடம் சமரசம் பேசவேண்டும், தங்களிடம் வந்திருந்தால் தகவல் கொடுங்கள்” என்றும் கடிதங்கள் எழுதினன்.

வீரபாண்டியன் வெளியேறிய பிறகு, பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையைக கைப்பற்றி அதில் முன்னிரவு நடந்த போரில் படுகாயமடைந்த வீரர்களை மருத்துவத்திற்காக நிறுத்திவைத்து, எஞ்சிய வீரர்களுககு, கட்டபொம்மனைப் பிடித்து வருமாறு கட்டளையிட்டான்.

எட்டயாபுரம், தென்பாண்டி நாட்டுப் பாளையங்களிலொன்று. அதன் மன்னன் எட்டப்பன் என்பான், கிழக்கிந்தியக் கம்பெனியின் நண்பனனன். அன்பினலல்ல; ஆங்கிலேயரிடம் கொண்ட அச்சத்

தால் வீரபாண்டியனைத் தேடிப் பிடிக்குமாறு கம்பெனியிடம் நட்புகொண்டுள்ள பாளையக்காரருக கெல்லாம் எழுதியடி, எட்டப்பனுககும் கடிதம் எழுதியிருந்தான் தளபதி பானர்மென்.

கடிதத்தைக் கண்டதும், பயிற்சி பெற்ற சிப்பாய்கள் சிலரை உடனே அனுப்பினுல், வீர பாண்டியனைத் தம்மால் தேடிப்பிடிகக முடியு மென்று எட்டப்பன், பானர்மெனுக்கு பதிலெழுதி ஞன். பானர்மென், துணைத்தளபதி டல்லாஸை சில குதிரை வீரர்களுடன் எட்டயாபுரம் அனுப்பி வைத்தான் டல்லாஸின் படை வந்து சேரும்வரை பொறுத்திருக்காமல் எட்டப்பன் தனது படை யினரைக் கொண்டே வீரபாண்டியனைத் தேட முயன்ருன். தன்னைப்போன்ற ஒரு சிற்றரசனை அந்நியருக்குக் காட்டிக்கொடுப்பதில் எட்டப்பனுக கிருந்த மகிழ்ச்சிதான் என்னே! தனது பாளையத் துககுக கேடு நேராமல் காக்கவும், ஆங்கிலேயரின் நல்லெண்ணத்தைப் பெறவும தமிழகத்தின் தலைசிறந்த வீரப் புதல்வனை - தமிழரின் உரிமை யைக் காக்க தனது உயிரையும், அரசாளும் உரிமை யையும் அற்பமெனமதித்த வீரபாண்டியனை-இந்திய நாட்டைக கொள்ளையடிகக வந்த வெள்ளையரிடம் பிடித்துக் கொடுகக முனைந்தான் எட்டப்ப நாயக கன.

வீரபாண்டியன், கோலார்பட்டி பாளையககார ரான இராஜகோபால நாயக்கர் இல்லத்தில் தங்கி இருப்பதாக எட்டப்பனுக்குத் தகவல் கிடைத்தது.

உடனே துணைத் தளபதி டல்லாஸுடன் கோலார் பட்டியை நோக்கி விரைந்து சென்றான் எட்டப்பன். வீரபாண்டியன், பாஞ்சாலங் குறிச்சியை விட்டுப் புறப்பட்டதும், சென்னைக்குச் செல்லும் வழியில் சற்று ஓய்வு பெற விரும்பி கோலார்பட்டி பாளையக் காரர் இல்லத்தில் தங்கினான். ஆனால், போராடுவதற் காகவே பிறந்த அவனுக்கு ஓய்வேது! டல்லாஸும், எட்டப்பனும் நூற்றுக்கணக்கான படை வீரருடன் வீரபாண்டியன் தங்கியிருந்த அரண்மனையைச் சூழ்ந்தனர். வீரபாண்டியன் மேல்மாடியில் நின்று பகைவரின் படையைக் கண்டான்; ஆனால், கலங்க வில்லை. தன்னையொத்த பாளையப்பட்டுத் தலைவ னும், தனது குலத்தானுமான எட்டப்ப நாயக்கன், பரதேசி வெள்ளையருக்குப் பரிந்து தன்னைச் சிறை பிடிக்க வந்திருப்பதைக் கண்டு கடுங்கோபங்கொண் டான். தன்னைச் சுற்றியிருந்த தம்பியர், தானாபதிப் பிள்ளை, தளபதிகள் ஆகியோரை நோக்கி, "நாம் நம்பிப் புகுந்த இடம் நமது பகைவரைச் சந்திக்கும் போர்க்களமாகிவிட்டது. இனி அஞ்சிப் பயனில்லை; ஆண்மையுடன் எதிர்த்துப் போர் புரியுங்கள். வாள் முனை காட்டித் தப்பாவிடில், இனி வாழ்வ தரிது" எனக் கூறி வாளை உருவிக் கையிலேந்தி அரண் மனைக்கு வெளியே வந்தான்.

எட்டப்பனின் படை வீரர்கள், அவன் மீது பாய்ந்து பிடிக்க முயன்றனர். வீரபாண்டியன் தனது கை வாளால் அவர்களை வெட்டி வீழ்த்தி னான். பின்னர் வீரபாண்டியனுக்கும் எட்டயாபுரம்

படையினருக்கும் பயங்கரப் போர் நடைபெற்றது. இந்தப் போரில் இரு தரப்பிலும் சிலர் மாண்டனர். பலர் படுகாயமுற்றனர். இறுதியில, வீரபாண்டியன் குதிரை மீதேறி தப்பியோடி விட்டான். அவனுடன் ஊமைத்துரை உள்பட அறுவர் தப்பி யோடி விட்டனர். ஆனல், தானுபதிப் பிள்ளை, அவரது தம்பி வீரபத்திரப் பிள்ளை உள்பட 34 பேர் தப்பியோட முயன்றும் முடியாமற் போனதால் சிறைபிடிககப்பட்டனர்.

வீரபாண்டியன் பிடிபடும் நேரத்தில் தப்பிவிட்டான் என்ற செய்தி பானர்மெனுககு வருத்தத்தைத் தந்ததென்றாலும, தானுபதிப் பிள்ளையைச் சிறைப் படுத்திவிட்டது அவனுககு ஆறுதலைத் தந்தது. பிள்ளையைச் சிறைப்பிடித்துக கொடுத்ததற்காக எட்டயாபுரத்தாருககு தகக சன்மானங்கள் வழங்கினுன் பானர்மென்.

வீரபாண்டியன் வெள்ளையருக் கெதிராகப் போர்க் கோலங் கொள்ளக் காரணமாயிருந்தவர் தானுபதிப் பிள்ளைதான் என்பது பானர்மென் நினைப்பு. எனவே, பிடிபட்ட தானுபதிப் பிள்ளையின தலையை வெட்டி அதைப் பாஞ்சாலங் குறிச்சி மககள் காண பவனி கொண்டு செல்லவேண்டுமென்று பானர்மென் உத்தரவிட்டான் ஆனல், தண்டனை உடனே நிறைவேற்றப்படாமல் தள்ளி வைககப்பட்டது.

வீரபாண்டியனுடன் சேர்ந்து கம்பெனி ஆதிக கத்தை எதிர்த்ததாகக கூறி நாகலாபுரம் பாளையக

காரரின் தம்பியான சௌந்தர பாண்டியனைக் கைது செய்தான் தளபதி பானர்மென்.

முன்னரே காவலில் வைக்கப்பட்டிருந்த தானுபதிப்பிள்ளை, சௌந்தர பாண்டியன் ஆகிய இருவரது குற்றங்களையும் விசாரித்துத் தீர்ப்பளிக்க தென்னாட்டிலுள்ள எல்லா பாளையக்காரர்களின் ஆலோசகர்களையும் வரவழைத்து 'கோர்ட்' நடத்தினான் தளபதி பானர்மென்.

தானுபதிப் பிள்ளையும், சௌந்தர பாண்டியனும் விசாரிக்கப் பட்டனர் அவ்விருவரும் தாங்கள் கிழக்கிந்தியக கம்பெனிககு விரோதமாகச் செய்த குற்றங்களை ஒப்புக்கொண்டனர். ஆயினும், சௌந்தர பாண்டியன் தான் செய்த குற்றங்களுககாக வருத்தம் தெரிவிகக மறுத்துவிட்டான. தானுபதிப் பிள்ளை மட்டும், வீரபாண்டியனுககும் தனக்கும் கம்பெனியாரை எதிர்ப்பதில் கருத்து வேற்றுமை உண்டென்றும் அவனிடமிருந்து தான் விலகிக கொள்ள நினைத்திருந்த நேரத்தில் சிறைப்பட்டதாகவும் சமாதானம் கூறினார்.

அந்த சமாதானத்தை ஏற்றுக கொள்ள மறுத்து, தானுபதிப் பிள்ளை, சௌந்தரபாண்டியன் ஆகிய இருவருககும் தூககு தண்டனை விதித்ததோடு, அவர்களது உடைமைகளையும் பறிமுதல் செய்யுமாறு உத்தரவிட்டான் தளபதி பானர்மென். வீரபாண்டியன் 'ராஜத்துரோகி' என்றும், அவனுக்கு யாரும் அடைக்கலம் தரக்கூடாதென்

றும் தென்னாடு முழுவதும் பறையறைந்து அறிவிக்கும்படி தனது கீழதிகாரிகளுக்கு ஆணையிட்டான். இவ்வளவு செய்துங்கூட, வீரபாண்டியன் பிடிபடவில்லையே என்ற வேதனை, வெள்ளையர்கள் அத்தனை பேரையும் வாட்டியது. எப்படியேனும் அவனை விரைவில் சிறைபிடித்துச் சென்னைக்குக் கொண்டுவர வேண்டுமென்று தளபதி பானர்மெனைத் தொந்தரவு செய்தவண்ண மிருந்தனர் கம்பெனித் தலைவர்கள்.

கட்டபொம்மன் புதுக்கோட்டை சமஸ்தான எல்லையிலுள்ள காடுகளில் சுற்றித் திரிவதாகவும் அங்குள்ள மறவர்களைப் படை திரட்டி விரைவில் பாஞ்சாலங்குறிச்சி செல்லப் போவதாகவும் தளபதி பானர்மெனுக்குத் தகவல் கிடைத்தது. எனவே, கட்டபொம்மன் இருக்குமிடந் தேடி, செய்தியனுப்புமாறு புதுக்கோட்டை மன்னனுக்குக் கடிதம் எழுதினன் தளபதி பானர்மென்.

இதற்கிடையில் பாஞ்சாலங் குறிச்சியில் வெள்ளையரின் பேயாட்சி தலைதூக்கியது. வீரபாண்டியனின் சொந்த சொத்துகள் உள்பட அவனது உறவினரின் உடைமைகள் அனைத்தும் பறிமுதல் செய்யப்பட்டன. கம்பெனிக்கெதிரான கலகத்தில் ஈடுபடாத சிலரது சொத்துக்கள்கூட சிப்பாய்களால் சூறையாடப்பட்டன வீரபாண்டியனின் அன்னை, தம்பியர், மனைவி ஆகியோர் உள்பட அவரது உறவினர் இருபத்திரண்டுபேர் ஆண்களும் பெண்களுமாக, டேவிசன் துரையிடம் அடைக்கலம்

புகுந்தனர். பாஞ்சாலங் குறிச்சிக் கோட்டை பானர்மென் வசப்பட்டதே இவர்களது அடைக கலத்துக்குக் காரணம்.

டேவிசன் என்ற வெள்ளையர், வீரபாண்டிய னின் நெருங்கிய நண்பர் என்பதும், முன்னொரு முறை வீரபாண்டியனுககாகப் பரிந்து, கலெக்டர் ஜாக்சனுக்குத் தண்டனை வாங்கித் தந்தவர் என்ப தும் இங்குக் குறிப்பிடத்தக்கவை. ஆனால், இந்தச் சமயம் டேவிசனும் கம்பெனி பக்கம் சேர்ந்து கொண்டார். தளபதி பானர்மென் கேட்டுக கொண்டபடி, வீரபாண்டியனின் குடும்பத்தார் அவ் வளவு பேரையும் கம்பெனியாரிடம் ஒப்புவித்துவிட் டார். கம்பெனி அதிகாரிகள் அவர்களைச் சென் னைக்கு அனுப்பி அங்கு காவலில் வைத்தனர்.

இந்த சம்பவத்திற்குப் பின்னர், தளபதி பானர்மென் ஓர் ஆணைபிறப்பித்தான். அதில், தென்னாடெங்குமுள்ள மக்கள் ஆயுதம் தாங்கும் உரிமையை இழந்துவிட்டார்கள் என்றும், அவர் களது உயிரையும் உடைமையையும் பாதுகாக்கும் பொறுப்பை கிழக்கிந்தியக் கம்பெனியாரே ஏற்றுக் கொண்டுவிட்டதால், இனி எவரும் ஆயுதம் வைத் திருக்கத் தேவையில்லை என்றும், மீறி யாராவது ஆயுதம் வைத்துககொண்டால், அவர்களது தலைகள் வெட்டப்படுமென்றும் கூறியிருந்தான். இந்த ஆணைபிறந்தது 1799-ம் ஆண்டு செப்டம்பர் 18-ம் நாளாகும். தமிழினம், தோன்றிய காலந்தொட்டே ஆயுதந் தாங்கும் உரிமை படைத்திருந்தது. வளையல்

அணிந்த பெண்கள்கூட வாளேந்தும் வழக்கம் தமிழகத்தில் உண்டு. தமிழர், தங்கள் உயிரினும் சிறந்ததாகக் கருதிய அந்த உரிமையைத் தளபதி பானர்மென் ஓர் உத்தரவின்மூலம் ஒழித்துவிட்டான். தமிழரின் வாழ்வைப் பறிக்கவேண்டுமானால், அவர்கள் வாளேந்தும் உரிமையை முதலில் பறித்தாகவேண்டும் என்ற உண்மையைத் தளபதி பானர்மென் நன்கு அறிந்திருந்தான் போலும்!

## வீரபாண்டியன் சிறைப்பட்டான்

"புதுக்கோட்டை சமஸ்தான வட்டாரத்தில் தான் கட்டபொம்மன் திரிந்துவருகிறான்; அவனை எப்படியேனும் கண்டுபிடித்துக் கைது செய்யுங்கள்!" என்று தளபதி பானர்மென், தனக்கு அவசரச்செய்தி அனுப்பியதைக கண்டு புதுக்கோட்டை மன்னன் பூரிப்படைந்தான். கட்டபொம்மனைப் பிடித்துக் கொடுத்தால் கிழக்கிந்தியக் கம்பெனியாரின் தயவு தனக்கு என்றென்றும் நிலைத்திருக்குமென்ற எண்ணமே அவனது பூரிப்புக்குக் காரணம்.

புதுக்கோட்டை சமஸ்தானம் முழுவதும் ஒற்றர்களை ஏவி, கட்டபொம்மனைப்பற்றித் துப்பறியச் செய்தான் தொண்டைமான். இந்த நேரத்தில் வீரபாண்டியன், புதுக்கோட்டை சமஸ்தானத்திற் குட்பட்ட திருக்களம்பூர் எனும் ஊரில் தங்கியிருந்

தான். அங்கிருந்து திருச்சிக்குச் செல்வதே அவனுடைய நோக்கம். ஆனால், தானும் தன் துணைவர்களும் ஏறிவந்த குதிரைகள், நெடுவழி நடந்து களைப்புற்றிருந்ததாலேயே அவன் திருக்களம்பூரில் தங்க நேர்ந்தது.

அப்படி அங்கு தங்கியிருந்த நேரத்தில் வீர பாண்டியனின் மதி மாறியது. புதுகோட்டைத் தொண்டைமானின் மனநிலை யறியாது, அவனை என்றும்போல் நண்பனாக எண்ணி, திருச்சி செல்லும் வழியில் புதுக்கோட்டைக்குச் சென்று அவனைப் பார்ப்பதற்கு முடிவு செய்தான். ஆங்கிலேயரின் அதிர்ஷ்டம் வீரபாண்டியனின் மனத்தை மாற்றியது போலும்!

வீரபாண்டியன், திருக்களம்பூரிலிருந்து புறப்பட்டு புதுக்கோட்டையை நோக்கிச் செல்லலானான். வழியில், புதுகோட்டை மன்னன் ஏவியிருந்த சிப்பாய்களைச் சந்தித்தான். அந்தப் பட்டாளத்திற்குத் தலைவனாயிருந்தவன் பெயர் முத்து வைரவ அம்பலக்காரன். இவன், வீரபாண்டியனைச் சந்தித்ததும் தன் உள்ளத்திலுள்ள கள்ளச் சிந்தையைக் காட்டாமல், உறவினன்போல் நயந்து உரையாடினான்.

“எங்கள் மன்னர் தங்களைக் காணவிரும்பி அழைத்து வரும்படி எங்களுக்கு ஆணையிட்டார். வரும் வழியிலேயே தங்களைப் பார்க்க நேர்ந்தது. இதுவும் எங்கள் நல்வினைப்பயனே!” என்று

பல்லைக் காட்டிப் பரிவுடன் கூறினன். தன்னைத் தேடி வந்தவனின் வஞ்சநெஞ்ச மறியாத வீர பாண்டியன், “ நல்லது ; நாமும் அவரைக் காணும் கருத்துடனே தான் ,வந்துகொண் டிருக்கிறோம். போவோம், வாருங்கள் ” என்று பதிலுரைத்து அவர்களுடன் சேர்ந்து புதுக்கோட்டை அரண் மனைக்கு வந்தான். வீரபாண்டியனின் வருகை யறிந்த மன்னன், அரசனுக்குரிய மரியாதையுடன் அவனை வரவேற்று, தகக உபசாரங்களைச் செய்தான்.

பிறகு, வீரபாண்டியன் சிக்கியுள்ள செய்தியைக் கடிதமூலம் தளபதி பானர்மெனுக்குத் தெரிவித் தான். அந்தக் கடிதத்தில், வீரபாண்டியன் வலிய வந்து சிக்கியதாகக் கூறாமல், அவனைக் கஷ்டப் பட்டுத் தேடி, காட்டிலே அவனுடன் கடும்போர் புரிந்து பின்னர் கைது செய்ததாக, வெள்ளையர்கள் தனது ‘வீரத்’தை மெச்சும் வண்ணம் எழுதினன்.

‘ வீரபாண்டியக் கட்டபொம்மன் சிறைப்பட் டான் ’ என்று செய்தி கிடைத்ததும், பானர் மென் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. வெள்ளை ஏகாதிபத்திய மாளிகைக்கு அஸ்திவார மிடும்போதே அதைத் தகர்த்தெறியத் துணிந்த வீரன் பிடிபட்டால், கொள்ளையடிககவந்த கூட்டம் மகிழ்ச்சி அடையத்தானே செய்யும் !

தொண்டைமானின் கடிதம் கிடைத்த மறு கணமே, நன்கு பயிற்சி பெற்ற வீரர்களாக

கொண்ட பெரும் படையினரை புதுக்கோட்டைக்கு அனுப்பி வைத்தான் பானர்மென். 1799-ம் ஆண்டு அக்டோபர் முதல்தேதியன்று பகல் மூன்று மணிக்கு பானர்மெனின் படைகள் புதுக்கோட்டை அரண்மனையைச் சூழ்ந்து கொண்டன. இந்தப் படைகளில் எட்டயாபுரத்துப் படை வீரர்களும் கலந்திருந்தனர்.

அந்த நேரத்தில் வீரபாண்டியன் இருந்த நிலை என்ன? அந்தோ! அதைக் கூற நம் நெஞ்சம் அஞ்சுகிறது. புதுக்கோட்டை மன்னன் செய்திருந்த ஏற்பாட்டின்படி வீரபாண்டியனும் அவனது தம்பியருள்பட நண்பர் எழுவரும் எண்ணெய் முழுக்காடி, இன்சுவை உணவருந்தி மாளிகையின் மேற்பகுதியில் அயர்ந்து உறங்கிக்கொண்டிருந்தனர். ஆம், அது நாடாளும் தமிழ் வேந்தனின் அரண்மனை யென்று நம்பி உறங்கினர்; அந்நியருக்குத் துணைசெய்யும் சதிகாரனின் சூழ்ச்சி என்பதை அவர்கள் அப்போது உணரவில்லை.

வீரபாண்டியன், புதுககோட்டை மாளிகையில் புகுந்த ஏழாவது நாளில்தான் பானர்மெனின் படைகள் அந்த மாளிகையை அணுகின. அதற்கிடையில் வீரபாண்டியன், புதுக்கோட்டை மன்னனிடம் விடை பெற்றுச் செல்ல பன்முறை முயன்றதுண்டு., அப்போதெல்லாம் தொண்டைமான், "என்ன அவசரம்; இருந்துபோங்கள்!" என்று வீரபாண்டியனின் அறிவை மயக்கும் வண்ணம் 'அன்பா'கப் பேசி வந்தான்.

புதுக்கோட்டை தொண்டைமானின் எண்ண மறியாத வீரபாண்டியன், இப்போது பகைவரின் படைகளால் சூழப்பட்டுவிட்டான். அவனிட மிருந்த ஒரே ஆயுதம், அவனது கைவாளே யாகும். கண்ணுறங்கும் நேரமாதலால் அதுவும் கைவசமில்லை. ஆனால், அவனைச் சூழ்ந்திருந்த கம்பெனிப் படைகள், புதுக்கோட்டைப் போர் வீரர்கள், எட்டயாபுரத்து மல்லர்கள் ஆகியோரிடம் வகை வகையான ஆயுதங்கள் கணக்கின்றி இருந் தன.

அந்தப் படையினரில் பலர், வீரபாண்டியன் உறங்கிக்கொண்டிருந்த மேல்மாடிககு விரைந்தனர். இவர்கள் மெத்தைப் படியேறும் சத்தம் கேட்டு வீரபாண்டியனும், அவனது துணைவர்களும் விழித் துக கொண்டனர் விழித்தவர்களின் கண்கள், வேல்தாங்கி நின்ற படைகளைக கண்டதும் சீற்றத் தால் சிவந்தன ஆயினும், என்ன செய்வது? கையில் போர்க கருவியற்று பெரும் படையினரிடம் சிககிய அவர்கள் செயலற்றுத் திகைத்துநின்றனர்.

கண நேரத்தில், வீரபாண்டியன் திகைப்பு நீங்கிப் பகைவர்களைப் பார்த்து, "வெறுங்கையோடு நிற்கிறோம். உங்கள் எண்ணம் எதுவோ, அதன் படி செய்யலாம்!" என்று வீரம்ததும்ப வெகுண்டு உரைத்தான். வீரபாண்டியன், தங்களை எதிர்த்துக் கடும்போர் புரிவானென்று எதிர்பார்த்து வந்த பகைப்படையினர், அவனது சகதியற்ற நிலைகண்டு மகிழ்ச்சியடைந்து, வீரபாண்டியன் கைகளுக்கு

விலகிவிட்டனர். ஆம், அரசாளும் மன்னன், அந்நியரின் கைதியானான். வீரவாள் பிடித்த அவ் வேந்தனது கைகள், இரும்பு விலங்கைத் தாங்கின. வீரபாண்டியனின் கைகள் விலங்கு தாங்கும் நிலை கண்டு, அண்டையிலிருந்த ஊமைத்துரை ஆத்திரங் கொண்டான். ஆனால் "அஞ்சுவது அஞ்சாமை பேதைமை" என்னும் குறளின் பொருளறிந்த தமிழனான வீரபாண்டியன், ஆத்திரங்கொண்ட தம்பிக்கு ஆறுதல் கூறி அடக்கினான்.

வீரபாண்டியனும், அவனது துணைவர்களும் மேல்மாடியிலிருந்து கைதிகளாகக் கீழே கொண்டு வரப்பட்டனர். வீரண்மனைக்கு வெளியே வந்ததும், வீரபாண்டியனின் கண்கள், காட்டிகொடுத்த புதுக்கோட்டை மன்னனைக் கடைசி முறையாகக் காண விரும்பின. வீரபாண்டியனுக்குள்ள ஆத்திரத்திற்கு அளவேயில்லை. ஆயினும், "இடுக்கண் வருங்கால் நகுக!" என்ற வள்ளுவரின் ஆணைக்கு அஞ்சி நடப்பவன்போல், சீற்றத்தை மறைத்துச் சிறுநகை புரிந்து, "நண்பர் விஜய ரகுநாதத் தொண்டைமான் எங்கே?" என்று அரண்மனைக் காவலர்களைக் கேட்டான். புதுக்கோட்டை மன்னன், வீரபாண்டியனின் எதிரே இருக்க அஞ்சி மறைந்துகொண்டான். எனவே, வீரபாண்டியனுக்கு "இல்லை" என்ற பதிலே கிடைத்தது. ஆயினும், வீரபாண்டியன் அரண்மனையாளரை நோக்கி, "நண்பர் தொண்டைமான் என்பால் கொண்ட

அன்பால்புரிந்த தொண்டு மறத்தற்கு அரியது! அன்பனென்று நம்பி அடைக்கலம் புகுந்த எனக்கு இவர் செய்ததுபோன்ற 'பேருதவி' வேறு எவரே செய்வர்! இந்தப் 'பேருதவி'க்கு நன்றி கூறி விடைபெறவே அவரைத் தேடுகிறேன்; கிடைக்க வில்லை. நாழி ஆகிறது; போகிறேன். எனது நன்றியை விஜய ரகுநாதத் தொண்டைமானுக்குத் தெரிவியுங்கள்" என்று கூறினான் ஆத்திரங் கொண்ட நிலையிலும்,

இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று

என்ற குறள்வழி நின்று இன்சொல்மூலம் தனது எரிச்சலைக் காட்டினான் வீரபாண்டியன். அடைக் கலம் புகுந்த ஒரு தமிழனைக் காட்டிக் கொடுக்கும் இன்னொரு தமிழனும் தமிழகத்தில் உண்டு என்ப தைக கண்ணாரக கண்டு சிந்தை குளிர்ந்தனர் வெள்ளையர் ஆனால், அதே நேரத்தில் "என்னைக் காட்டிககொடுத்ததன் மூலம், தமிழகத்திற்குப் புதுககோட்டை மன்னன் அழியாப் பழி தேடி விட்டானே!" என்று ஆத்திரங் கொண்டான் வீர பாண்டியன். அந்தோ, தமிழகமே! 'தமிழனைத் தமிழனே காட்டிக் கொடுப்பான், இதற்கு வேந்தனும் விதிவிலக்கல்ல' என்ற பழியிலிருந்து நீ விடுதலை பெறும் நாள் எந்நாளோ!

## கொடுங்கோலின் பேயாட்டம்!

வீரபாண்டியக் கட்டபொம்மனைப் பிடித்துக் கொடுத்ததற்காக, விஜய ரகுநாதத் தொண்டைமா னுக்கு, கிழக்கிந்தியக் கம்பெனியார் ஏற்கனவே

செய்திருந்த விளம்பரப்படி பலவிதமான பரிசுகளைத் தந்தனர். நாட்டு வீரர்களைக் காட்டிக் கொடுப்பவர்களுக்கு—நாட்டின் விடுதலை இயக்கத்திற்கு இடையூறு செய்யும் துரோகிகளுக்கு—பதவிகளும், பட்டங்களும், பரிசுகளும் தரும் அரசியல் சூழ்ச்சியைத் தமிழகத்தில் துவக்கிவைத்த முதல் கொடுங்கோலன் தளபதி பானர்மென்தான் போலும்! அது போலவே, அரச கோலத்திலே நின்று துரோகத்தனத்திற்கு அந்நியரிடம் சன்மானம் பெற்ற முதல் தமிழன் தொண்டைமான் பகதூரே யாகலாம்.

வீரபாண்டியனோடு பிடிபட்டவர்கள், ஊமைத்துரை, முத்தையா, குமாரசாமி, முத்துக்குமாரசாமி, மெய்க் காப்பாளர்களான வீரண்ண மணியக்காரன், அண்ணன் என்பவர்களாவர்.

தளபதி பானர்மென், வீரபாண்டியனைச் சிறைப்படுத்தினானென்றாலும், அவனை உடனே தண்டிக்கத் துணியவில்லை. வீரபாண்டியனுக்கு விதிக்கும் தண்டனையால் திருநெல்வேலிச் சீமையில் மீண்டும் புரட்சி பொங்கி எழுமோவென்று அஞ்சினான். எனவே, நாட்டில் அமைதியை நிலைநாட்டுவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதையே தனது முதல் வேலையாகக் கருதினான். கம்பெனிப் படைகளைப் பல பகுதிகளாகப் பிரித்து, தக்க தலைவர்களின் கீழ் தமிழகத்தின் பலவேறு பகுதிகளுக்கும் அனுப்பி வைத்தான்.

பின்னர் தளபதி பானர்மென் தென்பாண்டி நாட்டிலுள்ள பாளையக்காரர்களை கயத்தாற்றுக்கு

வரவழைத்து சபை கூட்டினன். அந்தச் சபையில், பாளையக்காரர்களுக்கு, கிழக்கிந்தியக கம்பெனியின் சார்பில் பானர்மென் விடுத்த கட்டளைகளாவன :

பாளையக்காரர்கள் அனைவரும் தங்களிடமுள்ள போர்க் கருவிகளை யெல்லாம் கிழக்கிந்தியக் கம்பெனி அதிகாரிகளிடம் ஒப்புவிக்க வேண்டும்.

பாளையங்களிலுள்ள கோட்டைகளை யெல்லாம் இடித்துத் தகர்த்துத் தரைமட்ட மாக்க வேண்டும்.

பாளையங்களின் சொத்து, நிர்வாகச் செலவு, அதிகாரிகள் - காவலர்களின் எண்ணிக்கை முதலியவற்றைப் பற்றிய விவரமான கணக்கை, கம்பெனி அதிகாரிகளுக்கு உடனடியாகத் தரவேண்டும்.

பாளையங்களின் கோட்டைகளை இடித்துத் தள்ள வேண்டுமென்று பானர்மென் ஆணையிட்டதற்குக் காரணம், அவை என்றேனும் ஒருநாள் ஏகாதிபத்திய எதிர்ப்புப் பாசறைகளாகிவிடலாம் என்றஅச்சத்தாலேயாகும். வீரபாண்டியன் சிறைப்பட்ட பிறகு தென்பாண்டி நாட்டில் வெள்ளை அதிகாரிகளை அதட்டிப் பேச ஆள் இல்லை. எனவே, பாளையக்காரர்க ளெல்லோரும் பானர்மென் உத்தரவுப்படி நடப்பதைத்தவிர வேறு வழியற்றவர்க ளாயினர்.

வீரபாண்டியன் பிடிபட்ட ஐந்து நாட்களுக்குள், 'அமைதி'யை நிறுவும் படைகள் அந்தந்தப் பகுதிகளில் முகாம்செய்துவிட்டன. பாளையககாரர்கள் கயத்தாற்றில் இருக்கும்போதே பாளையங்

களின் கோட்டைகளெல்லாம் இடிக்கப்பட்டு விட்டன. போர்க் கருவிகளும் பறிமுதல் செய்யப்பட்டன. அந்தோ! வீர மறவர்களின் வேல் பிடித்த கைகளெல்லாம் வெறுங்கைகள் ஆயின.

இனி, வீரபாண்டியனை என்ன செய்தாலும் நாடு கொந்தளித்தெழாது. மக்கள் அழுது துடிக்கலாம்; ஆனால், ஆத்திரங் கொண்டு போர்புரிய முடியாது எனத் திருப்தியடைந்தான் பானர்மென். பாஞ்சாலங் குறிச்சியிலிருந்து பதினாறு மைல் தூரத்திலுள்ள கயத்தாறு என்னும் ஊருக்கு வீரபாண்டியன் கொண்டு செல்லப்பட்டான். அங்கு முன்னெச்சரிகையாகக் கம்பெனிப் படைகள் அதிக அளவுககு சேர்த்து வைககப்பட்டிருந்தன. இனி, பானர்மெனுககிருந்த ஒரே வேலை, வீரபாண்டியனைப் பழிவாங்குவதே யாகும்.

வீரபாண்டியன் கைது செய்யப்பட்ட செய்தியைச் சென்னை கவர்னருககு அனுப்பி, மேல் உத்தரவை எதிர்பார்த்திருந்தான் தளபதி பானர்மென். பத்து நாட்களுககுப் பிறகு கவர்னர் லார்டு எட்வர்ட் கிளைவ், பானர்மெனுக்கு ஒரு கட்டளை அனுப்பினான். கிழக்கிந்தியக கம்பெனிக்கு வீரபாண்டியன், இழைத்துள்ள தீங்குகளை விசாரித்து அவனைத் தண்டிக்குமாறும், தண்டனை நிறைவேற்றப்படும் பொழுது திருநெல்வேலிச் சீமையிலுள்ள பாளையக்காரர்கள் அவ்வளவு பேரும் அருகிருந்து காண்பதற்கு ஏற்பாடு செய்யுமாறும் அந்தக் கட்டளையில் குறிப்பிட்டிருந்தான். வீரபாண்டியன் தண்டிக்கப்

படுவதை பாளையக்காரர்களெல்லோரும் பார்க்க வேண்டுமென்றது எதற்காகத் தெரியுமா? ஆங்கில அரசின் செங்கோல் சிறப்பைத் தெரிவிப்பதற்காக அல்ல; ஏகாதிபத்திய கொடுங்கோலைக் காட்டி பாளையக்காரர்களைப் பயமுறுத்தவே யாகும். மேலும் மேலும், 'கட்டபொம்மன்'கள் தோன்றாம லிருக்க வேண்டு மல்லவா?

## தூக்குத் தண்டனை

கவர்னரின் ஆணைப்படி பாளையக்காரர்களெல்லோரையும் பார்க்க வைத்து, தானே நீதிபதியாக அமர்ந்து வீரபாண்டியனைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்திவைத்து விசாரணை நடத்தினான், தளபதி பானர்மென். ஆம், நாடாளும் உரிமை படைத்த தமிழ் வீரன் குற்றவாளிக் கூண்டில்; நாடோடியாக வந்த வெள்ளைப் பரதேசி நீதிபதி ஆசனத்தில்! தமிழகம் கண்டிராத வேதனைக் காட்சி இது. இந்த அநீதியைக் கண்களால் கண்டும் ஆத்திரம் கொள்ளாமல் அமைதியாக வீற்றிருந்தனர் பாளையக்காரர்கள் 16—10—1799 காலை பத்து மணிக்கு விசாரணை தொடங்கியது. நீதிமன்றத்தில் நிகழ்த்தப்படும் சடங்குகள் அனைத்தும் அந்த அநீதி மன்றத்திலும் ஒன்று விடாமல் நிகழ்த்தப்பட்டன.

வீரபாண்டியன்மீது கிழக்கிந்தியக் கம்பெனியின் சார்பாகக் குற்றச்சாட்டுப் பத்திரம் படிக்கப் பட்டது. அதில் கண்ட குற்றங்கள் பின்வருமாறு:

கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆணைப்படி வரி செலுத்த மறுத்தது.

கலெக்டர் ஜாக்ஸன் பேட்டிக்கு அழைத்தபோதெல்லாம் படைகள் புடைசூழ, உடைவாளுடன் வர அனுமதித்தாலன்றி பேட்டிக்கு வர முடியாதென்று கூறி, கம்பெனியை அவமதித்தது.

கிழக்கிந்தியக் கம்பெனிப் படைகளை எதிர்த்துப் போரிட்டு, துணைத் தளபதி காலன் உள்பட கம்பெனி வீரர்கள் பலரைக் கொன்றது.

இந்தக் குற்றச்சாட்டை உறுதிப்படுத்த நான்கு சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர்.

இராமலிங்க முதலியார் (தளபதி பானர்மெனின் மொழி பெயர்ப்பாளர்) சாட்சியம் கூறுகையில், 5—9—1799-ல் கம்பெனிப் படைகள் பாஞ்சாலங் குறிச்சிக் கோட்டையை முற்றுகை யிட்டபோது, பானர்மென் கொடுத்த சரணாகதிக் கட்டளையை வீரபாண்டியனுக்குக் காட்டி, அதன்படி அவரது படைகளை யெல்லாம் பானர்மெனிடம் ஒப்புவித்து, கம்பெனியாருக்குப் பணிந்து வாழும்படி தான் கூறியதாகவும், வீரபாண்டியன் அதற்கு மறுத்த தோடு, தளபதி பானர்மென் தனக்குப் பணிந்து போக வேண்டுமென்று பதிலளித்ததாகவும் கூறினார். மற்றும், இப்ராகிம் கான் (பானர்மெனின் அவுல்தார்), கெடிவெட்டூர் நாய்க்கர் (வீரபாண்டியனின் உறவினர்), சுவாமி (கம்பெனியின் கீழ்த்தர அதிகாரி) ஆகிய மூவரும், முதல் சாட்சி கூறியவற்றை வலியுறுத்தினர்.

"உன்மீதுள்ள குற்றச்சாட்டுகளை மறுத்து நீ ஏதாவது கூற விரும்புகிருயா?" என்று தளபதி பானர்மென் கேட்டதற்கு, வீரபாண்டியன் அளித்த வாக்குமூலம் வருமாறு :

"சாட்சிகள் கூறியவை அனைத்தும உண்மையே. ஆனால், அவற்றை நான் குற்றங்களாகக் கருதவில்லை.

எனக்கு முன்னே பாஞ்சாலங் குறிச்சியை ஆண்ட பாண்டிய மரபின் வேந்தர்கள், எந்தக் காலத்திலும் எவரது ஆதிக்கத்திற்கும் கட்டுப்பட்டு வாழ்ந்ததில்லை; கப்பம் செலுத்தியது மில்லை. எனவே, அவர்களது வழிவந்த நான் அந்நியராகிய உங்களுக்கு வரி செலுத்த மறுத்தது எப்படிக் குற்றமாகும் ?

தேடி வந்தவர்களை மகிழ்ச்சியுடன் வரவேற்று உபசரிப்பதே எங்கள் வழக்கம். அப்படிக்கின்றி, பிறர் இருக்குமிடத்திற்கு வலிந்து சென்று பார்ப்பது எங்கள் மரபுக்கு இழுக்கு. ஆகவே, நான் கலெக்டரை பேட்டிகாண மறுத்ததைக் குற்றமென்று கூறுவது எந்த நியாயத்தைச் சேர்ந்தது?

பாஞ்சாலங்குறிச்சி, எனது உரிமைத் திருநாடு. அதைப் பகைவரிடமிருந்து காப்பது எனது கடமை. எனவே, கம்பெனிப் படையினர் அதைத் தாக்கியபொழுது, அவர்களை எதிர்த்துப் போரிட்டது எப்படிக் குற்றமாகும் ? அதைக் குற்றமென்று கூறுவதுதான் குற்றம்."

வீரபாண்டியன் கைவிலங்குடன் கைதிக் கோலத்தில் நின்றாலும், அரசருக்குரிய தோரணையிலேயே விளங்கினான். அவனது கம்பீரத் தோற்

தைக் கண்டும், கனல் கக்கும் பேச்சைக் கேட்டும் பானர்மெனின் வஞ்ச நெஞ்சம் மேலும் மேலும் வலிமை பெற்றது. தன் எதிரே நிற்பது கட்டபொம்மன் அல்லன், ஆங்கில ஆதிக்கத்தை அழிக்கப் பிறந்த காலன் என எண்ணினன் அவ் வெள்ளைத் தளபதி. எனவே, "நீதி"யின் பெயரால் வீரபாண்டியனுக்குத் தூக்குத் தண்டனை விதித்திருப்ப தாகத் தீர்ப்பளித்தான்.

பானர்மென் கூறிய தீர்ப்பைக் கேட்டு, வழக்கைக் கவனிக்கக் கூடியிருந்த மக்களின் நெஞ்சம் பதைத்தது. ஆனல், அரசனையும், ஆயுதந் தாங்கும் உரிமையையும் இழந்து அகதிகளாக நிற்கும் அவர்கள், படைபலம் வாய்ந்த வெள்ளை யரை என்ன செய்ய முடியும்? தனக்கு விதிக்கப் பட்ட தண்டனையைக் கேட்டு வீரபாண்டியக் கட்ட பொம்மன் நெஞ்சந் துடித்தான். என்றாலும், நிலை குலைந்து புலம்பவில்லை. பற்களை நறநறவென்று கடித்து தனது வீரத்திருவிழிகளால் பானர்மெனை ஒருமுறை உற்று நோக்கினன். அதற்குள் காவலர்கள் அவ்வீரனை அப்பால் கொண்டு சென்றனர்.

## படுகொலை!

தீர்ப்புக் கூறப்பட்ட ஒரு மணி நேரத்திற்குள் அதை நிறைவேற்ற ஆயத்தமாயினர் கம்பெனி அதிகாரிகள். பாஞ்சாலங் குறிச்சி வேந்தன் வீர பாண்டியனை-தமிழினத்தின் வீரமெல்லாம் ஒருங்கே திரண்டு ஒருருவாகிய உத்தமனை - கொல்வதற்

கெண்டுறை வளர்ந்திருந்த ஒரு புளிய மரத்தருகே அவனைக் கொண்டு சென்றனர். செல்லும் வழியில் வீரபாண்டியனைக் காட்டிக் கொடுத்த எட்டப்ப நாய்க்கன் உள்பட, திருநெல்வேலி சீமைப் பாளையககாரர்கள் அனைவரும் இருமருங்கும் அணி வகுத்து நிறுத்தப்பட்டிருந்தனர், கண்காட்சிப் பதுமைகளைப்போல! வீரபாண்டியனுக்குப் பிறகும் எந்தப் பாளையககாரனேனும் ஆங்கிலேயரை எதிர்க்கப் புறப்பட்டால், அவனுககும் இதே கதிதான் என்பதைத் தெரிவிப்பதற்காகவே இந்த அணி வகுப்பு!

வீரபாண்டியன் தூக்குமரத்தை அணுகும் போது, அங்கே நின்றுகொண்டிருந்த எட்டயாபுரம் பாளையககாரனை நோக்கிக் குறுநகை புரிந்தான். "நான் வீரனாக மாளப்போகிறேன்; என்னை வருங் காலத் தமிழகம் வாழ்த்தும். நீ கோழையாகி அந் நியருக்குக் குற்றேவல் செய்கிறாய்; உன் வாழ்வும் ஒரு வாழ்வா!" என்பதே அந்தச் சிரிப்பின் பொருள் போலும்.

தூக்குமரத்தை அணுகிய வீரபாண்டியன், அங் கிருந்த நாற்காலிமேல் ஏறி நின்றான். தலைக்கு மேலே உயிரைக் கொல்லும் பாம்பைப்போல் சுருக் குக் கயிறு தொங்கிக்கொண்டிருந்தது. இந்தக் கோரக் காட்சியைக் கண்டு அங்கு கூடியிருந்த மக்கள், கண்களைப் பொத்திக்கொண்டு கதறியழுத னர். ஆனால், 'பாளையக்காரப் பதுமைகள்' மட் டும் கண்களைத் திறந்தவண்ணமே நின்றன.

இந்தக் காட்சியைக் காண்பிப்பதற்காகவே நிறுத்தி வைக்கப்பட்ட அவர்களுக்கு, கண்களை மூடத்தான் உரிமை ஏது!

வீரபாண்டியனின் கண்கள் சுற்றுமுற்றும் சுழன்றன. ஆசைத் தம்பி - அண்ணனுக்கு உற்ற துன்பமெல்லாம தன்னுடையதாகக கொண்ட அன்புத் தம்பி - ஊமைத்துரையைக காணவே, வீரபாண்டியனின் கண்கள் சுழன்றன; அவனது உள்ளம் கொல்லன் உலைபோலக கொதித்தது. புதுக் கோட்டை மன்னனின் மாளிகையில் கைதியாக்கப் பட்ட பின்னர், கம்பெனி அதிகாரிகள் ஊமைத் துரையைக் கட்டபொம்மனிடமிருந்து பிரித்து பாளையங்கோட்டைச் சிறையில் காவலில் வைத்தனர். "தம்பியுடையான் பகையஞ்சான்" என்னும் பழமொழியைத் தன் வாள்முனையில் வாழச் செய்து, அண்ணனுக்குப் புகழ் தேடித்தந்த அந்த ஊமைத்துரை, ஆவி பிரியும் நேரத்தில் தன் அண்டையில் இல்லையே என்று ஆருத் துயரடைந்தான் வீரபாண்டியன்.

பாஞ்சாலங் குறிச்சியின் கடைசி வேந்தனை கட்டபொம்மன் தன்னுடைய அந்திய காலத்தில் சிந்தை நொந்து கூறியவை பின்வருமாறு :

"அந்நியன் முன்னே கைதியாய் நிற்கவும், அவன் அளித்த தீர்ப்புப்படி புளியமரத்தில்தொங்கித் துடிதுடித்து மாளவும்நேர்ந்துள்ள இந்நிலை கண்டு நான் வருந்தவில்லை. ஆனல், பாஞ்சாலங்குறிச்சியை விட்டு வெளியேருது இறுதி வரை கோட்டைக குள்ளிருந்தே கம்பெனிப் படையுடன்

போராடி யிருப்பேனாயின், பகைவரால் வெட்டப்பட்டு வீரமரணம் அடைந்திருப்பேன். அந்த வாய்ப்பை இழந்ததற்காகவே வருந்துகிறேன்."

இதைக கூறிமுடித்ததும், இரண்டு நிமிஷங்கள் கண்மூடி மௌனியானான் கட்டபொம்மன். அந்த மௌனத்தில் அவன் செய்த பிரார்த்தனை, அந்நியரின் ஆதிக்கத்திலிருந்து தனது அன்னை நாடு மீள வேண்டுமென்பதைத் தவிர, வேறு எதுவாயிருக்கும் ?

பிரார்த்தனை முடிந்ததும வீரபாண்டியனின் கண்கள் திறந்தன. ஆ, என்ன துணிச்சல்! தனது கரத்தை - அந்தோ! கன்னித் தமிழால் கவிபாடி வந்த புலவருக்கெல்லாம் வரையாது வழங்கிய தன் வலது கரத்தை - மேலே உயர்த்தி அழைப்பை எதிர்நோக்கிக காத்திருக்கும் தூக்குக் கயிற்றைப் பிடித்துக் கழுத்தில் மாட்டிக கொண்டான். மறு கணமே அவன் தன்னைத் தாங்கியிருந்த நாற்காலியைத் தரையில் உருட்டினான் புரட்சி வீரன் கட்டபொம்மன் - இந்திய நாட்டின் விடுதலைப் போரைத் துவக்கி வைத்த வீரபாண்டியன் - உடலைப் புளிய மரத்தில் தொங்கவிட்டு, உலகத்திலிருந்தே விடை பெற்றுக கொண்டான்! வீரபாண்டியனைத் தூக்கிலிடும் காட்சியை வெள்ளைத் துரைமார்கள் காணவே இல்லை. அமைதியைக் காக்க பலமான படைகள் வைத்திருந்தும் கூட அவர்கள ஆத்மா அமைதி பெறவில்லை! தூக்குப்போடும் நேரத்தில் அருகிலிருந்தால் என்ன

சேருமோ என்ற அச்சத்தினுல், முன்னரே தூக்கிலிடுமிடத்திற்கு வெகுதூரத்தில் ஏற்பாடு செய்திருந்த முகாமுக்கு சென்று பதுங்கிக்கொண்டனர். வீரபாண்டியனின் ஆவி குடியிருந்த அந்த அழகுத் திருமேனி, தூக்கிலிடப்பட்ட புளிய மரத்திற்குச் சற்று தூரத்திலேயே கொளுத்திச் சாம்பலாக்கப் பட்டது. வீரக் கட்டபொம்மன், மானத்தை இழந்து மண்ணுளை நினைத்திருந்தால், எட்டயாபுரம், புதுக்கோட்டை அரசுகளைப் போன்று அவனது பாஞ்சாலங்குறிச்சி அரசும் நீடித்து இருந்திருக்கும்; அவனும் தூக்குமேடையில் தொங்கி யிருக்கவேண்டிய துன்பநிலை நேர்ந்திருக்காது. ஆனுல், அடிமைக்கு அரசவாழ்வு என்பது, அந்நியரின் சொற்படி ஆடும்வரைதான் என்பதை வீரபாண்டியன் தெள்ளத் தெளிய உணர்ந்திருந்தான். ஆகவே, அடிமையாக வாழாமல் அரசனுகவே மாண்டான். எந்தத் தமிழ்நாடு தன் முன்னேரை வரவேற்று வாழ்வளித்ததோ - ஆண்டியாக வந்த ஆதிக் கட்டபொம்மனுக்கு அரசபீடம் தந்து ஆதரித்ததோ - அந்தத் தமிழகத்தின் சுதந்தரத்திற்காகவே போரிட்டு மடிந்தான் வீரபாண்டியன். வாழ்க, வீரபாண்டியன் புகழ்!

## சிறைச்சாலை தகர்ந்தது

அன்பனென்று நம்பி அடைக்கலம்புகுந்த வீரபாண்டியனைப் பிடித்துக் கொடுத்த புதுக்கோட்டை அரசரை ஆங்கிலேயர்கள் மறந்துவிடவில்லை. அதுவரை கம்பெனிக்கு வரி செலுத்தும் சாதாரண

பாளையப்பட்டாக இருந்த புதுக்கோட்டையை "தனியரசு" என்று பிரகடனப் படுத்தினர் வெள்ளை அதிகாரிகள். அன்று முதல், சிறிது காலத்திற்கு முன் அந்த அரசு அழியும்வரை, புதுக்கோட்டை சுதந்தர நாடாகவே இருந்து வந்ததை அனைவரும் அறிவர்.

வீரபாண்டியனைத் தேடவும், அவனைத் தூக்கி விடுவதன் காரணமாக நாட்டில் புரட்சி எழாமல் தடுக்கவும் தொண்டுசெய்த எட்டப்ப நாய்க்கனுக்கு, சிவஞானபுரம் என்னும் சிற்றூரைக் கம்பெனி அதிகாரிகள் பரிசாகத் தந்தனர்.

ஆங்கிலேயருக்கு அடங்க மறுத்ததன் காரணமாக பாஞ்சாலங் குறிச்சி அரசு அப்போதே அழிந்தது. ஆங்கிலேயருக்குத் தொண்டு செய்த புதுக்கோட்டை அரசையும் எட்டயாபுரம் ஜமீனையும் இன்றைய மக்கள் அரசாங்கம் அழித்தது. பாஞ்சாலங் குறிச்சியோ, வரலாற்றில் புகழ் பெற்று விட்டது. அதை ஆண்ட கட்டபொம்மனும் நாட்டு மக்கள் எல்லோராலும் நன்றியுடன் வணங்கப்படும் தியாகியாய் விட்டான். ஆனால் புதுக்கோட்டை அரசும், எட்டயாபுரம் ஜமீனும் அழிந்தமைக்காக ஒரு சொட்டுக் கண்ணீர் விடக்கூட ஆளில்லை.

21—10—1799-ல் கயத்தாற்றில் தங்கியிருந்த தென்பாண்டி நாட்டின் பாளையக்காரரை யெல்லாம் கூட்டிவைத்து, கம்பெனியின் சார்பாக ஒரு கட்டளையைப் படித்தான் தளபதி பானர்மென். அதில், பாளையக்காரர்களில் எவரும்

இனி ஆயுதங்களை வைத்திருக்கவோ அல்லது தயாரிக்கவோ கூடாது என்றும், பாளையங்களுக்குட்பட்ட சாதாரண மக்களில் எவரேனும் ஆயுதங்கள் வைத்திருந்தாலோ அல்லது தயாரித்தாலோ அதற்குப் பாளையக்காரர்களே பொறுப்பேற்க வேண்டுமென்றும், இந்தக் கட்டளையை மீறிநடக்கும் குற்றவாளிகள் கம்பெனியின் துரோகிகளாகக் கருதப்பட்டு மரண தண்டனைக்குள்ளாவரென்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்தக் கட்டளையைச் செப்புத்தகட்டில் பொறித்து ஒவ்வொரு பாளையத்திலும் மக்கள் அனைவரும் காணக்கூடிய இடத்தில் வைக்கவேண்டுமென்பதும் பானர்மெனின் உத்தரவு. கம்பெனியின் கட்டளையைப் படிக்கக் கேட்ட பாளையக்காரரெல்லோரும், அதன்படி நடந்துகொள்வதாக பானர்மெனுக்கு வாக்குத் தந்து தத்தம் பாளையங்களுக்குச் சென்றனர்.

வீரபாண்டியனைக் கொன்ற ஏழுநாட்களுககுள் திருநெல்வேலி சீமையில் 42 கோட்டைகளை இடித்துத் தகர்த்தனர். பாஞ்சாலங்குறிச்சிப் பாளையத்தையும், அதற்குத் துணையாக இருந்த நாகலாபுரம், ஏழாயிரம் பண்ணை, கோலார்பட்டி, குளத்தூர், காடல்குடி ஆகிய பாளையங்களையும் கம்பெனியின் நேரடி நிர்வாகத்திற்குக கொண்டு வந்தனர். இதர பாளையங்களின் அரசாங்க விருதுகள், அதிகாரங்கள் ஆகியவற்றை ரத்து செய்து, ஆங்கில அரசுக்கு வரி வசூலித்துத் தரும் ஜமீன் (ஏஜண்டு) கள் என்ற நிலைக்குத் தாழ்த்திவிட்டனர்.

கட்டபொம்மனைத் தூக்கிலிட்ட பத்து நாட்களுக்கெல்லாம், தளபதி பானர்மென் தனது உத்தியோகத்திலிருந்து விலகி இங்கிலாந்துக்குச் சென்ருன். அவன் விடைபெற்றுச் செல்லும்போது கம்பெனி அதிகாரிகளும், அவர்களுக்கு அடிமைப்பட்ட பாளையக்காரர்களும் நடத்திய விருந்துகளும் கொடுத்த பரிசுகளும் கொஞ்சமல்ல.

ஆங்கிலேயர் எதிர்பார்த்ததுபோல், வீரபாண்டியன் தூக்கிலிடப்பட்ட பிறகு திருநெல்வேலிச் சீமையில் அமைதி நிலவவில்லை. ஒரு வீரபாண்டியனைக் கொல்லப்போய் தென்பாண்டி நாடெங்கும் ஆயிரக்கணக்கான 'வீரபாண்டியன்'கள் தோன்றி கம்பெனியை எதிர்த்துப் புரட்சி செய்யலாயினர்.

பாஞ்சாலங்குறிஞ்சி அரசு அழிக்கப்பட்ட பின்னர் பதினறு மாதங்கள் வரை தென்பாண்டி நாட்டில், கம்பெனிக்கு எதிராக ஒரு சிறு சம்பவம் கூட! நடைபெறவில்லை. ஆனல், இந்த அமைதிக்கிடையே ஒரு பெரிய புரட்சிக்கான திட்டம் உருவாகி வந்ததைக் கம்பெனி அதிகாரிகள் அறிந்துகொள்ளவில்லை. வீரபாண்டியன் தூக்கிலிடப்பட்டதால் மக்கள் மனதில் மூண்டிருந்த ஆத்திரக் கனல், கம்பெனி அதிகாரிகள் செய்து வந்த கொடுமைகளால் கொழுந்துவிட்டெரியலாயிற்று. நெஞ்சுத் துணிவும், தியாக உணர்வும் கொண்ட நூற்றுக்கணக்கான இளைஞர்கள், தங்கள் உயிரைக் கொடுத்தேனும் கம்பெனியின் ஆதிக்கத்தை

ஒழித்தே தீருவதென்ற முடிவுக்கு வந்தனர். இவர்கள் மணியாச்சி ரெயில்வே சந்திப்புக்கு வட கிழக்கே ஒரு மைல் தூரத்திலுள்ள ஒட்டநத்தம் என்னும் சிற்றூரில் இரவு நேரங்களில் கூடி, பலாத்காரப் புரட்சிக்கான திட்டங்களைத் தயாரித்தனர். அந்தத் திட்டங்களில், பாளையங்கோட்டை சிறையைத் தாக்கி, ஊமைத் துரையையும் அவரது தோழர்களையும் விடுதலை செய்வதும் ஒன்றாகும்.

1801-ம் ஆண்டு பிப்ரவரி இரண்டாம் தேதியன்று பாளையங்கோட்டை சிறைக்கு அருகிலும், ஊருக்குள்ளும் 'மர்ம மனிதர்கள்' நடமாடலாயினர். இவர்கள் ஒருவர் இருவரல்லர்; ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள். பலர், புல் கட்டுகளையும் விறகுக் கட்டுகளையும் தலையில் தாங்கி வீதிகளில் சுற்றி விலைகூறி வந்தனர். மற்றும் சிலர், காஷாயமணிந்து கடவுளின் புகழைப் பாடி கையேந்தி பிச்சை கேட்டுத் திரியலாயினர். பின்னும் சிலர், பிரயாணிகளைப்போன்று சத்திரங்கள் சாவடிகளில் தங்கியிருந்தனர். எல்லோரும் இருட்டும் நேரத்தை எதிர்பார்த்துப் பகல் நேரத்தைக் கழித்தனர். விறகுக் கட்டுகளையும், புல் கட்டுகளையும் விற்க வந்தவர்கள், வேண்டுமென்றே அதிக விலை கூறியதால் அவற்றை எவரும் வாங்குவாரில்லை.

'மர்ம மனிதர்கள்' எதிர்பார்த்திருந்தபடி கதிரொளி மறைந்து எங்கும் காரிருள் சூழ்ந்தது. அந்த நேரத்தில் அவர்கள் எல்லோரும் அரசியல் புரட்சிக்காரர்களாக மாறினர். அவர்களிடம்

கைத்துப்பாக்கி, குத்துவாள், கொடுவாள் போன்ற கொலைக் கருவிகளிருந்தன. அவர்கள் ஏக காலத்தில் திடீரென்று பாளையங்கோட்டைச் சிறைக்குள் புகுந்து அதிகாரிகளையும் காவற்காரர்களையும் தாக்கினர். தாக்குண்டவர்களில் சிலர் உயிரிழந்தனர்; பலர் படுகாயமுற்றனர். அவர்களிடமிருந்த போர்க் கருவிகளை யெல்லாம் புரட்சிக்காரர்கள் கைப்பற்றிக் கொண்ட பின்னர், சிறைச்சாலையின் கதவுகளைத் தாக்கித் தலைவர்களை விடுவிக்க முயன்றனர்.

சிறைக்குள் இருந்த ஊமைத் துரையும், அவரது தோழர்களும் ஏற்கனவே இந்தப் புரட்சிக்காரர்களுடன் கடித மூலமாகத் தொடர்பு வைத்துக் கொண்டிருந்தனர். ஆகவே, தாங்கள் எதிர்பார்த்திருந்தபடி புரட்சி மூண்டதை யறிந்த அவர்கள் உள்ளிருந்த வண்ணம் தலைவாயிற் கதவுகளைத் தாக்கினர். இருபுறத்துத் தாக்குதல்களையும் தாங்கவொண்ணாமல் சிறைக் கதவு தகர்ந்து வீழ்ந்தது. உடனே, புரட்சிக்காரர்களும் கைதிகளும் ஒன்று சேர்ந்து "வீரபாண்டியக் கட்டபொம்மன் புகழ் வாழ்க!", "வெள்ளை ஆதிக்கம் ஒழிக!" என்று விண்ணிடியக் கூவியவண்ணம் பாளையங்கோட்டை வீதிகளில் பவனி வந்தனர்.

பாளையங்கோட்டை சிறைச்சாலை தாக்கப்பட்ட நாளில் அங்கிருந்த கம்பெனிச் சிப்பாய்களின் எண்ணிக்கை அதிகமில்லை. ஐரோப்பியர்கள் - ஆணும் பெண்ணுமாக - இருபது பேர்களே இருந்தனர்.

அவர்களும், தளபதி மெக்காலே வீட்டில் நடந்த விருந்துக்குப் போயிருந்தனர். ஆகவே, புரட்சிக் காரர்கள் மெக்காலே வீட்டை முற்றுகை யிட்டிருந் தால், அங்கிருந்த ஐரோப்பியர்கள் அவ்வளவுபேரை யும் அடியோடு அழித்திருக்க முடியும். எதிர்க்க வரும் கம்பெனிப் படையினரின் ஆயுளும் முடிந் திருக்கும். அப்புறம் திருச்சியிலிருந்து கம்பெனிப் படைகள் வருவதற்குள் புரட்சிக்காரர்களின் ஆதிக்கம் அதிகரித்திருக்கும்

ஆனால், புரட்சிக்காரர்களின் எண்ணம் வேறு விதமாக இருந்தது அவர்கள் பாளையங்கோட் டைச் சிறையிலிருந்து தங்கள் தலைவர்களை விடுதலை செய்தவுடன், ஊமைத்துரை தலைமையின் கீழ் பாஞ்சாலங் குறிச்சியை நோக்கி விரைந்தனர். பாஞ்சாலங் குறிச்சி, பாளையங்கோட்டையி லிருந்து 30 மைல் தூரத்திலுள்ளது. புரட்சிக்காரர்கள் ஓட்ட மும் நடையுமாக அன்றிரவுக்குள் 30 மைல்களையும் கடந்து, மறுநாள் விடியற்காலையில் சுதந்தர வீரர் களின் போர்க்களமான பாஞ்சாலங் குறிச்சியை அடுத்துள்ளதும், பிற்காலத்தில் கப்பலோட்டிய தமிழன் வ. உ. சிதம்பரனாரைப் பெற்றெடுத்தது மான ஓட்டப் பிடாரத்தை அடைந்தனர்.

## மாயக் கோட்டை!

ஓட்டப்பிடாரத்தில் சற்று இளைப்பாறிய பின் னர், மேல் நடக்கவேண்டிய புரட்சிகளுத் திட்டமிட் டனர். அந்தத் திட்டங்களாவன :

ஆங்லேயரால் அழிக்கப்பட்ட பாஞ்சாலங் குறிச்சிக் கோட்டையை மீண்டும் கட்டுவது.

கம்பெனிப் படைகளை எதிர்த்துப் போராட மக்களுக்குப் பயிற்சி அளிப்பது.

பாஞ்சாலங்குறிச்சி யுள்பட, கம்பெனியார் எடுத்துக் கொண்ட எல்லாப் பாளையங்களையும் போரிட்டுக் கைப் பற்றுவது.

இத்திட்டங்களை நிறைவேற்ற, தேவையான அள வுக்குப் பொருள் உதவி செய்வதாக சின்னப்பேந்திரன் என்பான் வாக்குறுதி தந்தான். மற்றும், திருநெல் வேலிச் சீமையிலுள்ள பாளையக்காரர்களில் சிலரும் புரட்சிக்காரர்களுக்குப் பக்கத்துணையாக இருந்து பண உதவி செய்ய இசைந்தனர்

இந்தச் சமயத்தில், மெக்காலே என்பான் கம்பெனிப் படைகளின் தளபதியா யிருந்தான். இவனை 'மக்காளி துரை' என்றே மக்கள் அழைப் பர். இவன் தனது படைகளை, பாளையங்கோட்டைச் சிறையிலிருந்து தப்பியோடிய கைதிகளைப் பிடிக்கக் கயத்தாற்றுக்கு அனுப்பினன். குதிரை வீரர்கள், பீரங்கிப் படையினர், 900 துப்பாக்கி வீரர்கள் ஆகியோர் இந்தப் படையில் இருந்தனர் மெக் காலே அனுப்பிய படையினர் கயத்தாற்றுக்குச் செல்லும் வழியில் குலையநல்லூர் எனும் சிற்றூரில் கூடாரமடித்து உணவு தயாரித்துக்கொண் டிருந் தனர்.

அந்த நேரத்தில் திடீரென்று ஆயிரத்துக்கு மேற்பட்ட புரட்சி வீரர்கள் அங்கு தோன்றி

கம்பெனிப் படையினரை நாற்புறமும் சூழ்ந்து கொண்டு கடுமையாகத் தாக்கினர். சுமார் ஒருமணி நேரம் இரு தரப்பினரிடையேயும் பயங்கரப் போர் நடைபெற்றது. இதில், புரட்சிக்காரர்களில் நாற்பது பேரும், கம்பெனிப் படையினரில் ஆறுபேரும் மாண்டனர். புரட்சிக்காரர்கள், தங்களில் இறந்தவர்களின் உடல்களை அங்கேயே போட்டுவிட்டு, படுகாய மடைந்தவர்களை மட்டும் தூக்கிகொண்டு ஓடிவிட்டனர். இந்த ஒரு மணிநேரப் போரில் கம்பெனிப் படையினர் சோர்வடைந்து விட்டனர். எனவே, அவர்கள் புரட்சிக்காரர்களை விரட்டிச் செல்லாமல் விட்டுவிட்டதுடன், இனி ஒன்றும் நடைபெறாதென்ற எண்ணத்துடன் எல்லோரும் தத்தம் முகாமுக்குச் சென்று படுத்துக்கொண்டனர்.

மீண்டும் இரவு ஒன்பது மணிக்கு, புரட்சிக்காரர்கள் திரும்பிவந்து கம்பெனிப் படைகளைத் தாக்கினர். இருதரப்பினரும் விட்ட வெடிகளின் பேரொலி, குலையநல்லூர் மக்களைக் குலைநடுங்கச் செய்தது! ஒன்பது மணிக்குத் துவங்கி, விடியும் வரை நடந்த இந்தப் போரிலும் இருதரப்பினரில் எவரும் வெற்றி பெறவில்லை. விடியுந் தருணத்தில் புரட்சிக்காரர்கள் மறைந்துவிட்டனர். கம்பெனிப் படைகளும் அங்கிருந்து புறப்பட்டு காலை 10 மணிக்குப் பாஞ்சாலங் குறிச்சியை அடைந்தன. பாஞ்சாலங் குறிச்சியில் கால்வைத்ததும், அங்கு கண்ட காட்சி, அவர்களைத் திகைக்கச் செய்தது. முன்பு

தளபதியாயிருந்த பானர்மெனின் கட்டளைப்படி, தரைமட்டமாக்கப்பட்ட பாஞ்சாலங் குறிச்சிக் கோட்டைச் சுவர் மீண்டும் எழுப்பப்பட்டிருந்தது. பாளையங்கோட்டைச் சிறையைத் தகர்த்து தலைவர்களைச் சிறைமீட்ட பிறகு புரட்சிக்காரர்கள் செய்த அடுத்த செயல், இந்தக் கோட்டையை எழுப்பியதேயாகும்.

புதிய கோட்டை கட்டப்பட்ட விதம், வரலாற்றில் பொறிக்கத்தக்க சிறப்பு வாய்ந்ததாகும். ஓட்டப்பிடாரத்தில் கூடி திட்டமிட்டபடி இந்தக் கோட்டை மதிலை எழுப்பப் புரட்சிக்காரர்கள் பட்ட கஷ்டம் கொஞ்சமன்று. 2000-க்கு மேற்பட்ட மககள் இந்தக் கோட்டை கட்டும் வேலையில் ஈடுபட்டார்கள். அதற்குமுன்னிருந்த கோட்டையைவிட, அவசரத்தில் எழுப்பப்பட்ட இந்தக் கோட்டையே அதிக உறுதி வாய்ந்ததென்று கருதப்பட்டது. பின்னால் நடந்த பீரங்கித் தாக்குதலிலிருந்து இது வெளிப்பட்டது. பல மாதங்கள் பாடுபட்டுக் கட்ட வேண்டிய இந்தக கோட்டையை, இரண்டே வாரங்களில் கட்டிமுடித்தனர் புரட்சிக்காரர்கள். பனஞ்சாற்றினால் பிசைந்த மண்ணைக்கொண்டே இந்தக் கோட்டை கட்டப்பட்டதாம்.

கோட்டைச் சுவரை இடித்துத் தள்ளக்கூடிய முட்டு பீரங்கிகள் அப்போது கம்பெனிப் படையினரிடம் இல்லை. என்றாலும், அவர்கள் சோர்வடையவில்லை. சுவரேறிக் குதித்து கோட்டைக்குள் நுழையத் தீர்மானித்தனர். இதைச் செய்ய இரவு

நேரத்தை எதிர்பார்த்து அங்கிருந்து ஒரு மைல் தூரத்திலுள்ள ஏரிக்கரை ஓரத்தில் கூடாரமடித்துத் தங்கியிருந்தனர்.

கோட்டைக்குள்ளேயும் ஐயாயிரம் புரட்சிக்காரர்கள் பல் வேறு ஆயுதங்களுடன் பதுங்கி யிருந்தனர். அவர்களும், கம்பெனிப் படையினரைத் தாக்க இருள் கவியும் நேரத்தையே எதிர்பார்த்திருந்தனர்.

பாஞ்சாலங் குறிச்சி கோட்டையைத் தாக்க, இருட்டும் நேரத்தை எதிர்பார்த்திருந்த கம்பெனிப் படையினருக்கு திடுக்கிடத் தக்க செய்தியொன்று கிடைத்தது. "கோட்டைகருள்ளே ஐந்தாயிரம் புரட்சிக்காரார்கள் ஆயுதங்களுடன் மறைந்திருக்கின்றனர்; அந்திப் பொழுது வந்ததும் கம்பெனிப் படைகள் மீது மோதுவதற்குத் திட்டமிட்டுள்ளனர்" என்பதே அந்தச் செய்தி. .

## ஓடிந்து வெள்ளைப் படை!

இந்த நிலையை முன்கூட்டியே எதிர்பாராதது தால், மேற்கொண்டு என்ன செய்வதென்பதைப் பற்றி கம்பெனிப் படைத் தலைவர்கள் ஆலோசிககலாயினர். முன்னர் தளபதி பானர்மென்னால் தரை மட்டமாக்கப்பட்ட கோட்டை, மீண்டும் தலை தூக்கி நின்றதைக் கண்டு சோர்வடைந்து விட்ட கம்பெனிப் படை வீரர்கள், புரட்சிககாரர்களின் போர்க்கோலச் செய்தி கேட்டதும் திகில் கொண்டுவிட்டனர். மேலும், முன்னாள் இரவு முழுவதும் கண் விழித்து

பாளையங்கோட்டையிலிருந்து பாஞ்சாலங் குறிச்சி வரை நடந்து வந்ததால் படை வீரர்கள் மேற்கொண்டு ஒரு கடுமையான போரில் ஈடுபடச் சக்தியற்றவர்களாய்க் களைத்துப் போயிருந்தனர். ஆகவே, இந்தச் சமயத்தில் புரட்சிக்காரர்களுடன் போர் நடத்தினால் வெற்றி கிடைப்பது அரிதென்பதை வெள்ளைத் தளபதிகள் தெரிந்து கொண்டனர். வந்த வழியே திரும்பிச் செல்வதைத் தவிர அவர்களுக்கு வேறு வகையில்லை.

சரியாகப் பகல் இரண்டு மணிக்குக கம்பெனிப் படைகள் பாஞ்சாலங் குறிச்சியை விட்டுப் பாளையங் கோட்டை நோக்கிப் புறப்பட்டன. இந்த 'வெற்றிகர'மான பின்வாங்குதலைக் கோட்டைக்குள்ளிருந்த புரட்சிக்காரர்கள் தெரிந்து கொண்டனர். கம்பெனிப் படைகளைப் பாளையங் கோட்டைக்குச் செல்ல விட்டுவிட்டால், மீண்டும் அவர்கள் தங்கள் படையைப் பெருககிக் கொண்டு பாஞ்சாலங் குறிச்சிக்குத் திரும்புவது திண்ணமென உணர்ந்தனர். எனவே, கோட்டையிலிருந்து வெளியேறி, ஓடிககொண்டிருந்த கம்பெனிப் படைகளைத் துரத்திச் சென்றனர். கம்பெனிப் படையினர் இதை முன்கூட்டியே எதிர்பார்த்து தாக்குதலைச் சமாளிககுமளவுக்கு படைகளைத் திறமையாக அணி வகுத்திருந்தனர். அந்த அணி வகுப்புக்கு முன்னே ஒரு பீரங்கியும், பின்னே ஒரு பீரங்கியும் காவலாகச் சென்றன.

புரட்சிககாரர்கள் பின்புறம் ஓடி வந்து கொண்டிருந்ததை அறிந்த படைத் தலைவன், திரும்பிச்

சென்று அவர்களைத் தாக்குமாறு தனது படை வீரர்களுக்கு உத்திரவிட்டான். அவ்வளவுதான்; பீரங்கிகளும் துப்பாக்கிகளும் புரட்சிக்காரர்கள் மீது சரமாரியாகக் குண்டுகளைப் பொழிந்தன. இதனால் அவர்களில் நூறு பேர்களுக்குமேல் உயிரிழந்தனர். தங்களால் ஒன்றும் செய்ய முடியாதென்பதை யறிந்து புரட்சிககாரர்கள் எல்லோரும் பின்வாங்கிச் சென்று பழையபடி கோட்டைககுள் பதுங்கிக் கொண்டனர். கம்பெனிப் படையினரும் 'தலை தப்பியது தம்பிரான் புண்ணியம்' என்று நினைத்து வழியில் எங்கும் தங்காமல் காற்றுவேகத்தில் நடந்து மறுநாள் இரவு ஒன்பது மணிக்கு பாளையங் கோட்டையை அடைந்தனர்.

கம்பெனிப படைகள் திரும்பிச் சென்ற தென்றாலும் ஊமைத்துரையும் அவனது தோழர்களும் ஓய்ந்து விடவில்லை. மீண்டும் வெள்ளையர்கள் வருவதை எதிர்பார்த்து 'வெற்றி அல்லது வீழ்ச்சி' என்ற இரண்டிலொன்றை முடிவுகட்டும் இறுதிப் போருக்கு ஆயுத்தமாயினர். பாஞ்சாலங்குறிச்சியோடு நிற்காமல், அதையடுத்து கம்பெனியின் ஆதிக்கத்திலுள்ளதும் தங்களுக்கு எதிராகக் கம்பெனியுடன் ஒத்துழைத்து வருவதுமான பாளையங்கள் சிலவற்றையும் கைப்பற்றலாயினர்.

ஆரம்பத்தில், தூத்துக்குடிமீது படையெடுத்து அதைக் கைப்பற்றியதுடன் அங்கு காவல் காத்து வந்த இந்திய சிப்பாய்களிடமிருந்த ஆயுதங்களை யெல்லாம் பறிமுதல் செய்து அவர்களை ஊரை

விட்டே விரட்டி விட்டனர். இரண்டு ஆங்கில அதிகாரிகளை மட்டும் சிறைப்பிடித்து அவர்களுடைய சொத்துக்களையும் கைப்பற்றினர். அதற்குள் அந்த ஆங்கிலேயர்களில் ஒருவனான பாக்கட் என்பவனின் மனைவி, ஊமைத்துரையின் காலில் விழுந்து அலறியழுது அபயம் வேண்டினாள்.

வீரத்திற்கு மன்னிக்கும் குணம் உண்டு. அதற்கு ஊமைத்துரையும் விதிவிலக்கல்ல. அரசிழந்து அமரில் புகுந்து அல்லல்படும்நேரத்திலும், பாஞ்சாலங்குறிச்சியின் முடிசூடா மன்னனாகிய ஊமைத்துரை அன்புநெறி பிறழ்ந்தானில்லை. ஆங்கிலமாதின் அபயக் குரலுக்கு ஆதரவு காட்டி சிறைபிடித்த வெள்ளையர் இருவரையும் விடுவித்து அவர்களது உடைமைகளையும் திருப்பிக் கொடுத்து விட்டான்.

மற்றும் காடல்குடி, ஸ்ரீவைகுண்டம் ஆகிய பாளையங்களை யெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக புரட்சிக்காரர்கள் தங்கள் ஆதிக்கத்திற்குக கொண்டுவந்து விட்டனர். இங்கெல்லாம் ஆங்கிலேயர் தலைமையின் கீழ சிறிய அளவில் கம்பெனி படைகள் இருந்தன. ஆனால், பொதுமக்களின் ஆதரவு புரட்சிககாரர்கள் பககமே இருந்து வந்ததால், அந்தப் படைகள் புரட்சிககாரரை எதிர்க்கச் சக்தியற்று புறமுதுகிட்டோடி விட்டன. இதற்குள் பாளையங் கோட்டையிலிருந்து கம்பெனிப் படைகள் மீண்டும் பாஞ்சாலங் குறிச்சி நோக்கிப் புறப்பட்டன. பிப்ரவரி மாதம் 10—ந் தேதி பாஞ்சாலங்

குறிச்சியிலிருந்து ஓட்டம் பிடித்த பின்னர் இப்போதுதான் கம்பெனிப் படைகள் மீண்டும் பாஞ்சாலங் குறிச்சிக்கு வரத் துணிவு கொண்டன. இடைப்பட்ட ஒன்றரைமாத காலத்தில் அவர்கள் தங்கள் படைபலத்தைப் பெருக்கிக் கொண்டனர்.

## கோட்டையல்ல; கொலைக்களம்!

கம்பெனிப் படையினர், மார்ச் மீ 31ந் தேதி பாஞ்சாலங் குறிச்சிக் கோட்டைக்கு மேற்கே 600 கஜ தூரத்தில் ஒரு மேட்டை எழுப்பினர். அதன் நீளம் 40 அடி, அகலம் 15 அடி, உயரம் 16 அடி. இரண்டு பீரங்கிகளை அதன்மேல் நிறுத்திக் கோட்டைச் சுவர் மீது குண்டுகளை மாரியெனப் பொழிந்தனர். கோட்டை உடைந்து விட்டது என்ற நம்பிக்கை ஏற்பட்டவுடன், பீரங்கித் தாக்குதலை நிறுத்திவிட்டு கோட்டைக்குள் நுழையமுயன்றனர். ஆனல், படைகள் நுழையுமளவுக்கு கோட்டைச் சுவர் நன்றாக உடையவில்லை. எனவே, கோட்டைச் சுவரில் இடிபட்ட சந்துகளின் வழியே ஒவ்வொருவராக உள்நுழைய முயன்றனர். அப்படி நுழைந்த சிப்பாய்கள் ஒவ்வொருவரையும், உள்ளே சுவரோரத்தில் பதுங்கி யிருந்த புரட்சிக்காரர்கள் ஈட்டியால் குத்தியும், துப்பாக்கி முனையால் அடித்தும் கொன்று கொண்டே இருந்தனர். கோட்டைக்கு வெளியே இருந்த கம்பெனிப் படைவீரர்கள், உள்ளே நடப்பதைத் தெரிந்து கொள்ள முடியாததால், ஒருவர் பின் ஒருவராக உள்ளே புகுந்து புரட்சிக்காரர்

களின் தாக்குதல்களுக்குப் பலியாகிக்கொண்டேயிருந்தனர்.

வேறு சிலர், கோட்டைச் சுவரின் உச்சி மீது ஏற முயன்றனர். சுவரில் பிடிப்பு இல்லாததால் சறுக்கி விழுந்து புரட்சி வீரர்களிடம் சிக்கி அடிபட்டும், துப்பாக்கிகளால் சுடப்பட்டும் உயிரிழந்தனர். கோட்டைத் தாக்குதலில் கம்பெனியின் சார்பாக ஈடுபட்ட படைகளில் எட்டயாபுரத்துச் சிப்பாய்களும் உண்டு. சுவரேறி உள்ளே குதிக்க முயன்று மாண்டவர்களில் அவர்களது எண்ணிக்கையே அதிகம்.

தங்களுடைய முயற்சி வெற்றி பெறாததைக் கண்ட கம்பெனி தளபதிகள் கவலை கொண்டனர். ஆனால், புரட்சிக்காரர்களோ, கம்பெனிப் படைகளை இருமுறை பின்வாங்கி ஓடச் செய்ததால் இறுமாப்புற்றனர். இந்தக் கடுமையான போருககுப் பிறகு புரட்சி வீரர்களில் ஒருவர்கூட கோட்டைக்கு வெளியே தலைகாட்டவில்லை. காரணம், புறங்காட்டி ஓடிய கம்பெனிப் படைகள் மீண்டும் எந்த நேரத்திலும் கோட்டையைத் தாக்குவதை அவர்கள் எதிர்பார்த்திருந்ததேயாகும்.

கோட்டைத் தாககுதலில் தோல்வியுற்ற பிறகு கம்பெனிப் படையினர், கோட்டைககு வெளியே ஒரு மைல் தூரத்தில் 'முகாம்' செய்து இளைப்பாறினர். கோட்டை மதிலைச் சுற்றி, எங்கும் பிணக் குவியல் மயமாயிருந்தது. அவற்றை எடுத்துச் சென்று அடககம் செய்ய அனுமதிக்குமாறு சமா

தானக் கொடி தாங்கிய கம்பெனித் தூதுவர்கள் கோட்டைக்குள் சென்று புரட்சிக்காரர்களை வேண்டினர்.

அறத்திற்கே யன்புசார் பென்ப வறியார்
மறத்துக்கு மஃதே துணை

என்று வள்ளுவர் கூறிய அறவழி நின்று மறப் போர் புரிந்தான் ஊமைத்துரை. எனவே, கம்பெனியாரின் வேண்டுகோளை எவ்வித நிபந்தனையும் விதிக்காது ஏற்றுக் கொண்டான். அதற்குப் பின் கம்பெனிப் படையினர் இறந்த சிப்பாய்களையெல்லாம் எடுத்துச் சென்று அடக்கம் செய்தனர். பிணந் தூக்கும் வேலையிலும் கம்பெனிப் படையினருக்கு புரட்சிக்காரர்கள் ஓரளவு துணைபுரிந்தனர். இந்தப் பெருந் தன்மைக்கு புரட்சிக்காரர்களைப் பெரிதும் மெச்சிப் புகழ்ந்தனர் கம்பெனித் தளபதிகள்.

தம்மிடமுள்ள படை பலத்தையும் பீரங்கி பலத்தையும் கொண்டு கோட்டையைத் தகர்ப்பதும், உள்ளிருக்கும் புரட்சிக்காரர்களை வெல்வதும் முடியாதென்றுணர்ந்த தளபதி மெக்காலே, மேற்கொண்டு புதிய படைகளையும், பெரிய பீரங்கிகளையும் அனுப்பி வைக்குமாறு திருச்சியிலுள்ள கம்பெனித் தலைவர்களுக்குச் செய்தி அனுப்பினான்.

புரட்சிக்காரர்கள் பாஞ்சாலங் குறிச்சியை மட்டுமன்றி, வேறுபல பாளையங்களையும் கைப் பற்றிக் கொண்டே வருவதை அறிந்த கம்பெனித்

தலைவர்கள் கலக்கம் கொண்டனர். அதுவரை மன்னன் வீரபாண்டியன் நடத்திய போர், அவனைத் தூக்கிலிட்டுக் கொன்ற பிறகு மக்கள் நடத்தும் போராக மாறிவிட்டதைக் கண்டு கொள்ளை யடிக்க வந்த வெள்ளைக்காரர்கள் குலை நடுங்கினர்.

"ஊமைத்துரையை விட, வீரபாண்டியனே நல்லவன்; அவனிடம் சமரசம் செய்து கொள்ளாமல் போனோமே" என்றுகூட கம்பெனித் தலைவர்களில் சிலர் கருதலாயினர். என்றாலும், புரட்சிக்காரர் களை நசுக்கியே தீருவதென்ற உறுதியி லிருந்து அவர்கள் தளரவில்லை. வலிமை வாய்ந்த பீரங்கி களையும், நன்கு பயிற்சி பெற்ற படை வீரர்களையும் கர்னல் ஆக்னியூ என்ற அதிகாரியினுடைய தலைமை யின்கீழ் பாஞ்சாலங் குறிச்சிக்கு அனுப்பி வைத்தனர்.

திருச்சியி லிருந்து மேற்கொண்டு படைபலம் வருமவரை, புரட்சிக்காரர்கள் கோட்டையிலிருந்து வெளியேறாதவாறும், வெளியிலிருந்து உணவு முத லிய எத்தகைய உதவியும் கோட்டைக்குள்ளே செல் லாதவாறும் கண்காணித்து வந்தனர் கம்பெனிப் படையினர். இதன் மூலம், வீரபாண்டியனின் தம்பியும், அவன் தலைமையின் கீழுள்ள புரட்சி வீரர் களும் தங்களுக்குப் பணிந்து விடுவரென்றும் நம்பினர். ஆனால், அவர்கள் நம்பியது நடக்க வில்லை. உள்ளேயிருந்த புரட்சிக்காரர்களில் பலர் உணவின்றி மடிந்தனர்; என்றாலும், உயிர் வாழ்ந்த

வீரர்கள் உள்ளம் குலைந்து பகைவருக்குப் பணிந்து விடவில்லை. திருச்சியி லிருந்து படை வருவதற்குத் தாமதமாவதை யறிந்த திருநெல்வேலி கலெக்டர், இலங்கையி லிருந்து படை வீரர்கள் வருவதற்கு ஏற்பாடு செய்தான். அங்குள்ள ஆட்சியும், திறமை மிக்க ஒரு படையைத் தென்பாண்டி நாட்டுக்கு அனுப்பியது. ஆம், சின்னஞ்சிறு பாஞ்சாலங் குறிச்சியின் சுதந்திர வீரர்களை நசுக்கத்தான் இவ்வளவும்!

"தென்னாடு முழுவதுமிருந்த கம்பெனிப் படைக ளென்ன? எட்டயாபுரம், புதுக்கோட்டை போன்ற காட்டிக் கொடுக்கும் துரோகிகளின் படைக ளென்ன? இவ்வளவும் போதாதென்று இலங்கைப் படைகள் வேறு! என்ன இருப்பினும் இவையனைத் தும் கூலிப்படைகள் தானே! ஆனால், ஊமைத் துரையின் படை பலமோ, மக்கள் மனபலத்தைப் பொறுத்தது. எனவே, அவனை விரைவில் வெற்றி காண முடியவில்லை கூலிப் படைகளால்.

இரண்டு மாதங்களுக்குப் பிறகு திருச்சியி லிருந்து கர்னல் ஆக்னியூ நடத்தி வந்த படை பாஞ்சாலங் குறிச்சி வந்து சேர்ந்தது. தளபதி மெக்காலேயிட மிருந்து படைத் தலைமையை கர்னல் ஆக்னியூ ஏற்றுக் கொண்டான். புதிய தளபதியி னுடைய தலைமையின்கீழ கம்பெனிப் படைகள் மீண்டும் போர்க் கோலம் பூண்டன. கோட்டைக்கு மேற்கே, முன்னர் எழுப்பப் பட்டிருந்த பீரங்கி மேட்டில் இரண்டு பீரங்கிகளை நிறுத்தினான் தளபதி

ஆக்னியூ. கும்பெனி பீரங்கிகள், மீண்டும் கோட்டையைக் கடுமையாகத் தாக்கின. பல மணி நேரத் தாகுதல்களுக்குப் பிறகு கோட்டையில் பலமான உடைப்பு கண்டு விட்டதென்ற முடிவுக்கு வந்து புரட்சிக்காரர்களைத் தாக்க, கம்பெனிப் படைகள் கோட்டைக்குள் புக முயன்றன. ஆனல், ஷெப்பர்டு என்பவன் தடுத்ததின் பேரில் கோட்டைக்குள் புகுவதை மறுநாளுக்குத் தள்ளி வைத்தான் தளபதி ஆக்னியூ. பாவம், ஷெப்பர்டு பழைய அனுபவத்தை மறக்கவில்லை போலும்!

மறு நாள் காலை மீண்டும் கோட்டையின் மூலைக் கொத்தளத்தைத் தகர்க்கத் தொடங்கி பகல் ஒரு மணிக்குள் வெற்றிகரமாக முடித்து விட்டனர் கம்பெனிப் படையினர். கொத்தளம் அடியோடு தகர்ந்ததைக் கண்டு கம்பெனிப் படைகளுக்கு ஏற்பட்ட ஆனந்தம் கொஞ்சமல்ல. இந்த வெற்றி மகிழ்ச்சியில் கோட்டையைக் கைப்பற்ற அவர்கள் விரைந்து சென்றனர். புரட்சிக்காரர்களும் சோர்ந்து விடவில்லை. பெரிய பெரிய மரங்களை வெட்டி வழியில் போட்டு கம்பெனிப் படையினர் முன்னேருதவாறு தடுத்தனர். தாண்டமுடியாதபடி ஆழமான அகழிகள் தோண்டினர். வெறிபிடித்த கம்பெனிப் படைகள் நாலாபுறமும் சூழ்ந்து கொண்டு வெடிகுண்டுகளை வீசும்போதே புரட்சிக்காரர்கள் தடுப்பு வேலைகளைச் செய்தனரென்றால், அவர்களது வீரத்தையும், விடுதலை வேட்கையையும் என்னென்று விளக்குவது!

புரட்சி வீரர்கள், தாங்கள் வெட்டிய குழிகளுக்குள்ளிருந்து தலை தெறிக்க ஓடிவரும் கம்பெனிப் படைகளைச் சுட்டுக் கொன்றனர். கோட்டைச் சுவரைத் தகர்ப்பது கம்பெனிப் படையினருக்கு எளிதாக இருந்தது. ஆனால், கோட்டைக்குள் நுழைந்த பின்னர் புரட்சிக்காரர்கள் நடத்திய 'குரங்குப் போரை'ச் சமாளிக்க அவர்களால் முடியவில்லை. புரட்சிக்காரர்கள் செய்த 'குரங்குப் போர்' வருணனைக்கு எட்டாதது. அவ்வீரர்களின் இதயத்தில் கனல் விட்டெரிந்த சுதந்தர உணர்ச்சி, வீரபாண்டியன்மீது அவர்கள் வைத்திருந்த பற்று, ஊமைத்துரையின் தலைமையிலிருந்த தளராத நம்பிக்கை ஆகியவைதான் இவ்வாறு கடும்போர் செய்யும் ஆற்றலைத் தந்தன. கம்பெனிப் படைகளிடம் பெரியதும் சிறியதுமான பல பீரங்கிகள் இருந்தன. துப்பாக்கி முதலிய கருவிகளுக்கும்கணக்கில்லை. மேலும், கம்பெனிப் படை வீரர்கள் நன்கு பயிற்சி பெற்றவர்கள். போதாககுறைககு எட்டயாபுரம், புதுக்கோட்டை துரோகிகள் அனுப்பி வைத்த துணைப் படைகள் வேறு. புரட்சிக்காரர்களிடமோ போதிய போர்க கருவிகளில்லை. அவர்களுக்குப்போர் செய்வதற்கான நெஞ்சுரமிருப்பினும், நீண்டகாலப் பயிற்சியில்லை. எனவே, கம்பெனிப் படைகளை மேலும் எதிர்த்துப் போரிடச் சக்தியற்றவர்களாய் சோர்ந்து விட்டனர்.

கோட்டைக்குள் கண்ட காட்சியும் அவர்களது சோர்வை அதிகப்படுத்தி யிருக்க வேண்டும். கடந்த

இரண்டு நாள் போரில் சுமார் ஐந்நூறுக்கு மேற்பட்ட புரட்சி வீரர்கள் பலியாகி விட்டனர். அரண்மனைப் பெண்கள் பதுங்குவதற்குக் குழிகள் வெட்டப்பட்டிருந்தும், அவர்களிலும் பலர் குண்டுகளால் கொல்லப்பட்டனர். சில பெண்கள் வெடிகளின் சப்தத்தைக் கேட்டு பயத்தாலேயே செத்து விட்டனர். மற்றும் கோட்டைக்கு வெளியே கம்பெனிப் படைகள் முற்றுகை செய்திருந்ததால் உணவுப் பொருட்களைக் கொண்டுவர முடியவில்லை. கோட்டைக்குள் சேமித்து வைத்திருந்த உணவுப் பொருட்கள் முற்றிலும் தீர்ந்து போய்விட்டன. புரட்சி வீரர்களைப் பட்டினியும் சாவும் தோழமை கொண்டன.

இந்நிலையில், மேலும் கோட்டைக்குள்ளிருந்து போர் புரிவது தற்கொலைக்கு ஒப்பாகும் என்று கருதினான் ஊமைத்துரை. அவன்முன் இரண்டே வழிகள் இருந்தன. ஒன்று, வெள்ளையரிடம் சரணடைவது; மற்றொன்று, கோட்டையிலிருந்து வெளியேறுவது. முன்னதைச் செய்வது எளிது; பின்னதைச் செய்வதோ கடினம். ஆனால், மானமிழந்து சரணடைவதைவிட மரணத்திற்குத் துணிந்து வெளியேறுவதே சிறந்த வழி என்ற முடிவுக்கு வந்தான். அவன் தனது புரட்சித் தோழர்களுக்குப் பின் வருமாறு கட்டளை பிறப்பித்தான்.

**“புரட்சி வீரர்களே! புறமுதுகுகாட்டாது போரிட்டுக் கொண்டே கோட்டையிலிருந்து வெளியேறுங்கள். படுகாய**

முற்ற வீரர்கள், பெண்கள், குழந்தைகள், முதியோர் ஆகியோரை கோட்டைக்கு வெளியே பாதுகாப்பான இடத்திற்குக் கொண்டு செல்லுங்கள்.''

இந்தக் கட்டளை ஒலிபரப்பப்பட்டதும், அணி அணியாகப் புரட்சி வீரர்கள் வெளியேறலாயினர். ஆயுதம் தாங்கிய புரட்சிவீரர்கள் முன்னும் பின்னுமாக அணிவகுத்து நின்று மத்தியிலே படுகாயமடைந்த போர் வீரர்கள், பெண்கள் முதலியோரைப் பாதுகாத்துக் கடத்திச் சென்றனர். கோட்டைக்கு வெளியே நிறுத்தப்பட்டிருந்த கம்பெனி குதிரைப் படையினர், வெளியேறும் வீரர்களை மறித்துப் போரிட்டனர் அந்தப் போர் அதற்கு முன் நடந்த போர்களனைத்தையும் விட பயங்கரமானது. சுமார் அறுநூறுககு மேற்பட்டவர்கள் குதிரைப் படையினரால் கொல்லப்பட்டனர். இவர்களில் பலர் பெண்கள்.

பாஞ்சாலங்குறிச்சி கோட்டைக்கு உள்ளும் புறமும் ஒரே பிணககுவியல்; எங்கு நோக்கினும் இரத்தக்கறை. குத்து, வெட்டு, குண்டுமாரி! இந்தக் கொடுமைகளுககு ஆற்றவொண்ணுது அலறுவோரின் கூக்குரல்களோ, பீரங்கி ஒலியையும் மிஞ்சிவிட்டன பிற்காலத்தில் வடக்கே பாஞ்சாலத்தில் நடத்திய படுகொலையைவிட பெரியகோர் படுகொலையை தெற்கே பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையைச் சுற்றி நிகழ்த்திவிட்டனர் வெள்ளை ஏகாதிபத்திய வெறியர்கள். இந்தப் படுகொலைக்குத்

தப்பிய புரட்சியாளரின் எண்ணிக்கை சுமார் இரண்டாயிரமாகும். சிவத்தையா குமாரசாமியும், ஊமைத்துரையும் இதில் சேர்ந்தவர்கள்.

## அந்தோ, பரிதாபம்!

இந்த வெளியேற்றத்தில் நிகழ்ந்த மற்றொரு காட்சி இங்கு குறிப்பிடத் தக்கது. கோட்டையை விட்டு வெளியேறிய பெண்களில் ஒருவர் நிறைந்த கர்ப்பவதி. அவ் வம்மையாரின் இடதுபக்க இடுப்பிலே ஆண் குழந்தை; வலதுபக்க இடுப்பில்கூடை. அந்தக் கூடையிலே பாஞ்சாலங்குறிச்சியாரின் வீரவழிபாட்டுக்குரிய ஜக்கம்மாளின் சிலை யிருந்தது. இளம் பெண்கள் இருவர் அன்னையின் முன்றானையைப் பிடித்துக்கொண்டு அழுத வண்ணம் பின் தொடர்ந்தனர்.

அந்த அம்மையார் வேறு யாருமில்லை; ஊமைத் துரையின் பத்தினிதான்! ஆம், பாஞ்சாலங்குறிச்சியின் அரசி! இன்னும் சில நாட்களில் தனது கணவனை சுதந்தர பீடத்தில் பலி கொடுத்து, விதவையாகப் போகும் வீர மாது. ஆளப்பிறந்த அரசிளங் குமரனுடனும், பாரி வேந்தன் பெற்றெடுத்த அங்கவை, சங்கவை போன்ற இரு பெண்களுடனும் குண்டுமாரிகளுக்கிடையே கோட்டையை விட்டு வெளியேறினார் அவ் வீர பத்தினி. இந்தச் சம்பவம் நிகழ்ந்த சில வாரங்களுக்குப் பிறகு செக்காரப்பட்டி

என்னும் ஊரில் ஒரு கவுண்டர் வீட்டில் மறைந்து வாழ்ந்த இவ்வம்மையாரைக் கைது செய்து சிறையிலடைத்தனர் கம்பெனியார். சிறையில் பிறந்த ஊமைத்துரையின் ஆண் செல்வத்துக்கு, கம்பெனிச் செல்வம் என்று பெயர் வைக்கப் பட்டது. பெற்றெடுத்த வீரத்தாயின் விருப்பப் படியல்ல; கம்பெனி வெள்ளையரின் கட்டளைப்படியே யாகும்.

## "என் சாமியைக் காப்பாற்று!"

கோட்டையிலிருந்து வெளியேறிய புரட்சிக் காரர்கள் வடக்கு நோக்கி விரைந்து சென்றனர். கர்னல் ஆக்னியூ ஒரு சிறிய வெள்ளைப் படையுடனும், எட்டயாபுரத்துப் படைவீரர் பலருடனும் புரட்சிக்காரர்களை விரட்டிச் சென்றான். மூன்று மைல் தூரத்திற்கப்பாலுள்ள ஒரு கிராமத்திற்குச் சென்றதும், புரட்சிக்காரர்கள் கம்பெனிப் படைகளை எதிர்த்து மீண்டும் கடுமையாகப் போர் புரிந்தனர். இந்தப் போரில் ஊமைத்துரையும் சிவத்தையாவுமே மற்ற வீரர்களைவிட அதிகமாகப் பங்கு கொண்டனர். இதன் விளைவாக ஊமைத்துரை உடலெங்கும் புண்ணுகிக் கை சோர்ந்து, மெய் சோர்ந்து உணர்ச்சியற்ற மரம்போலத் தரையில் சாய்ந்தான். தலைவனை இழந்த புரட்சி வீரர்கள் மேலும் போரிடச் சக்தியற்றவர்களாய் நாலா பக்கங்களிலும் சிதறியோடினர்.

இதற்குப் பின்னர் ஊரிலுள்ள பெண்கள் பலர் அந்தப் போர்க்களத்திற்கு வந்து, படுகாய மடைந்தும், செத்தும் கிடந்த தத்தம் உறவினரைத் தேடிப் பார்த்துத் தூக்கிச் சென்றனர். அவர்களில் ஒருத்தியின் மகன் பல பிணங்களுக்கு அடியில் சிக்கிக் கிடந்தான். அவனது தாய் மற்றப் பெண்களின் துணையுடன் மேலே கிடந்த பிணங்களை அகற்றி, மகனுக்கு மூர்ச்சை தெளிவித்தாள். அவனது உயிர் இப்பவோ பின்னையோ என்று ஊசலாடிக்கொண் டிருந்தது. கண்களைத் திறக்கக் கூட சக்தியற்றுக் கிடந்த அந்தக் காளைக்கு, "ஐயோ, மகனே!" என்ற அன்னையின் அலறல் காதில் கேட்டது.

ஈன்றாளின் குரல் கேட்டு அவன் கண்களைத் திறந்தான். திறந்த கண்கள் சுற்றுமுற்றும் சுழன்றன. தனக்குச் சற்று தூரத்தில் ஊமைத்துரை உணர்விழந்து உயிருக்கு மன்றாடிக் கொண்டு வீழ்ந்து கிடப்பதைக் கண்டான். அவன் மனம் பதைத்தது. தன் அன்னையையும் அருமைத் தலைவன் ஊமைத்துரையையும் மாறிமாறிப் பார்த்தன அவனது வீர ஒளி வீசும் கண்கள். மறுகணத்தில் அவன் தன் தாயைப் பார்த்து, "அன்னையே! என்னைப் பிழைக்க வைப்பதால் யாருக்கு என்ன பயன்? அதோ என் சாமி உணர்வற்று வீழ்ந்து கிடக்கிறார். அந்த வீரத் தலைவரைப் பிழைக்க வைப்பீர்களேயானால், வெள்ளையர் ஆட்சியை அவர் வேரறுப்பார். அவர் இறந்த பின்னர் யார்

வாழ்ந்து என்ன பயன்? அம்மா, சீக்கிரம் செல்லுங்கள்; பகைவர்கள் வந்தால் சாமியைக் கொண்டுபோய்விடுவார்கள். முதலில் சாமியைக் காப்பாற்றுங்கள்" என்று கூறினான். சிறிது நேரத்தில் அந்த வீரத் தமிழனின் மண்ணுலக வாழ்வு முடிவுபெற்றது! நொந்த மனத்தோடு மைந்தனின் கட்டளைப்படி ஊமைத்துரை இருககுமிடம் சென்று அவனை மற்றப் பெண்களின் துணையோடு தனது இல்லத்திற்கு எடுத்துச் சென்றாள் அந்த வீரத்தாய். அங்கு ஊமைத்துரையின் உடலி லிருந்த புண்களை ஆற்றச் சிகிச்சை செய்தாள். இந்த வேதனைக் காட்சியை அடுத்து, மற்றொரு வேடிக்கைச் சம்பவம் நிகழ்ந்தது.

பாஞ்சாலங் குறிச்சி கோட்டை கைப் பற்றப்பட்டு, புரட்சி வீரர்கள் விரட்டி யடிககப்பட்டனர் என்றாலும், கர்னல் ஆக்னியூவின் மனதில் அமைதி ஏற்படவில்லை. தப்பிச் சென்றுவிட்ட 2000 புரட்சி வீரர்களும் அவர்களது இணையற்ற தளபதி ஊமைத்துரையும் உயிர்வாழும் வரை கம்பெனி அரசு அபாயமின்றி வாழமுடியாது என்று எண்ணினான். ஆகவே, ஊமைத்துரையையும் அவனது புரட்சி வீரர்களையும் கண்டுபிடிக்குமாறு தனது படையினரை எட்டுத் திக்கிலும் ஏவினான். "கண்டுபிடிக்கும் புரட்சிக்காரர்களை, முடிந்தால் கைது செய்ய வேண்டும்; இல்லையேல், சுட்டுக் கொன்று பிணங்களையாவது கொண்டு வரவேண்டும்" என்று தனது படைகளுக்குக் கட்டளையிட்

டிருந்தான் கர்னல் ஆக்னியூ. கம்பெனிப் படையினர், வீட்டுக்கு வீடு சோதனை செய்து புரட்சி வீரர்களைத் தேடினர். இதையறிந்த வீரத் தாய் வேதனைகொண்டாள். தன் ஒரே மைந்தன், "அம்மா, என் சாமியைக காப்பாற்று" என்று போர்க்களத்தில் மரணப்படுக்கையிலிருந்து புகன்ற மொழி அவள் கவனத்திற்கு வந்தது எனவே, ஊமைத்துரையைக காப்பாற்றுவதற்கு ஒரு தந்திரம் செய்தாள். படுக்கையில் நினைவிழந்து கிடந்த அந்த வீரனின் உடலை, தலைமுதல் கால்வரையில் ஒரு வெள்ளைத் துணியால் மூடிவிட்டாள். பின்னர் அவளும், அவளோடு சேர்ந்த வேறு சில பெண்களும் ஊமைத்துரையின் இருபுறத்திலும்' அமர்ந்து ஒப்பாரி வைத்து அழலாயினர்.

புரட்சிக்காரர்களைத் தேடிவந்த கம்பெனிப் படையினர், ஒப்பாரி ஓசை முழங்கும் வீட்டையடைந்து நடந்ததென்ன வென்று வினவினர். அந்த வீட்டுப் பெரிய பிள்ளை அம்மை நோயால் செத்துவிட்டதாக அவர்களுககு அறிவிக்கப்பட்டது! இந்தச் செய்தியைக கேட்டதும் கம்பெனிப் படைவீரர்கள் திரும்பிப் பாராமல் ஓட்டம் பிடித்தனர். அம்மைநோய் என்றால் அந்தக் காலத்தில் அவ்வளவு பயம்! இதற்கு வெள்ளையரும் விதிவிலக்கல்ல வீரத்தாயின் அன்பு கனிந்த சிகிச்சையால் ஊமைத்துரையின் உடற்புண்கள் வெகு விரைவில் ஆறிவிட்டன. தனது உடல் நல்ல நிலை அடைந்ததும், தன்னைக் காப்பாற்றிய அவ்வம்மையாருக்கு

நன்றி கூறி மீண்டும் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு எதிரான புரட்சியில் ஈடுபடலானான் ஊமைத்துரை.

## முதற் கட்டம் முடிந்தது

பாஞ்சாலங்குறிச்சியில், மீண்டும் புரட்சிககாரர் கள் தலைகாட்டமுடியாத அளவுக்குக் கம்பெனியா ரின் கொடுங்கோல் கூத்தாடியது. எனவே ஊமைத் துரை, என்ன செய்வதென்று தெரியாமல் திகைத் தான். தன் தோழர்களில் இறந்தவர்களும், சிறைப்பட்டவர்களும், சோர்ந்துவிட்டவர்களும் போக மிச்சம் 200 பேர்கள்கூட அவனுக்கு அப் போது துணையாக இல்லை. இருந்தாலும், கட்ட பொம்மனின் தம்பி கலங்கவில்லை

அந்தச் சமயத்தில் சிவகெங்கை பாளையத்தின் அதிபதிகளாயிருந்த சின்ன மருது, பெரிய மருது சகோ தரர்கள் கிழக்கிந்தியக் கம்பெனியார்மீது பகைமை கொண்டிருந்தனர். இதையறிந்த ஊமைத்துரை, மருது சகோதரர்களின் துணைகொண்டு ஆங்கிலேய ரின் ஆதிக்கத்தை அழிப்பதென்ற திடமனதுடன் சிவகங்கை சென்றான். மருது சகோதரர்களும் ஊமைத்துரையை வரவேற்று, கம்பெனி ஆட்சி சியை எதிர்த்துக கலகம் செய்யத் துணைநின்றனர். அவர்களிடம் அப்போது சுமார் இருபதினாயிரம வீரர்கள் கொண்ட பெரும்படை இருந்தது. அவ் வீரர்கள் போர் புரிவதையே தங்கள் பரம்பரைத் தொழிலாகக் கொண்ட மறவர் குலத்தைச் சேர்ந்த வர்கள். ஊமைத்துரை - மருது சகோதரர்களின்

ஒற்றுமையால், புரட்சிக்காரர்களின் போர்க்களம் விரிவடையலாயிற்று. கம்பெனியாரின் கண்ணோட்டமும் பாஞ்சாலங் குறிச்சியை விட்டுச் சிவகெங்கை பக்கம் திரும்பியது. அதன் விளைவு? மற்றொரு பயங்கரப் போர்!

ஆனால், மருது சகோதரர்களின் துணை கொண்டு ஊமைத்துரை நடத்திய போர், நெடு நாட்கள் நீடிக்கவில்லை. வீரபாண்டியக கட்டபொம்மனைக் கொன்று பாஞ்சாலங் குறிச்சியைக் கைப்பற்றிய பிறகு கம்பெனியாரின் ஆதிக்கம், தென்னாட்டில் நன்கு வலுத்துவிட்டது. ஆகவே, மருது சகோதரர்களின் படைபலத்தைக் கொண்டு மட்டுமே கம்பெனிப் படைகளை வெற்றி காண்பது முடியாத காரியமாயிற்று. கம்பெனிப் படையினர் மருது சகோதரர்களையும், கட்டபொம்மனின் தம்பியரான சிவத்தையா, ஊமைத்துரை ஆகிய இருவரையும் சிறைபிடித்துவிட்டனர். மருது சகோதரர்கள் அவர்களது சொந்த நாட்டிலேயே, அதாவது திருப்பத்தூர் கோட்டையிலேயே தூக்கிலிட்டுக் கொல்லப்பட்டனர். சிவத்தையாவும், ஊமைத்துரையும், 1801-ம் ஆண்டு ஜூன் மாதம் 10-ந் தேதி பாஞ்சாலங் குறிச்சிக கோட்டைக்கு மேற்புறத்தில் உள்ள 'பீரங்கி மேட்'டில் தூககிலிட்டுக் கொல்லப்பட்டனர்.

பாஞ்சாலங்குறிச்சிப் பாளையப்பட்டாரில், வீரபாண்டியக் கட்டபொம்மனுககு மட்டும் சந்ததி ஏதுமில்லை. அவனது சகோதரர்களுக்குச் சந்ததி

கள் உண்டு. அவர்கள் செக்காரக்குடி என்னும் ஊரில் இன்றும் வாழ்ந்துவருகின்றனர். அவர்களுக்கு அரசாங்கத்தாரிடமிருந்து பணவுதவி கிடைத்து வருகிறது. இவர்கள் குடும்பத்தில் ஆண்மக்கள் பிறந்தால், மூத்தவனுக்குக் 'கட்டபொம்மன்' என்றும், இளைய மகனுக்கு 'ஊமைத்துரை' என்றும் பெயர் வைப்பது வழக்கமாயிருந்து வருகிறது.

'கம்பெனிச் செல்லம்' என்பாரின் மகன் ஜெகவீரபாண்டியத்துரை என்பான் (ஊமைத்துரையின் பேரன்) பாஞ்சாலங்குறிச்சி அரசைத் தன்னிடம் ஒப்படைக்கவேண்டுமென்று வெள்ளை அரசாங்கத்தார்மீது வழக்குத் தொடுத்தான். இந்த வழக்குக்காக அவன் சென்னை வந்திருந்த சமயம் நோய்வாய்ப்பட்டு இறந்துவிட்டான். ஜெகவீரபாண்டியத்துரை ஆறு மொழிகளில் புலமை பெற்றிருந்தான்.

பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டை இருந்த இடம் இன்று மண்மேடாகக் காணப்படுகிறது. கோட்டை பிடிபட்டதும் கம்பெனி அதிகாரிகள் அதை இடித்துத் தகர்த்து, வீரபாண்டியன் அரசாண்ட நிலத்தில் உப்பையும் ஆமணக்கு முத்தையும் போட்டு உழுதுவிட்டார்கள். பிடிபட்ட நாட்டில் வெற்றி பெற்ற வேந்தர்கள் இம்மாதிரி செய்யும் வழக்கம் பண்டைக் காலத்திலும் இருந்துவந்தது.

கயத்தாற்றில் வீரபாண்டியன் தூக்கிலிடப்பட்ட இடத்தில் பெரிய கற்குவியல் காணப்படு

றது. இந்தப் பக்கமாகப் போகிற மக்கள், வீர பாண்டியக் கட்டபொம்மனின் நினைவுக்கு அறிகுறியாக, அந்தக் குவியலின்மீது கல்போடும் வழககம் இன்னும் இருந்துவருகிறது. பாஞ்சாலங் குறிச்சி கோட்டை யிருந்த மண்ணில் மகத்துவம் இருப்பதாக மககள் இன்னமும் நம்புகின்றனர். குழந்தை பிறந்தால், பாஞ்சாலங்குறிச்சி கோட்டை மைதானத்திலிருந்து கொஞ்சம் மண் கொண்டு வந்து அதைத் தண்ணீரில் கரைத்து குழந்தையைக் குடிக்கவைக்கின்றனர் அதனல் அந்தக் குழந்தைக்கு உடலுறுதியும் நெஞ்சுறுதியும் ஏற்படுமென்பது அவர்கள் நம்பிக்கை.

பாஞ்சாலங்குறிச்சிப் பாளையப்பட்டின் வட பகுதியிலுள்ள எழுபத்தொன்பது கிராமங்களை எட்டயாபுரத்தாருக்கும், மற்ற இருபத்தைந்து கிராமங்களை மணியாச்சிப் பாளையப்பட்டாருக்குமாகக் கிழக்கிந்தியக் கம்பெனியார் தானம் செய்தனர்.

அடிமைகளுக்குப் பரிசுகள் வழங்கிப் பாராட்டுவதன் மூலந்தான் மேலும் மேலும் அடிமைகளின் எண்ணிக்கையை அதிகமாகக முடியும் என்பது ஆங்கிலேயரின் அரசியல் எண்ணம். அந்த எண்ணத்தின்படிதான் பாஞ்சாலங்குறிச்சியைக் காட்டிக் கொடுத்த எட்டயாபுரம், மணியாச்சி பாளையப்பட்டாருக்குப் பரிசுகள் தந்தனர்.

பாஞ்சாலங்குறிச்சி கோட்டை இருந்த இடத்தில் எவரும் எககாரணத்தை முன்னிட்டும் கட்டடம்

எழுப்பக்கூடாதென்று கட்டளையிட்டனர் கம்பெனி அதிகாரிகள். சுதந்தர வீரர்களின் ரத்தத்தைச் சுவை பார்த்த அந்த மண்ணில் கட்டடம் கட்டினால், அதில் குடியேறி வாழ்வோர்கூட 'கட்டபொம்மன்' களாகிவிடுவார்களென்ற அச்சமபோலும்!

பாஞ்சாலங்குறிச்சிப் போரில் புரட்சிக்காரர் களால் கொல்லப்பட்ட லெப்டினென்ட் காலின்ஸ் போன்ற பல ஆங்கில அதிகாரிகளுக்கு அங்கு நினைவுச் சின்னங்கள் நிறுவப்பட்டுள்ளன.

வீரபாண்டியக் கட்டபொம்மன் துவக்கிவைத்த விடுதலைப் போரின் முதற்கட்டம், ஊமைத்துரை யைத் தூக்கிலிட்டதோடு முடிந்தது.

## முடிவுரை

தமிழ் மக்களே, பாஞ்சாலங்குறிச்சியின் விடுதலைக்காக நடந்த வீரப் போர், இந்திய மண்ணில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நடந்த முதற் போராகும். ஆம், இந்திய சுதந்தரப் போரைத் துவக்கிவைத்த முதற்பெருமை நம் தமிழ் நாட்டுக்கே உரிமை உடையது. எட்டயாபுரம், புதுககோட்டை பாளையககாரர்கள், கட்டபொம்ம னுக்குத் துரோகம் செய்யாதிருந்தால், தமிழகத் தின் - ஏன், இந்தியாவின் - அரசியல் வரலாறே வேறுவிதமாக இருந்திருககும்.

வீரபாண்டியக் கட்டபொம்மனும் அவனது தம்பியரும் 1798-ம் ஆண்டு முதல் 1801-ம் ஆண்டு இறுதிவரை, அதாவது நான்கு ஆண்டுகள் கம்பெனி ஆட்சியை எதிர்த்துக் கடும்போர் புரிந்திருக்கின்றனர். அந்தப் போரில் வீரபாண்டியக் கட்டபொம்மனின் ஆட்சி அழிந்ததுமட்டுமல்ல ; அவனது குடும்பமே ஒழிந்தது. பெல்லாரி ஜில்லாவிலிருந்து தமிழகம் புகுந்த ஆந்திரரான ஆதிக் கட்டபொம்முவுக்கும் அந்தப் பரம்பரையின் இறுதி வேந்தனான வீரபாண்டியனுக்கும் இடைப்பட்ட காலம் 700 ஆண்டுகளாகும். இந்த எழுநூறு ஆண்டுகளிலே ஆதிகட்டபொம்மனின் பரம்பரை ஆந்திரப் பண்புகளிலிருந்து முற்றும் விடுபட்டு தமிழ்ப் பண்புகளை ஏற்றுத் தமிழரோடு தமிழராகவே கலந்துவிட்டது. எனவே, கட்டபொம்மன், தமிழகத்தையே தாயகமாகக் கொண்டு அதன் விடுதலைக்காக உயிர்த் தியாகம் புரிந்த தமிழ்வீரனுவான்.

தமிழகம் அவ்வீரனுக்கு வழிபாடு நிகழ்த்தத் தவறிவிட்டது. வீரவழிபாடு நிகழ்த்துவது எதற்காக ? மேலும் மேலும் பல வீரர்களைப் பெற்றெடுப்பதற்காகவேயாம். இதை மறத்தல் கூடாது

வீரபாண்டியன் தூக்கிலிடப்பட்ட இடத்தில் சரியான ஞாபகச் சின்னம அமைத்து, அதைப் புனித இடமாகப் **போற்ற வேண்டும்!**

இந்த வீரன் தூக்கிலிடப்பட்ட அக்டோபர் **16-ம்** **தேதியைத் தமிழகம முழுவதும் திருநாளாகக் கொண்டாட**

[illegible]
...போரின் துவக்க நாள் [illegible] அன்று தமிழர் [illegible]
[illegible] கொண்டாடவேண்டும்.

வீட்டுக்கு வீடு வீரபாண்டியனின் வரலாறு பரவ வேண்டும்.

ஊருக்கு ஊர் கட்டபொம்மன் கழகங்கள் தோன்ற வேண்டும்.

தமிழகமே! உனது அடிமையை அகற்றப் போரிட்டு மாண்ட அந்த ஆதிவீரனை மறவாதே!

வாழ்க வீரபாண்டியன் புகழ்!

மறைமலையடிகள் நூல் நிலையம்
MARAIMALAI ADIGAL LIBRARY
MADRAS

இன்ப நிலையம்

வெளியீடு